


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ........................................

அன்பளிப்புப் பிரதி:-

என் கலையைத் தெரிவிக்கவும் இதனைப் பற்றித் தங்கள் கருத்தை அறியவும்

அன்புடன்

செங்கை ஆழியான்

82, பிறவுன் வீதி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.... அந்த அழகிய
# பழைய உலகம்

✳

செங்கை ஆழியான்

✳

ரஜனி வெளியீடு

யாழ்ப்பாணம், இலங்கை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O முதற்பதிப்பு 1984. / மறு பிரசுரம் — ஒக்டோபர் 1988.
O (C) திருமதி கமலா குணராசா, 82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
O அன்பு பிறிண்டேஸ், யாழ்ப்பாணம்.
O தவம் / விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
O ரஜனி குஹநாதன் வெளியீடு, யாழ்ப்பாணம்.

விலை 8-50

O' ANTHA ALAKIYA PALAYA ULAKAM - A Noval.
Author : Sengai Aaliyan (Kandiah Kunarasa)
B. A. Hons (Cey.), M. A., S.L.A.S.
(C) Mrs KAMALA KUNARASA, 82, Btown Road, Jaffna
First Edition : 1984. Reprint : Oct. 1988.
Published By : Rajani Kuganathan.
Printed At : Anpu Press, Jaffna.
Cover Design : Baby Photo / Thavam /
Vivekananda Press, Jaffna
Price : 8/50.

விற்பனையாளர் :

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாவல் குறித்துத் ' தினகரன் ' வார மலரிலும், ' மல்லிகை ' இலக்கியச் சஞ்சிகையிலும் வெளிவந்த விமர்சனக் கருத்துக்கள் இப்பதிப்பின் முன்னுரைகளாக நன்றியுடன் வெளியிடப்படுகின்றன.

## முன்னுரை 1.

ஈழத்தின் புகழ்மிக்க நாவலாசிரியர் செங்கை ஆழியானின் ' ஒ அந்த அழகிய பழைய உலகம் ' என்ற புதியதொரு நவீனம்' ரஜனி வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ளது. ஈழத்தில் வெளிவந்த நாவல்களில் சற்று வேறுபட்ட கருப் பொருளையும் சமூக அணுகலையும் கொண்டதாக இந்த நாவலுள்ளது.

நகரப் புறத்தின் நவீன நாகரீக வாழ்வை வாழ்ந்து வெறுத்த கனகவடிவேலர் என்ற இஞ்சினியர், நவீன தொழில் நுட்ப அறிவியல் விருத்தி, மனிதனின் அமைதியையும், அழகையும் குறைத்து விட்டதென நம்புகிறார். இயற்கையோடு இணைந்த வாழ்வைக் கொண்டிருந்த பழைய உலகமே, மனித சாந்திக்கும் நிம்மதிக்கும் ஏற்றதென எண்ணுபவர், அவர், அந்தப் பழைய அழகிய உலகத்தைத் தேடிக் கிராமம் ஒன்றிற்கு வருகிறார்! அந்தக் கிராமத்தின் சூழல் அமைதி அவருக்குப் பிடித்துக் கொள்கிறது ஆனல் படிப்படியாக அந்தக் கிராமத்தை நகர்ப்புற நாகரீகக் கருவிகள் ஆக்கிரமிக்க பழைய உலகம் அழிகிறது. இந்தக் கருப் பொருளைச் செங்கை ஆழியான் தனது நாவலில் நன்கு காட்டியுள்ளார்.

செங்கை ஆழியானின் நாவல்களின் வெற்றிக்குப் பகைப்புல விபரணை ஒரு முக்கிய காரணமாகும் சாதாரண வாசகனுக்குப் பரிச்சயமில்லாத சூழலைக்கூட செங்கைஆழியான் தத்ரூபமாகத் தன் வார்த்தைகளால் கண்முன் நிறுத்திக் காட்டி விடுவார்- ஆற்றில் கதை மாந்தர் நடக்கும்போது கூடவே நாமும் நடப்பது போலவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சூழலின் இனிமையைச் சுவைப்பது போலவும் உணர்கின்றோம். காட்டினூடாகச் செல்லும் குளக்கட்டில் பயத்துடன் கனக வடிவேலர் ஓடும்போது நாமும் தனிமையின் பயப்பிராந்தியுள் வீழ்ந்து ஓடுகின்றோம்.. காடும் கழனியும். நதியும் குளமும் செங்கை ஆழியானின் இந்த நாவலில் கதை ஓட்டத்தோடு இணைந்த விபரணங்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன. கிராமத்தின் இனிமையை பரிச்சயமற்ற வாசகர்களுக்குத் தருகின்றன.

பழைமை மாறுவது தவிர்க்க முடியாத நியதி. நவீன தொழில் நுட்ப, அறிவியலின் சிறைக்கூடத்துள் மனிதர் கைதிகளாக வாழ்கின்றனர். யந்திரங்களின் வருகை, மனிதரின் நிம்மதியையும், அமைதியையும் மனிதஇயல்பையும் படிப்படியாகக் குலைத்து விடுகின்றன. அழிவுக் கருவிகள் மனித குலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகி வருகின்றன. இயற்கையோடு இயந்த வாழ்வை விட்டு மனிதர், இயற்கையை மாற்றி விடும் சிற்பிகளாக மாறி வருவது, பழைய இனிய உலகத்தினை நினைத்து ஏங்க வைத்து விடுகின்ற மெய்மையை இந்த நாவல் நன்கு சித்தரிக்கின்றது.

கனகவேலர் ஊடாகச் செங்கை ஆழியான் காட்ட விரும்பும் புதிய உலகு, எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது கேள்விக்குரியது. அண்மையில்கூட மகியங்கனை வேடுவத் தலைவர் திசகாமி. மகாவலித் திட்டப் பிரதேசத்தில் புதிய வாழ்வை ஏற்க மறுத்தமைக்குக் கூறிய காரணங்கள்: ''உங்கள் நாகரீக வாழ்வு மக்களைப் பழுதாக்கி விடும். குடியும் போதை வஸ்தும் சண்டை சச்சரவுகளும் எங்கள் அன்பான வாழ்வைச் சீரழித்து விடும்'' திசகாமி தனித்து நிற்க, ஏனைய வேடுவ மக்கள் புதிய நாகரீக வாழ்வின் சிறையுள் வீழ்ந்திருப்பது தவிர்க்க முடியாத நியதிதான் செங்கை ஆழியானின் 'ஓ அந்த பழைய அழகிய உலகம்' நாவலும் இத்தகைய ஒரு புதிய செய்தியைத்தான் பேசுகிறது.

செங்கை ஆழியானின் அனுபவ முதிர்ச்சியையும் ஆளுமையையும் இந் நாவலில் காண முடிகிறது. ஒரு கிராமத்தின் ஆத்மாவை சமகால சமூக அரசியல் பின்னணியில் அதன் பலத்தோடும், பலவீனத்தோடும் புரிந்து கொள்ள இந்த நவீனம் உதவுகிறது.

எஸ். சுப்பிரமணியம்

தினகரன்
மே, 1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை 2

செங்கை ஆழியானின் புதியதொரு நாவல் 'ஓ அந்த அழகிய பழைய உலகம்' ரஜனி வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ளது. இந்த நாவலில் செங்கை ஆழியான் கூறுவதற்குக் எடுத்துக் கொண்ட கருப் பொருளும் செய்திகளும் வித்தியாசமானவையாகவும், தத்துவார்த்தமானவையாகவும் இருக்கின்றன. இந்த நாவல் செங்கை ஆழியானின் ஏனைய நாவல்களில் இருந்து வேறுபடுவதற்கு இவையே காரணமாகும்.

செங்கை ஆழியான் நாடறிந்த பிரபல எழுத்தாளர். நல்லதொரு நாவலாசிரியர். இந்த நாவலில் இரு வேறுபட்ட களங்கள், முரண்பட்ட பாத்திரங்கள் என்பன ஒப்பீட்டு வகையாக விபரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. நகரப்புறங்களின் சந்தடி மிக்கதும் நவீன நாகரீகம் நிலைத்ததும், இயந்திரமயமானதுமான வாழ்வினையும், கிராமப் புறங்களின் அமைதியும் அழகும் இயற்கையோடு இணைந்ததுமான வாழ்வினையும் ஒப்பிட்டு இந்த நாவல் சித்திரிக்கின்றது.

இந்த நாவலில் வரும் கதா மாந்தரும் முரண்பட்ட இயல்புடையவர். வகை மாதிரிப் பாத்திரங்கள், நகர வாழ்வில் சந்தடி மிக்க யந்திர வாழ்வை வெறுத்து அமைதியான கிராமத்துக்கு வரும் கனக வடிவேலர்: அமைதியான கிராம வாழ்வை வெறுத்து நாகரீகமான நகர வாழ்வை விரும்பும் பெரிய கமக்காரர்: வறட்டு இலட்சியம் பேசாது இலட்சிய வாழ்வு வாழும் சீராளன்; முற்போக்குப் பேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பட சந்தர்ப்ப வாழ்வு வாழும் செல்வச் சந்திரன்: சமூக ஒழுக்க வேலிக்குள் வாழும் மயிலம்மை, அந்த ஒழுக்க வரம்பை மீறும் செல்லம்மா இப்படிப் பாத்திரங்களின் முரண்பட்ட போக்குகளைச் செங்கை ஆழியான் 'ஓ அந்த அழகிய பழைய உலகம்' நாவலில் தந்துள்ளார். அவ்வகையில் இந்த நாவல் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

செங்கை ஆழியானின் நாவல்களில் காணக் கூடிய தனித்துவ முத்திரைகளை இந்த நாவலிலும் காணமுடியும். கதை அம்சம், பகைப்புல விபரணை, புதிய செய்திகள், வகை மாதிரிப் படைப்பு, எளிமையும் இனிமையும் நிறைந்த நடை, சிந்திக்கத் தூண்டும் உரையாடல், என்பவற்றோடு, செங்கை ஆழியானின் இந்த நாவலில்' சமகால சமூக அரசியல் தத்துவ விசாரங்களும் இடம் பெற்றுள்ளன.

ஓய்வு பெற்ற பொறியிலாளர் கனகவடிவேலர்' நகரத்தினை வெறுத்து. அமைதியான வாழ்க்கையைத் தேடி அறுகு வெளிக் கிராமத்திற்கு வருகிறார். அங்கு அவருக்கு ஏற்கனவே பரிச்சயமான பெரிய கமக்காரரும், பெரிய விதானையாரும் தங்க வசதி செய்து கொடுக்கிறார்கள், இயற்கையோடு இணைந்து வாழும் கிராம மக்களின் அமைதியான வாழ்க்கை அவருக்கும் பிடித்துப் போகின்றது. யானையால் அடிக்கப்பட்டு வலுவிழந்த கணவனை பராமரித்து வரும் மயிலம்மை, பெண்கள் விடயத்தில் கரும் சபலம் கொண்டலையும் செல்வச் சந்திரன், அப்பாவியான முத்தையா ... ஆகியோர் அவருடன் பழகுகிறார்கள். கிராமத்தின் இயற்கை வாழ்வு படிப்படியாக குலையத் தொடங்குகின்றது. நவீன தொழில் நுட்பக் கருவிகள் கிராமத்திற்கு வருகின்றன கனகவடிவேலர் அக்கிராமத்தை விட்டுப் புறப்படுகிறார். இதுதான் கதை

செங்கை ஆழியானின் சில நாவல்களில் காட்டுக் கிராமங்கள் பகைப்புலமாக அமைவது குறிப்பிடத்தக்க அம்சமாகும் காட்டாறு, யானை, கனவுகள் கற்பனைகள் ஆசைகள், ஒருமைய வட்டங்கள் என்பன இத்தகைய பகைப்புலத்தைக் கொண்டன காட்டின் அழகும். கிராமத்தின் அமைதியும் அவரது நாவல்களில் சிறப்பாக சித்திரிக்கப் படுகின்றன, பகைப்புல விபரணை செங்கை ஆழியானின் நாவல்களில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. பகைப்புலத்தை கண்முன் நிறுத்துவதும் அப்பகைப்புல இயல்புகளை அறிவு பூர்வமாக முன் வைப்பதும் இந்த நாவலுக்கு சுவை சேர்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓ அந்த அழகிய பழைய உலகம்' நாவலில் புதிய செய்திகள் நிறையவுள்ளன. வெறும் கதை மட்டும் நாவல் அன்று. அதனூடே வாசகர்களுக்குத் தரும் தகவல்கள் ஒரு நாவலின் சிறப்புக்கு சுவை கூட்டுவன. காடு, படு திரவியங்களை மனிதன் சேகரிப்பதில் உள்ள நுட்பங்கள் வியப்பைத் தருகின்றன. அவற்றை செங்கை ஆழியான் விபரிப்பதற்கு கையாளும் உரை நடை எளிமையும் இனிமையும் கலந்தது படிப்பவனுக்கு களைப்பைத் தராது சிந்திக்கத் தூண்டுவது.

செங்கை ஆழியான் இந்த நாவலில் முன்வைக்கும் தத்துவ விசாரங்கள், பிரச்சனைக்கும் விவாதத்திற்கும் உரியவை 'மனிதனுக்குக் கல்வி அவசியமா?' என்று கனகவடிவேலர் கேட்கிறார். இயல்பான ஆசைகள் ஒழுக்க வரம்புகளில் சிறைவைக்கப்பட வேண்டுமா எனவும் கேட்கிறார். கிராமங்கள் நவீனப்படக் கூடாது என விரும்புகிறார். வானொலி, தொலைக்காட்சி, ஒலிபரப்பி முதலான நவீன கருவிகள் இயற்கை வாழ்வை சீரகுலைப்பன எனக் கவலைப்படுகிறார் கனகவடிவேலரைப் பொறுத்தவரையில் அவர் இவற்றை வாழ்ந்து சுவைத்தவர்: அவருக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் கால தேச வர்த்தமானங்களைக் கடந்த மாறுதல்கள் தடுக்கப்பட முடியாதவை. கிராமங்கள், நகரங்கள் ஆவதும், கிராமிய மக்கள் நாகரீகத்தின் பிடியில் தள்ளப்படுவதும் தவிர்க்கமுடியாதவை. நவீன சாதனங்களின் இனிமையையும். உதவிகளையும், அழிவுகளையும் தெரிந்து அனுபவிக்கும் உரிமை ஒரு பகுதி மக்களுக்குக் கிடைக்காது போவது இன்றைய உலகில் நியதியாகக் கூடாது. இந்த நாவலில் இருபக்க நியாயங்களும் எடுத்துக் காட்டப்பட்டுள்ள போதிலும் கனகவடிவேலரின் நியாயமே மேலோங்கி நிற்கின்றது. கிராமங்கள் கிராமங்களாகப் பாதுகாக்கப்படத்தான் வேண்டும். ஆனால் நவீன அபிவிருத்தியினதும் கருவியினதும் ஆக்கத்தையும் அழிவையும் கிராம மக்களும் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். அது மறுக்கமுடியாத கால நியதி, இவ்விடயங்களை செங்கை ஆழியான் தனது நாவலில் வற்புறுத்தியிருக்கலாம்.

எவ்வாறாயினும் செங்கை ஆழியானின் 'ஓ அந்த அழகிய பழைய உலகம்' நல்லதொரு நாவல். சமகால சமூக அரசியல் சிந்தனைகள் நிறைந்த நாவல்.

**தி. வேலாயுதபிள்ளை**

மல்லிகை
மே. 1985



நினைவில் என்றும்
அழியாது இனிக்கும்,
என் பெரியம்மா,
திருமதி இராசம்மா
சிவக்கொழுந்து
அவர்களின்
திருவடிகளுக்கு
இந் நாவல்
சமர்ப்பணம் !

செ. ஆ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'ஓ, அந்த அழகிய பழைய உலகம்' எனது ஏனைய நாவல்களிலிருந்தும் பலவிதங்களில் வேறுபட்டதொரு ஆக்கம் என்பது எனது கருத்து. எடுத்துக் கொண்ட கருவிலும், அதனைக் கூற நான் வரித்துக் கொண்ட மொழி நடையிலும் இந்த நாவல் வேறுபட்டதெனக் கருதுகின்றேன். மேலோட்டமாக இந்த நாவலைப் படிக்கும் போது தெரிவது, எனது நாவல்களில் தொனிக்கும் 'கதை அம்சம்' தான். கதையில்லாமல் கருத்துக்களைக்கூற நான் எப்போதும் விழைந்ததில்லை. கருத்துக்கள் மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டுமாயின், அதற்கு நாவல் என்ற இலக்கிய வடிவம் தேவையில்லை.

இந்த நாவலின் ஆத்மாவைத் தரிசிக்க சுவைஞரால் முடியுமா என்ற அவநம்பிக்கை இதனை எழுதி முடித்ததும் மிகுந்திருந்தது; நான் இந்த நாவலூடாகச் சமூகத்திற்குக் கூறுகின்ற செய்தியை — பிரதான அடிக்கருத்தை — வாசிப்பவர்கள் புரிந்து கொள்வார்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நம்பிக்கையீனமான நினைப்பு, எவ்வளவு தூரம் தவறானது என்பது இந்த நாவல் பற்றிய சுவைஞரின் கருத்துக்களால் அடிபட்டுப் போனது.

நாவல்கள் வெறும் கதையை மட்டும் கூறுவனவாக இருக்கக் கூடாது. அத்தோடு படிப்போனின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தகவல்களைக் கலாநயத்தோடு புரிய வைப்பனவாயும் இருக்க வேண்டும். மனித வாழ்வே தாங்கொணாச் சுமையாக மாறிவிட்ட இன்றைய உலகில், அச்சுமையை இறக்கும் மார்க்கத்தைக் காட்டுவனவாயும், அதற்குத் தடையாகும் கற்களை அகற்றும் திறனைத் தருவனவாயும் கலைஇலக்கியங்கள் அமைய வேண்டும், என்பது என்விருப்பு; நாம் நம்புகின்ற கொள்கைகளுக்கும் கற்று ஏற்ற தத்துவங்களுக்குமப்பால், ஓர் ஆக்க இலக்கிய கர்த்தாவின் படைப்பில் 'இலக்கியத் தேடல்' இருக்கவேண்டுமென்பது என் நோக்கு.

இந்நோக்குக்களை இலக்காகக் கொண்டு ஆக்கவிலக்கியப்படைப்புகளை நிர்மாணிக்கும்போது 'நமது சமூகம் இப்படி இருக்கிறது' என்ற ஆதங்கமான சித்திரிப்பிறேடு, 'நமது சமூகம் எப்படி இருக்க வேண்டும்' என்ற ஆரோக்கியமான சித்திரிப்பு அமைய வேண்டும்; அதுவே 'யதார்த்தமான நாவலின்' இலக்கணமாகும். எனது இலக்கிய இலக்குக்கள் 'ஓ, அந்த அழகிய பழைய உலகம்' என்ற இந்தச் சிறிய நாவலில் சென்றடையப்பட்டுள்ளன என நம்புகின்றேன்.

இந்த நாவல், சென்னையிலிருந்து வெளிவரும் முற்போக்குக் கலை ஏடான 'தாமரை'யில் தொடராக வெளிவந்தது; தொடராக வெளியிட்ட 'தாமரை' ஆசிரியருக்கும், நூலாக வெளியிட்ட ரஜனி குஹநாதனுக்கும் நன்றிகள்.

மேலதிக அரசாங்க அதிபர் (காணி)
கச்சேரி, கிளிநொச்சி.
25-10-88

— செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ செங்கை ஆழியானுடைய ஆக்கங்கள் நடைமுறைச் சமுதாய நடப்பியல்புச் சித்திரங்களேயாம். இவற்றின் மூலம் செங்கை ஆழியான் அவர்கள் தமது சமூகப் பார்வையைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். குறிப்பாகச் சமூகப்பொருளாதாரக் குறைபாடுகள், தலைமுறை இடைவெளிகள், நகரமயப்பட்ட வாழ்க்கை முறையிற் சிதைவுறும் கிராமியம், அழிந்து வரும் பாரம்பரியக் கலைமரபுகள், மண்ணோடியைந்த வாழ்க்கை முறை முதலிய பல்வேறு விடயங்கள் இவரது புனைகதைகளுக்குப் பொருளாக அமைந்தன. இவற்றின் மூலம் ஈழத்துத் தமிழர் சமுதாயத்தின் பதிவேடுகளெனத்தக்க பல படைப்புக்களை இவர் தந்துள்ளார். செங்கை ஆழியானுடைய கதை கூறும் முறைமையில் இரு வகைச் சிறப்புக்களை அவதானிக்கலாம். ஒன்று அவரது நுணுக்க விவரண முறை; இன்னொன்று சமூகத்தைப் படம் பிடித்து முன்னிறுத்தும் அவரது மொழிநடை.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர்,
கலாநிதி சு. வித்தியானந்தன் - காட்டாறு முன்னுரையில்

★ The recent Tamil novel "Kadal Kottai" written by Sengai Aliyan was a good example of neo-journalism. It was a new endeavour in the field of literature. It was a new literary form evolved recently in the western world and popularly known as neo-journalism

– **Prof. Dr. A. Sanmugathas**
The Island, 3rd April 1985

★ "ஒரு கையால் நாடித்துடிப்பைப் பார்த்துக்கொண்டு மறு கலயால் மருந்தை எழுதும் வைத்தியர் போன்றவர் செங்கை ஆழியான் மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்து பேனாவை நகர்த்துபவர். அந்தத்துடிப்பின் ஆக்கங்களே அவரின் நாவல்கள்.

— சித்திரன் சுந்தர். நடந்தாய் வாழிவழுக்கியாறு முன்னுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

* யாழ். இலக்கிய வட்ட வெளியீடுகள் :
  * நந்திக் கடல்
  * ஆச்சி பயணம் போகிறாள்
  * அக்கினிக் குஞ்சு
  * தீம்தரிகிட தித்தோம்
* வீரகேசரி வெளியீடுகள் :
  * வாடைக் காற்று
  * பிரளயம்
  * இரவின் முடிவு
  * காட்டாறு
  * கங்கைக்கரையோரம்
  * கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
* சிரித்திரன் வெளியீடுகள் ;
  * அலைகடல்தான் ஓயாதோ ?
  * சித்திரா பௌர்ணமி
  * முற்றத்து ஒற்றைப்பனை
  * இதயமே அமைதி கொள்
  * நடந்தாய் வாழி வழுக்கியாறு
* மாணிக்கம் பிரசுரம் :
  * கொத்தியின் காதல்
* ரேகா வெளியீடு :
  * செங்கை ஆழியான் கதைகள்
* வரதர் வெளியீடு :
  * யானை
* சுஜாதா பப்ளிக்கேஷன்ஸ் :
  * காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
* நியூ செஞ்சரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை :
  * ஒரு மைய வட்டங்கள்
* ரஜனி வெளியீடுகள் :
  * கிடுகுவேலி
  * ஓ, அந்த அழகிய பழைய உலகம்
* ஈழநாடு வெளியீடு :
  * கடல் கோட்டை
* மீரா வெளியீடுகள் :
  * மழைக் காலம்
  * மண்ணின் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியான்

எழுதிய

# ஓ........ அந்த அழகிய பழைய உலகம்!

ஆற்றின் வலது கரையோரமாக, மேற்குத்திசை நோக்கி, காட்டின் அடர்த்தியையும் அமைதியையும் கூறு செய்வதுபோல வளைந்தும் நெளிந்தும், ஏறியும் இறங்கியும், அகன்றும் ஒடுங்கியும் நீண்டுகிடந்த காட்டுப்பாதையில் கால்களைப் பதித்தபோது தான்தேடிய நிம்மதியின் தரிசனம் மனதில் மலரத் தொடங்கியதை கனகவடிவேலர் உணர்ந்தார். அந்த மணல் பாதையில் சிலகணங்கள் தரித்து நின்று, காடு தழுவிவரும்காற்றினை ஆழமாக உள்ளிழுத்துக் கொண்டார்.

பாதையின் இருமருங்கும் அடர்காடு மண்டிக்கிடந்தது. மனிதரின் கரங்கள் படிந்து கற்பழிக்கப்படாத கன்னிக்காடு. வானளாவிய மரங்களும், எவரும் உள்நுழைய முடியாதவாறு அடர்ந்து கிடந்த கீழ்நில வளரிப்பற்றைகளும், சலசலத்து மெல்லென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் ஆற்றின் இனிய ஜலதரங்க ஓசையும் அவருக்கு இயற்கை யின் கர்ப்பத்தினுள் சிசுவாகத் தான் இருப்பது போன்ற பிர மையைத் தோற்றுவித்தன.

மாலைச்சூரியனின் சாய்கதிர்களின் ஒளிக்கீற்றுக்கள் ஆங்காங்கு மரங்களினூடாக நுழைந்து பாதையில் திட்டுத்திட்டாகப் படிந்து கிடந்தன. காட்டுப்பறவைகள் சீராக சப்தித்து செய்தி பரிமாறின. இரவின் இருளில், காட்டுப்பாதையில் விலங்குகள் நின்றிருந்தமைக்கான அறிகுறிகள் தெரிந்தன. யானைகளின் லத்திக் கும்பல்களை பாதையில் கண்டபோது, அவரின் உள்ளம் தனிமைப் பயத்தின் உணர்வால் நடுக்குறுவதற்குப் பதிலாக, வியப்புற்றது.

இயற்கை எவ்வளவு அழகானது!

கனகவடிவேலர் காட்டுப்பாதையில் நிதானமாக நடந்தார். அரையில் வேட்டி, மார்பை மூடி அரைக்கையுள்ள பெனியன், தலையில் தலைப்பாகையாகச் சுற்றப்பட்ட சால்வை; தோளில் ஒரு சிறு சேலைப்பை. இவ்வளவும் தான் அவருடைய உடைமைகள். அவருடைய சேவைகளும், அவ்வளவுதான். பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஆதாரத்தில் அவருடைய வயதைக் கணித்ததில், இந்த மண்ணில் அவர் பிறந்து ஐம்பத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அவரைப் பார்க்கும்போது இயற்கை அவருக்கு நிர்ணயித்திருக்கும் வயதுத்தோற்றம் நாற்பத்தைந்து தான்.

வயதை நிர்ணயிப்பது காலமா!

இருபத்தைந்து வயது இளைஞன் ஐம்பது வயதுத் தோற்றம் கொண்டவனாகவும், ஐம்பதுவயது மனிதன் இருபத்தைந்து வயதுத் தோற்றம் கொண்டவனாகவும் அவர் கண்டிருக்கிறார். இருபத்தைந்து வயதில் ஐம்பது வயது வாழ்க்கையை வாழ்ந்து விரக்தி கொண்டவர்களும் இருக்கிறார்கள். ஐம்பது வயதிலும் இருபத்தைந்து வயது வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்பவர்களும், இருக்கிறார்கள்.

வாழ்ந்த காலம்தான் வயதின் பரிமாணம்.

ஒவ்வொரு நாளும் வயதின் கழிவை நினைவுபடுத்தும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்ற நவீனத்துவக் காகித அறிவிப்பு மனிதனைக் கிழவனாக்கத்தான் உதவுகிறது. அந்திமத்தின் நெருக்கத்தை ஓயாது நினைவுபடுத்தி உள்ளத்தின் இளமையையும் உடலின் உறுதியையும் குலைக்கத்தான் அதனால் முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் இளமையும் உடலில் உறுதியும் இருந்தால் அவன் என்றும் இளைஞனே, வாழவேண்டிய உலக இன்பங்கள் அவன் முன் விரிந்து கிடக்கும்.

காட்டுப்பாதையின் குறுக்கே காட்டுத் தடியொன்று முற்றிய சாரைப்பாம்பின் தடிப்பில் நெளிந்து கிடந்தது. கனகவடிவேலர் அதனைக் குனிந்து வலக்கரத்தால் எடுத்து ஊன்றிக் கொண்டார். அவரின் தோளின் உயரத்திற்கு அக்காட்டுத்தடி இருந்தது. மணல் பாதையில் தடி ஊன்றி நடப்பது இதமாக இருந்தது.

நிழல் படராத தார் வீதிகளில் அவர் நடந்திருக்கிறார், வெயிலின் தகிப்பில் செருப்பையும் மீறி, தார்ச்சூடு அவர் பாதங்களைத் தாக்கியிருக்கின்றது. நகரத்தின் சந்தடிகளிடையே சனநெருக்கடிமிக்க தார்வீதிகளில் நடக்கும் போது, மனம் நிழலுக்காக ஏங்கும். மின்கம்பங்களும், கொங்கிறீட் கட்டிடங்களும் நிழல் தரும் விந்தை இன்னும் நகரங்களில் நிகழவில்லை. நூற்றாண்டுகளாக இந்த நிழல் மரங்களை ஈவிரக்கமும் திட்ட ஒழுங்குமின்றி ஒரேநாளில் அவமே தறித்து வீழ்த்தி, இரவைப் பகலாக்க அவ்விடங்களில் மின்கம்பங்களை நட்டு. பகலைப்பாலைவனமாக்கிய நவீனத்துவத்தின் இராச்சதக்கரங்கள் படியாத அந்தக் காட்டுப்பாதையில் நடக்கும்போது உடலும் உள்ளமும் தளிர்ந்தன.

இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தது போன்ற உணர்வு. கோரச்சிறையின் அடிமைத் தளையிலிருந்து, விடுதலையாகி சுதந்திர மண்ணில் வீழ்ந்ததுபோன்ற உணர்வு.

அந்தக்காட்டுப்பாதை, பரந்த ஒரு வெளியில் ஏறி, அதனூடாகச் சென்றது. அந்த வெட்டவெளியில் காட்டு எருமைகள் சில மேய்ந்து கொண்டிருந்தன. ஆட்காட்டிக்குருவியொன்று மனிதனின் வருகையைக் கண்டு காட்டை எச்சரித்தது. காட்டெருமைகள் தலையை நிமிர்த்தி காற்றை முகர்ந்து எச்சரிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டு, காட்டிற்குள் விரைந்து மறைந்தன. கனகவடிவேலர் குழந்தையாகி காட்டெருமைகள் புழுதியைக் கிளப்பியபடி ஓடிமறைவதைப் பார்த்து நின்றார்.

வானம் தெளிவாக இருந்தது.

தூரத்தில் குரங்குகள் கிளைதாவிச்செல்வது தெரிந்தது. காட்டுக்கோழிகள், மண்ணைக்கிளறிப் பூச்சிபுழுக்களைத் தேடின. மரங்களின் கிளைகளில் பறவைகள் சிலவற்றின் கூடுகள் தெரிந்தன வெண்மலர்களாக கொக்குகள் கூட்டமாக ஒரு மரத்தில் அமர்ந்திருந்தன. அருகில் எங்கோ குளம் இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கொக்குகளிடையே, அந்த மரத்தின் உச்சாரக் கொப்பரில் குடிசை ஒன்றை அமைத்து வாழ்ந்தால் எப்படியிருக்கும்? மனித மூதாதையர்கள் இப்படிப்பட்ட காடுகளிடையே தான் வாழ்ந்திருக்கிருர்கள், இயற்கையின் குழந்தைகளாக வாழ்ந்த அவர்களின் இனிய வாழ்வின் முடிவு நாகரீகவளர்ச்சியின் படிகளாகி, இன்று இயற்கையை அழித்து புதியதொரு செயற்கைச் சூழலின் கைதிகளாக மனிதரை வாழ வைத்துள்ள கொடுமைப் படியிலிருந்து விடுபடத்துடிக்கும் ஆவேசம் அவரின் நடையில் தெரிந்தது.

மனிதர்கள் குவிந்துவாழும் கொங்கிரீட் கட்டிடக்காடு நகரம் என்ருல் காட்டுவிலங்குகளும், நூற்றுக்கணக்கான பறவைகளும், ஆயிரக்கணக்கான ஊர்வனவும் வாழும் இந்த அடர் மரக்கானகமும் நகரம் தான்!

வெட்டவெளி கடந்ததும், காட்டுப்பாதை மீண்டும் தெளிவாகத் தெரிந்தது. ஆற்றின் சலசலப்பும் அருகில் கேட்டது. கனகவடிவேலர் ஆற்றில் இறங்கி, இருகைகளாலும் நீரை அள்ளிப் பருகினர். ஆற்றின் நீர் கலக்கலின்றி தெளிவான பளிங்கு போல ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின்படுக்கையில் நீரோட்டத்தால் புரட்டி வரப்பட்ட பாறைகள் ஆங்காங்கு கிடந்தன. அப் பாறை ஒன்றில் ஏறி அமர்ந்தபடி, கண்களை மேயவிட்டார்.

நீரின் சலசலப்பொலியையும் காட்டிற்கேயுரிய உயிரினங்களின் சரசரப்பொலியையும் விட நிசப்தமே நிலவியது. யானைகளின் பிளிறலும், காட்டெருமைகளின் கதறலும், நரிகளின் ஊளையுமாகக் காடு அமைதியிழந்து கிடக்கும் என யாராவது எண்ணிஞல் அது தவிட மடத்தனம் வேறில்லை. அவர் அவ்விடத்தின் நிசப்த அமைதியை இரசித்தார். அவர் காதுகள் இயற்கையின் இனிய குரல்களைக்கேட்டு எத்தனை ஆண்டுகள்?

நகரத்தின் பிரதான வீதியொன்றில் அவருடைய வீடு அமைந்திருந்தது. வாகனங்களின் ஓயாத இரைச்சல் என்றும் கேட்டுக்கொண்டேயிருக்கும். யந்திரங்களின் கடூர சப்தங்களும் ஹோர்ண் ஒலிகளும் காதுப்பறைகளின் நிரந்தர மோதல்களாகி அமைதியை இழக்கச் செய்திருந்தன. இடையிடையே தண்டவாளங்கள் படபடக்க விரைந்து செல்லும் புகையிரதங்கள் வேறு. இருபத்திநான்கு மணிநேரமும் அவர் வீட்டின் முன்னுள்ள ஹோட்டல் ஒன்றில், சினிமாப்பாடல்களை ஓயாது பாடித்தள்ளும் ஒலிபரப்பிகளின் தாக்குதல் நிலைத்திருக்கும். நகரின் எப்பகுதிக்குச் சென்ருலும் சப்தங்களே மேலோங்கி, அமைதியை ஜீரணித்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தங்களின் பிறப்பே நகரங்களின் ஆக்கம்.

சப்தங்களின் வியூகத்தினுள் அகப்பட்டுக்கொண்ட ஆதங்கம் அவரைப் பலவேளைகள் பதறவைத்திருக்கின்றன. நவீன கண்டு பிடிப்புகளின் இரைச்சல் நகரத்தை மூடிக்கவிந்திருக்கும்போது அமைதியின் இழைகள் அங்கு நுழைய வழியில்லை என்பதை அவர் புரிந்து கொண்டார்.

அப்பாடா, இந்த ஆற்றங்கரைக் கல்லில் அமர்ந்திருப்பது தான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! அப்படியே இந்தப் பாறையில் சுருண்டு படுத்து துயின்று எழுந்தால் எவ்வளவு நிம் மதியாக இருக்கும்?

ஆற்றுமந்திகள் கிளைதாவலால், சூழலின் நிசப்த அமைதி கலைந்தது. அவர் எழுந்து காட்டுப் பாதையில் மீண்டும் ஏறி நடக்கத்தொடங்கினார். காட்டுப்பாதை பரந்த வயல்வெளியில் சென்று முடிவடைந்தது. அறுவடை முடிந்து, வயலில் தாது கோபங்களாகச் சூடுகள் வைக்கப்பட்டிருந்தன. பொன்னிறக் கதிர்கள் நெல்மணிகளைக் கொண்டு பருத்திருப்பது தெரிந்கது. மனிதரின் உழைப்பின் பயன் சூடாகக் குவிந்து கிடந்தது. இயற் கையன்னை மனிதரின் முயற்சிக்கு வழங்கிய பரிசு.

வயல்வெளியையும் அதில் ஆங்காங்கு குவித்து வைக்கப்பட் டிருக்கும் அறுவடைக் கதிர்களையும் பார்த்தபடி கனகவடிவேலர் நின்றிருந்தார். நகரத்தில் வயல்வெளிகளும் தோட்டக்காணிக ளும் வீடுகளாக மாறிவருகின்றன. உணவுதரும் நிலங்களைக் கல்கட்டிடங்கள் ஆக்கிரமிக்க, மனிதன் கொட்டில்களை நிரப்பிக் கொண்டு, துறைமுகங்களை பார்த்துக் காத்திருக்கின்றநிலை உரு வாகிவிட்டது.

அவர் நீண்டநேரம் அவ்வாறு நின்றிருந்தார். அடிவானில் பறவைகள் தாளலயத்தோடு பறந்தன. செம்பருந்தொன்று, வய லில் துள்ளிஓடிய எலியை இலக்குத் தவறாது அம்பெனத் தாழ்ந்து கூர்நகக்கால்களால் பற்றித் தூக்கிச் சென்றது. காய்ந்த வைக்கல் மணத்தோடு தவழ்ந்து வந்த மென்வழியை ஆழமாக இழுத்தும் சுவாசித்தபடி திரும்பியபோது. அவர் அருகில் அவரை அடங்கா வியப்புடன் பார்த்தபடி ஒருவன் நின்றிருந்தான்.

வலக்கரத்தில் ஊன்றுகோல் ஒன்றைப் பற்றியபடி, தலையில் சால்வை தலைப்பாகையாகச் சுற்றப்பட்டிருக்க, ஒருகாலை வரம் பில் தூக்கிவைத்தபடி அவர் நின்றிருந்த கோலம் அவனுக்கு வியப்பைத் தந்தது. உடைமட்டும் காவியாக இருந்திருந்தால் ''சாமி'' என்று கும்பிட்டிருப்பான். முகத்தில் தாடி மீசை நீண்டிருந்தால் பாதங்களில் பணிந்திருப்பான். அவன் விழிகளில் தெறித்த வியப்பின் கேள்வியை கனகவடிவேலர் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கிராமத்தின் மகன்; இந்த மண்ணின் மனிதன் அரையில் மண்காவி ஏறிய வேட்டியும், தோளில் சிறியதொரு துவாய்த் துண்டுமாக அவன் நின்றிருந்தான். தலையை வாரிக் கொண்டையாக முடிந்திருந்தான். ஆங்காங்கு நரைமயிர்களின் கோடுகள் தெரிந்தன. பல நாட்களாகச் சவரம் செய்யப்படாத முகத்தில் மயிர்கள், அறுவடை செய்யப்பட்ட வயலின் நெல் அடிக்கட்டைகளாகக் குத்திட்டு நின்றன. கரிய அவனுடலின் முறுகிய திரட்சி, கடும் உழைப்பின் ஆரோக்கியத்தைப் பறை சாற்றியது.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர். பிரதிபலன் எதிர்பாராத அறிமுகச் சிரிப்பு அது.

''ஐயா பட்டினத்திலிருந்து வாறிங்களா?'' என்று அவன் கேட்டான். கனகவடிவேலர் மெதுவாகத் தலையை அசைத்து ஆமோதித்தார்.

''கிராமத்துக்குப் போறிங்களா? ஆரைப் பார்க்கப் போறிங்க...?''

''கிராமத்தைப் பார்க்கப் போறன்...''

அவன் கனகவடிவேலரை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தான். விழிகளில் சந்தேகத்தின் குறிகள் தெரிந்தன. ''யாரோ பைத்தியமோ?'' என எண்ணமிடுமாப்போல அவன் பார்வை தெரிந்தது.

''அறுகுவெளியில பார்க்கிறத்துக்கு என்ன இருக்குது...குளம் வெளி, காடு, வயல், மாடு கன்று, மனிசர்... பிள்ளையார் கோயில் இவ்வளவு தான்! இதைப் பார்க்கவா பட்டினத்திலிருந்து வாறிங்க...?''

''அமைதியையும் மனிதர்களையும் தேடி வருகிறேன், அப்பா' என்று கூற அவர் விரும்பினர்; ஆனல் வார்த்தைகளை தொண்டைக்குள் அடக்கிக் கொண்டார். இந்தக் கிராமத்து மனிதனை வார்த்தைகளால் பயப்படுத்தக் கூடாது.

''உன் பெயர் என்ன?...''

''முத்தையாங்க...... ஐயா யாருங்க?

அவர் சிரித்தார், வயல் வரப்பில் ஏறி வெகுதூரத்தில் தெரியும் அறுகுவெளிக் கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். முத்தையா அவரைத் தொடர்ந்து நடந்தான்.

''பெரியவிதானையார் இப்பவும் இருக்கிறரா? என்று கனக வடிவேலர் வரப்பில் சிறிது தரித்து நின்று கேட்டார்.

''சுப்பிரமணியத்தாரா...? இருக்காருங்க. அவரைத் தெரியுமா? சொந்தக்காரங்களா? அடிக்கடி அறுகுவெளிக்கு வந்திருக்கிறீங்கள் போல இருக்குது...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையா சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டான்.

''பத்துப்பன்னிரண்டு வருடங்களுக்கு முதல் அடிக்கடி இக்கிராமத்துக்கு வந்திருக்கிறன். முத்தையா! அறுகுக் குளத்தின் அணையை உயர்த்தி, பெருப்பித்தபோது இந்தப்பகுதிக்கு பொறுப்பாக நான் இருந்தேன். நான் ஒரு ஒய்வுபெற்ற இஞ்சினியர்... இப்ப சிறுபோகத்திற்குக் குளத்தில் தண்ணீர் இருக்கும் என்று நினைக்கிறேன்...''

முத்தையாவின் பார்வையில் மிகுந்த மரியாதை குடிகொண்டது. தோளில் கிடந்த சால்வைத் துண்டைக் கரத்தில் எடுத்துக் கொள்ள முயன்ஞன். கனகவடிவேலர் அவன் கரத்தைப் பற்றித் தடுத்தார்.

''சிறு போகஅறுவடை முடிந்தும், குளத்தில நான்கடி தண்ணீர் இருக்குது ஐயா... குளம், திருத்திய பிறகு ஆறெழு வரியமாக வேளாண்மை பிழைக்கவில்லை. ஆஞ கிராமம் தான் மிகவும் கெட்டுப் போச்சுது...''

கனகவடிவேலர் அவனைக் கலக்கத்துடன் பார்த்தார். அவன் தொடர்ந்தான்.

''கிராமத்தில் கள்ளச் சாராயம் காச்சிருங்க... அடிபிடி சண்டை கூடி விட்டது. உங்களுக்குச் சொன்னல் என்ன, ஒழுக்கம் குறைஞ்சிட்டுது; பெரியவங்களெண்டு ஒரு மரியாதையில்லை...

கனகவடிவேலரின் உதடுகளில் புன்னகை விரிந்தது. மௌனமாக நடந்தவாறு, ''பெரிய விதானையார் தான் கிராமசேவகரா?...'' என்று கேட்டார்.

முத்தையா, வரம்பை விட்டுக் கீழிறங்கி வயலூடாக அவர் பக்கத்திற்கு வந்தான்.

''அவர் இப்ப விதானையாயில்லை... ஆரோ ஒரு புதுப் பொடியன் விதானையாக வந்திருக்கிறன். பட்டினத்துப் பையன் தான்... ஊளர் இரண்டுபட்டதற்கு இந்தப் புதுவிதானையும் ஒரு காரணம் தான்...''

தூரத்தில் கிராமம் புலப்படத் தொடங்கியது. ஓலைக் குடிசைகளும் பனை, தென்னை மரங்களும் மங்கலாகத் தெரிந்தன. அவர்கள் நடந்து வந்த காட்டுப்பாதைதான் அறுகுவெளியின் பிரதான பாதை அது அறுகுக்குளம்வரை சென்று முடிந்தது.

அறுகுவெளி ஓர் அழகான கிராமம்; சலம்பை நதியின் கரையில் அக்கிராமம் அமைந்திருந்தது. ஆறுதலைமுறைகளை அக்கிராமம் கண்டிருப்பதாக கூறிக் கொண்டார்கள். அக்கிராமத்தில் ஓங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்திருக்கும் பனை விருச்சங்கள் அதனை நிரூபித்தன. கருங்கா ளியாக அக்கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் பிள்ளையார் கோயில் அக் கிராமத்தின் நூற்றுண்டுப் பழமையை எடுத்தோ தியது.

தூரத்தில் வரும்போது பிள்ளையார் கோயில் கலசம் தெளி வாகத் தெரிந்தது, குடிசைகள் நடுவே மூன்று நான்கு கல்கட்டி டங்களும், ஓட்டுக் கூரைகளும் தெரிந்தன. கட்டாக்காலி மாடுகள் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக மேய்ந்தன. வேம்பு, அரசு முத லான மரங்கள் பாதையோரங்களில் சடைத்து வளர்ந்து நிழலைப் பரப்பரப்பிக் கொண்டிருந்தன. கிராமத்தை நெருங்கிய போது அக்கிராமத்தின் செழிப்புப் புரிந்தது. குடிசை வீடுகளைச் சுற்றி காய்கறித் தோட்டங்கள் அமைந்திருந்தன. தென்னைகள் காய் களுடன் நெடிது வளர்ந்திருந்தன.

"கிராமம் வளமாக இருக்கிறது..." என்றுர் கனகவடிவேலர்.

"இந்த வரியம் வேளாண்மை எல்லாருக்கும் வாய்ச்சிருக் குது... பன்றியளும் யானைகளும் பயிரை இந்தமுறை கனக்க அழித்துவிட்டன. கிராமத்தில் ஒருதரிடமும் துவக்கு இல்லை. ஒரு நாள் ஜீப்பில் பொலிசார் வந்தினம். எல்லாற்றை துவக்கையும் எடுத்துக் கொண்டு போனுர்கள். துவக்கு இருந்தால் ஆரோ பொடியள் பறித்துக் கொண்டு போய்விடுவான்கள் என்றுர்கள்! ஆனுல் இப்ப பயிர் செய்யமுடியவில்லை. குடலையாக இருக் கேக்கை பன்றியள் பயிரைச் சப்புகின்றன! பயிரானதும் யானை யள் விடுகுதுகளில்லை. நேற்றிரவு கூட கயிலாசரின் சூட்டைத் தள்ளி யானைகள் தின்றுவிட்டது... கிராமத்தில் ஒரு மாம்பிஞ்சு மரத்திலில்லை. கூட்டம் கூட்டமாகக் குரங்குகள் வந்து கிளை யோடை முறிச்சுக் கொண்டுபோய் விடுகின்றன... இப்ப கிராமத் தில் சீவிப்பது பெரிய கஷ்டம் ஐயா..." என்றுன் முத்தையா.

கோயில் கிணற்றில் பெண்கள் பலர் தண்ணீர் அள்ளிப் பானை களில் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். அவரை அவர்கள் நிமிர்ந்து பார்த்துவிட்டு தங்களுள் ஏதோ பேசிக் கொண்டார்கள். 'களீர்,' என்ற சிரிப்பொலி கிணற்றடியில் எழுந்தது.

"பெரிய விதானையாற்ற பொடிச்சி லச்சுமி கிணற்றடியில் நிக்குது... அதுதான் சிரிக்குது. சரியான வாயாடி..." என்று முத்தையா கூற கனகவடிவேலர் கிணற்றடியைப் பார்த்தார். பெரிய விதானையாரின் மகளை அவரால் அடையாளம் காணமுடிய வில்லை.

பனைநாரினுல் முறுக்கப்பட்ட கயிற்றையும், பனையோலைப் பட்டையையும் கொண்டு அவர்கள் கிணற்றில் நீரை அள்ளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடங்களில் நிரப்பினார்கள். பட்டையால் நீரை மொண்டு குடங்களில் ஊற்றிய வேகம் அவருக்கு வியப்பைத் தந்தது.

அவர் வீட்டில் கிணறு இருக்கின்றது. மிக ஆழமான கிணறு ஒருவாளி தண்ணீரை அள்ளி உடலில் ஊற்றிவிட்டு மறுவாளி அள்ளுவதற்கிடையில் உடம்பு காய்ந்துவிடும். அவர் அறியத்தக்கதாக அவர் பிள்ளைகள் கிணற்றில் நீரள்ளிய சம்பவம் நினைவிலில்லை. குழாயைத் திறந்ததும் சீறியடித்துக் கொண்டு நீர் பாயும். 'பாத்'ரூமில் 'பேசினை' நீராய் நிரப்பிவிட்டு, அள்ளிக் குளித்துப் பழகிவிட்டவர். கிணற்றுக்கும் உடலிற்குமிடையில் எத்தனை இடைவெளி? நவீனத்துவ வழிமுறைகள் பிரித்துவைத்து விட்டன. மனிதனின் மூளைவளர்ச்சி அவனை சோம்பேறியாக்கி வருகின்றது.

அடடா. பனையோலைப்பட்டைகள் இருக்கும்போது 'பிளாஸ்டிக்'' பேசின்கள் ஏன்? ஒரு சிறுதுளி நீர்கூடக் கீழே ஒழுகாதவாறு எவ்வளவு அற்புதமாக இழைத்திருக்கிறார்கள்? மேலே செல்லச் செல்ல, மிளகாய்க் கன்றுகளுக்கு நீர்வார்க்க பனையோலைப் பட்டைகளைப் பயன்படுத்துவதைக் கண்டார்.

"ஐயா, என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று இருந்தாற் போல முத்தையா கேட்டான். கனகவடிவேலர் அவனைப் பார்த்தார்.

கிராமத்தினுள் வந்தாயிற்று. கிராமத்தின் எளிமையும் செழிப்பும் மனதில் ஆழப்பதிந்து, நகரத்தின் ஏமாற்றங்களையும் துயரங்களையும் அழுக்கிவிட்டன போன்ற உணர்வு. அவற்றை மறக்கத்தான் அவர் அறுகுவெளிக்கு வந்தார்.

"இதுதான் என்வீடு, ஐயா......'' என்றான் முத்தையா. ஓலைக் குடிசை; பனைமட்டையால் வரியப்பட்ட சுவர்கள்.

"இங்கு ஏதாவது வீடு வாடகைக்கு கிடைக்குமா, முத்தையா

''ஐயா......'' என்று வியப்புடன் அவன் கூவினான். இந்தக் கிராமத்தில் தங்கிவிடப் போகிறீர்களா?

''சிலகாலம் தங்கலாம் என்றிருக்கிறேன்''

பட்டினத்தார்களுக்கு ஏற்ற வீடுகள் இங்கு இல்லை. மூன்றே மூன்று ஓட்டு வீடுகளே கிராமத்திலுள்ளன. ஒன்று பெரிய கமக்காரர் மயிலர் உடையது. மற்றையது பெரிய விதானையார் வீடு அடுத்தது பிள்ளையார் கோயில் மடம்... நீங்கள் விரும்பினால் மடத்தில் தங்கலாம்...''

கனகவடிவேலர் புன்னகைத்தார். பெரிய மாளிகையில் மின் விசிறிகள் செயற்கையான காற்றை வாரிவழங்க, திருடருக்குப் பயந்து யன்னல்களை இறுகமூடி, ஆர்ப்பிக்கோ மெத்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த உடம்பு. மண்ணிற்கும் உடம்பிற்குமிடையில் பிணைப்பற்ற வெளி. அதெல்லாம் வெறுத்தாயிற்று. ஓலைக்குடிசையில், வரிந்த பனைமட்டை நீச்சல்களூடாக இயற்கையான வளி உள்நுழைய சாணியால் மெழுகிய மண்தரையில் பனையோலைப்பாயில் கிடக்க அவர் விரும்பினார்.

"எனக்கு ஒரு குடிசை வேண்டும்..."

முத்தையா பெரிதாகச் சிரித்தான்.

"குடிசை கட்டி வாடகைக்கு விடும் பழக்கம் இங்கு இல்லை ஐயா... வேண்டுமானால் நீங்களாக ஒருகுடிசை போட்டுக் கொள்ள வண்டியது..."

"நிலம்...?"

"ஐயா, நீங்கள் எவ்வளவு படித்தவர். இஞ்சினியர் ஐயே இந்தக் குக்கிராமத்தில் குடிசையில் வாழ்வதா? பகிடி விடுகிறீா கள் போல் இருக்குது..."

"மெய்யாகத்தான் முத்தையா... பட்டின வாழ்க்கை அலுத்து. பவிட்டது. யந்திரமயமான செயற்கை வாழ்வை வெறுத்து இந்த அழகிய கிராமத்துக்கு வந்திருக்கிறேன்! என் பென்சன் காலததை யாவது இயற்கை வாழ்வாக வாழ்ந்து முடித்திட விரும்புகிறேன்...

முத்தையா அவரை வியப்புடனும் கவலையுடனும் பார்த்தான்

"படித்த உங்களால் இந்தக் கிராமத்தோடு ஒத்துப்போக முடியாது, ஐயா"

அவர் சிரித்தார்.

"சரி வாங்கோ... பெரியகமக்காரரைப் பார்த்துப் பேசுவோம் இஞ்சினியர் ஐயா..." என்றான் முத்தையா.

★

சலம்பை ஆற்றின் கரையிலிருந்து நூறுயார் தூரம் விலகி கிராமத்தின் வடகோடியில் அமைந்திருந்த கரும்பாலைப்புலவு கனக வடிவேலருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆற்றின் கரையோரமாக அறுகுவெளிக் கிராமங்கள் புலவுக்காணிகளை வெட்டி வைத்தி ருந்தனர். நெல் வேளாண்மை முடிந்ததும், ஆற்றுநீரை இறைத்து மிளகாய், காய்கறிகளைச் செய்கை பண்ணுவதற்கு இக்காணிகள் உதவின.

கரும்பாலைப்புலவு என்று சொல்லப்படும் காணி ஏறத்தாள பயிற்பது ஏக்கர் பரப்பினைக் கொண்டது. பெரியகமக்காரர் மயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்திற்குச் சொந்தமானது. பெயருக்குப் பொருத்தமாக அந்தப் புலவின் எல்லைப்புறங்களில் உயர்ந்து வளர்ந்து மசாலித்த பாலைமரங்கள் நின்றிருந்தன. காட்டுமரங்களையும் அலம்பல்களை யும் கொண்டு கரும்பாலைப்புலவின் எல்லைகள் வரையறுக்கப் பட்டு அடைக்கப்பட்டிருந்தன.

அந்தப் புலவினுள் பெரியகமக்காரரின் வயல்களிலும் தோட் டங்களிலும் வேலைசெய்யும் கூலியாட்களில் ஆறு குடும்பங்கள் குடிசை போட்டு வாழ்ந்து வந்தனர். அந்தப் புலவுக் காணியுள் பிரவேசிக்கும் வாசல்புறத்தை அடுத்து பெரிய கமக்காரர் ஓரளவு வசதியான பெரியதொரு குடிசையை அமைத்திருந்தார். பெரிய தொரு அறை, அகன்ற விறுந்தை, காற்றோட்டமாக பெரியதொரு தலைவாசல் (மடுவம்) என்பன எளிமையாயும் துப்புரவாயும் அமைந்திருந்தன. தென்னங்கீற்றுக்களால் வேயப்பட்டு, சீமெந் துத்தரையையும், மண் சுவர்களையும் கொண்டிருந்தது.

முத்தையா வீட்டைக்கூட்டித் துப்பரவு செய்யும்போது கனகவடிவேலரைப் பார்த்துச் சிரித்தான்.

'பெரிய கமக்காரர் நீங்கள் கேட்டதும் மறுபேச்சுப் பேசா மல் இந்த வீட்டைத் தந்து விட்டார். இஞ்சினியர் ஐயாவை அவருக்கு முதலே நல்லாத் தெரிந்திருக்கிறது. நல்ல பழக்கம் போல இருக்குது...''

''உங்கட அறுகுக்குளத்தை உயர்த்திக் கட்ட வேண்டு மென்று விடாப்பிடியாகத் திரிந்து செய்வித்தவர் மயில்வாகனத் தார் தான் முத்தையா...''

கனகவடிவேலரை, பெரிய கமக்காரர் மயில்வாகனம் கண் டதும் அடையாளம் கண்டுகொண்டார். உத்தியோக தோரணை யில் லோங்ஸ் சேட்டுடன் ஜீப்பில் வந்து கம்பீரமாக இறங்கிய எஞ்சினியர் கனகவடிவேலர் கால்நடையாக எளிமையான கோலத்தில் வந்திருப்பதைக் கண்டதும் பெரியகமக்காரர் முதலில் திகைத்துப் போனார்.

''உதென்ன கோலம், சேர்! சாமி வேசத்தில் வந்திருக்கிறி யள்?'' என்று தனது வியப்பை வார்த்தைகளாகக் கொட்டினார்

''சாமி வேசமல்ல, மயிலர்... ஆடையைக் கொண்டு மனித ரைக் கணிப்பதாயின், இந்தக் காலத்தில் கள்ளனும் பட்டினத் தில் நவீன ஆடைகளைத்தான் உடுக்கிறான். இடுப்பையும் உடலை யும் இறுக்கும் அந்த லோங்சைக் கழற்றி எறிந்துவிட்டு இப்படி யொரு நான்குமுழ வேட்டியை அரையில் கட்டுவதில் இருக் கின்ற சுகம், நிம்மதி எதிலும் வராது... லோங்சை மாட்டிக் கொண்டு ஜீப்பில் ஏறும்போது எப்போது அதனைக் கழற்றி எறி வேன் என்ற ஆவேசம் எனக்கு இருக்கும்!...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சேர் நீங்கள்... அதுக்காகக் காலில் ஒரு செருப்புக்கூட இல்லாமல்... இந்தப் பதைபதைக்கும் வெயிலில் வெறுங் காலுடன்... உங்களுக்கு அப்படி என்ன பணக்கஷ்டம் வந்தது...?"

"என் வாழ்க்கையில் நான் அனுபவிக்காத ஒரு கஷ்டம் பணக்கஷ்டம் தான், மயிலர்! இன்றைக்கும் அதில் குறைவில்லை... பென்சன் கைநிறைய வருகிறது. பட்டினத்திலுள்ள சொத்துக்கள் இருதலைமுறைகளுக்குப் போதும். எனக்கு அமைதி வேண்டும்... யந்திரமயமான பட்டின வாழ்க்கையில் மனிதர்களில்லை. எல்லாரும் அங்கு எதற்கோ ஆலாகப் பறக்கிறார்கள்! என்ன கேட்டீர்— காலில் செருப்பில்லாமல் பதைபதைக்கும் வெய்யிலில் வெறுங்காலுடன் புறப்பட்டு விட்டீர்களே என்று? அதையும் உதறிவிட்டேன் மண்ணுக்கும் மனிதனுக்குமிடையில் தடையெதற்கு? இடைவெளி எதற்கு? இந்தக் கிராமத்தில் வாழும் மக்களில் எத்தனைபேர் செருப்பு அணிகிறார்கள்...?"

"அவர்களுக்கு அதுபழக்கம் வெயில், கல், முள் ஒன்றும் அவர்களை எதுவும் செய்யாது, சேர்! அப்படி அவர்கள் பாதம் மரத்துவிட்டது..." என்று பெரிய கமக்காரர் சிரித்தார்.

"செருப்பில்லாமல் நடப்பது ஆரம்பத்தில் எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. இப்போது என் பாதமும் மரத்துவிட்டது. முள் குத்தினால் அதுதான் உடையும்..."

"சரிசேர்... உங்களோடு வாதாட நான் வரவில்லை... நீங்கள் படித்தவர்..."

கனகவடிவேலர் அவசரமாகக் குறுக்கிட்டார். மனிதருக்குப் படிப்பு அவசியமா என்று எனக்குச் சந்தேகம் வந்திருக்கிறது! பூமியில் படைக்கப்பட்ட எந்த ஒரு உயிரினமும் இயற்கையிலிருந்து விலகி வாழவில்லை. ஆக மனிதன் மட்டுந்தான் இயற்கையோடு பொருதி இயற்கையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு வாழ முயற்சித்து பட்டின நரக வாழ்க்கையை உருவாக்கியிருக்கிறான். அறிவுக்கும் இயற்கைக்கும் இடையில் இப்போது போர்! மனிதனின் அறிவு, தொழில்நுட்பத் திறன், அறிவியல் வளர்ச்சி இன்று மனிதகுல ஆக்கத்திற்கு உதவுவதிலும் அழிவுக்கே கூடுதலாக உதவுகிறது! இருந்து பாரும் மயிலர், ஒருநாள் மனிதகுலம் தன் அறிவுக்கே தன்னைப் பலிகொடுக்கும்..."

பெரிய கமக்காரருக்குக் கனகவடிவேலர் கூறியவற்றில் பல புரியவில்லை. சிரித்தபடி இருந்தார்.

"மனிதனுக்கு இந்தப் பூமியில் வாழ என்ன தேவை?" என கனகவடிவேலர் திடீரெனக் கேட்டார்.

"நீங்களே சொல்லுங்கள்..." என்றார் பெரியகமக்காரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்பதற்கு நல்ல உணவு, உடுப்பதற்கு உடை, இருப்பதற்கு ஆரோக்கியமான ஒரு வீடு, கட்டியணைப்பதற்கு ஒரு பெண் சில குழந்தைகள்... இவைதான் தேவை. இவற்றைப் பெறுவதற்குக் கல்வி தேவையா...?''

"கல்வியிருந்தால் உத்தியோகம் கிடைக்கும்... பணமுழைக்கலாம்! இவற்றைப் பெறலாம்..."

''கல்வி, பட்டம் என்பன இருந்தால்தான் இவற்றைப் பெறலாம் என்றால், இந்தக் காலத்தில் எவரும் இருக்க முடியாது மயிலர்! முத்தையா உண்ணவில்லையா! உடுக்கவில்லையா? பிள்ளைகளைப் பெறவில்லையா...?''

"சரியாகச் சொன்னியள்...'" என்று பெரிய கமக்காரர் ஆரவாரித்தார். வெகுகாலமாக தான் படிக்கவில்லை என்று இருந்த ஆதங்கம், கனகவடிவேலரின் வார்த்தைகளால் மறைந்தது. பெரிய கமக்காரருக்கும் கனகவடிவேலரின் வயதுதான் இருக்கும். பெயரில் கமக்காரர் என்றாலும், வயலிலிறங்கி வேலைசெய்து அறியாதவர் என்பது உடலின் தளதளப்பிலும் தொந்தியிலும் தெரிந்தது.

அவர்கள் பலவற்றைப் பேசிக்கொண்டார்கள். பெரிய கமக்காரர், விடாப்பிடியாக அவரை அங்கேயே அன்று சாப்பிட வைத்தார். மோர் தயிரோடு சேர்ந்த உணவைக் கனகவடிவேலர் விரும்பிச் சாப்பிட்டார்.

''நீங்கள் இந்தக்கிராமத்தில் இருக்கும்வரை என்னோடு இருக்கலாம்... சேர்!'' என்று பெரியகமக்காரர் கூறியபோது, கனகவடிவேலர் பவ்வியமாக மறுத்தார்.

''மிக்க நன்றி... இந்தக்கிராமத்தில எவ்வளவு காலம் இருப்பேனோ தெரியாது. அழகான, அமைதியான அந்தப் பழைய உலகம் இங்கு இருந்தால் நிரந்தரமாகவே இருந்து விடுவேன். எனக்கு ஒரு சிறுதுண்டு நிலம்... அதில் ஒருகுடிசை... இவைதான் வேண்டும்...''

''முத்தையா, நம்முடைய கரும்பாலைப்புலவிலுள்ள வீட்டை இந்த ஐயாவிற்கு ஒதுக்கிக் கொடு. நீயும் அடிக்கடி சென்று தேவையான உதவிகளைச் செய்து கொடு... மயிலர்மை இருப்பாள். ஐயாவிற்குச் சமையல் செய்து கொடுக்கச் சொல்.'' என்று பெரிய கமக்காரர், முத்தையாவிற்கு உத்தரவிட்டார்

''சரி, ஐயா...''என்றான் முத்தையா.

தலைவாசல் குந்தில் இருந்தபடி ஆற்றுப்பக்கமாகப் பார்க்கும்போது இயற்கையின் அற்புதங்கள் விரிந்தன. எத்தனை விதமான பறவைகள் வானில் பறக்கின்றன. எத்தனை விதமான ஒலிகள்? இயற்கையின் கீதம் எவ்வளவு இனிமையானது! காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்து படுக்கைக்குப் போகும்வரை அர்த்தமில்லாத சினிமாப் பாடல்களைக் கேட்டுக் கேட்டு மரத்துப்போன செவிகளுக்கு காட்டுப் பறவைகளின் கீதம் இனிமையாகப் பாய்ந்தது. மந்துக் காடுகளைத் தழுவி சரசரத்தபடி வீசும் காற்றில் கூட ஒரு ராகம் தொனிப்பதாக அவர் உணர்ந்தார்.

''இஞ்சினியர் ஐயா, உங்களுக்கு இந்த இடம் பிடித்துக் கொண்டுது போல...'' என்றபடி முத்தையா அவரைப் பார்த்தான். அதேவேளை அடுக்களையைச் சாணத்தால் மெழுகி விட்டு சாணி நீரை ஊற்றுவதற்காக மயிலம்மை வெளியில் வந்தாள். கனகவடிவேலர் அப்போதுதான் அவளை நிமிர்ந்து பார்த்தார். முப்பது வயது மதிக்கலாம்; உரமேறிய மட்டான உடல் வாகு. அழகாக இருந்தாள். நெற்றியில் பளிச்செனத் திருநீறு தரித்துப் பெரிதாகப் பொட்டிட்டிருந்தாள். ஏதோ குறைவது போலப்பட்டது.

''உது மாரியப்பன்ற பொஞ்சாதி... உந்த மூலைக் குடிசையில கால் வழங்காத புருசனோடை... இருக்குது. புரியனை ஐஞ்சாறு வரியத்துக்கு முந்தி மணலாற்றிலே யானை ஒன்று அடிச்சிட்டுது. காலிரண்டும் அதுக்குப் பிறகு வழங்காது போய்விட்டது.... இடுப்புக்கீழே சுரணையில்லாமல் போய் விட்டது... ஏதோ கூலிவேலை செய்து — சமையல்வேலை செய்து காலத்தை ஓட்டுது. ஐயா இங்க இருக்கு மட்டும் மயிலம்மை உங்களுக்குச் சமைச்சுப் போடும்... சாப்பாடும் கொடுத்து மாதா மாதம் பத்தோ பதினைந்தோ கொடுங்கோ...... போதும்''

மயிலம்மையைப் பார்த்தபோது, கண்களுக்குப் பெரிதாகத் தெரிந்த குறைபாடு இப்போது புலனாகியது. முகத்தில் அப்பியிருந்த மாறாத கவலையின் சுவடுகள். கனகவடிவேலர் அவளுக்காக இரக்கப்பட்டார்.

''நாளைக்கு காலமை சமைக்கவாறன் ஐயா''... என்று கூறிவிட்டு மயிலம்மை சென்றாள். மந்துக்காடுகளினூடாக, புலவின் கிழக்கு மூலையில் காணப்பட்ட குடிசையை நோக்கி அவள் செல்வதைக் கனகவடிவேலர் சிறிது நேரம் பார்த்தார்.

''ஆள் நெருப்பு ...'' என்றான் முத்தையா. ''கனபேர் மயிலம்மையிடம் சேட்டை விடப்பார்த்து வாங்கிக் கட்டியிருக்கினம். எங்கட புதுவிதானைப் பொடி, ஒருமுறை மயிலம்மையின்ரை கையைப் பிடிக்கப்போய், கன்னத்தில் அறைவாங்கியவர் என்னும் கேள்வி...வேலியில்லாத புலவு. மாடுகள் பயிரில வாய் வைக்கத்தான் பார்க்கும்...''

பாலைமர உச்சாரக் கொப்பொன்றில் மயிலொன்று பறந்து வந்து அமர்வதை அவர் ஆவலோடு பார்த்தார். மாலைக் கதிரவனின் சாய்கதிர்கள், நீண்ட அதன் வர்ணஜாலத் தோகைக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பட்டு ஒளிர்ந்தது. ஏற்கனவே அம்மரத்தின் கிளையில் மறைவாக அமர்ந்திருந்த பெண்மயில் ஒன்று சிறகை அடித்து அகவி தன்னைக் காட்டிக் கொண்டது. தோகையற்ற அதன் வடிவம்,? தோகையின் நிறைவோடு கம்பீரமாக அமர்ந்திருந்த ஆண்மயிலின் அழகிற்கு ஈடாகவில்லை.

உயிரினங்களில் ஆண்களையே அழகானவையாக இயற்கை படைத்திருக்கிறது. தோகை மயிலின் கண்பறிக்கும் அழகு, சேவலின் கம்பீர அழகு, ஆண் சிங்கத்தின் பிடரி மயில்ச் சிலிர்ப்பழகு என உயிரின ஆண்கள் பெண்களை மயக்கும் அழகுடன் விளங்க, மனித குலத்தில் மட்டும், பெண்களையே அழகாக இயற்கை படைத்த மர்மம் ஏன் என்று தெரியவில்லை.

உண்மையில் ஆண்களா, பெண்களா அழகானவர்கள் பெண்களை அடிமை கொள்வதற்காக கவிஞர்கள் அவர்களைப் புகழ்ந்து இல்லாத உவமைகளைக் கூறிக் கூறி, பெண்களை நிரந்தர அடிமைகளாக்கி விட்டார்கள். இயற்கையின் குழந்தைகளாக ஏனைய உயிரினங்கள் போன்று, எதுவித மறைப்புத் திரைகளுமின்றி நின்முல், ஆண்கள் தாம் அழகாக இருப்பார்களோ?

பாலைமரக் கிளையில் அமர்ந்திருந்த ஆண்மயில், திடீரென நிலத்தை நோக்கி அப்பெனத் தாழ்ந்து, உயர்ந்தது. கால் விரல்களில் சிறியதொரு பாம்பு கௌவியிருந்தது. பாம்பு உயிர் தப்ப அலமலக்க நெளிவது தெரிந்தது.

''ஐயோ...பாவம்...'' என்முன், முத்தையா.

''இது பாவமல்ல, முத்தையா! இது நிகழாவிட்டால் இயற்கையின் சிருஷ்டிப்படி ரகசியம் பொய்த்துவிடும்...பரிணமத்தின் தத்துவம்... உலகில் வலிமையற்றது அழிவதும் வலிமையானது எஞ்சுவதும் தவிர்க்க முடியாதவை. இயற்கைச் சமன்பாடு என்றும் நிகழ்கிறது! அதனுல், ஏனைய உயிரினங்கள் அளவோடு இருக்கின்றன. மனிதர்கள் தான் அளவுக்கு அதிகமாக அதிகரித்துவிட்டார்கள். அறிவியல் வளர்ச்சி மருத்துவ விருத்தி... மனிதர்களை இயற்கையாக அழியவிடாது தடுத்து வருகின்றன... அறிவிக்கும் இயற்கைக்கும் போர் நடக்கிறது, இப்போது...வெல்லப்போவது இயற்கைதான்...''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை, இஞ்சினியர் ஐயா ..'' என்று முத்தையா சிரித்தான்:'' ''என்னென்ன சாமான் வாங்கி வரவேண்டுமென்று கூறுங்கோ வேண்டி வாறன்''

வீட்டின் விருந்தையிலிருந்து பார்க்கும் போது, அறுகுவெளியின் பிரதான மண்பாதை தெளிவாகத் தெரிந்தது. சயிக்கிலில் வந்த ஓர் இளைஞன் வீட்டின் முன் இறங்கி, சயிக்கிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிக் கடப்பில் சாத்தி வைத்து விட்டு, கடப்பை ஏறிக் கடந்து உள்ளே வந்தான்.

"எங்கட புது விதானையார் உவர் தான், ஐயா......" என்று அவனை, கனகவடிவேலருக்கு முத்தையா அறிமுகப்படுத்தி வைத்தான். அவனுக்கு இருபத்தாறு இருபத்தேழு வயதிருக்கும். மெலிந்த உயர்ந்த தோற்றம்; மாநிறம். அறுகுவெளியில் லோங்ஸ் சேட் போடும் முதலாவது இளைஞன் இவனாகத்தான் இருப்பான். கண்கள் குழிவிழுந்தும், கன்னங்கள் கூடுதலாக ஒட்டியுமிருந்தன. 'பெண்கள் விஷயத்தில் பலவீனமானவனாக இருப்பான்' எனக் கனகவடிவேலர் கணித்துக் கொண்டார்.

"ஆரோ சாமியார் ஒருவர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டன்......" என்று கூறியவாறு நுழைந்தான். அந்தக் கிராமத்தின் சகல அதிகாரங்களையும் அனுபவிக்கும் தோரணை குரலில் தொனித்தது.

"நான் சாமியார் இல்லையப்பா... நான் எதனையும் துறக்கவில்லை... கிராமத்தின் அமைதியை அனுபவிக்க வந்திருக்கிறேன். வாழ்க்கையை அனுபவிக்க வந்திருப்பவன்..."

அவன் அவரை வியப்புடன் பார்த்தான். அவரின் தோற்றம் அவனது தோரணையில் மாற்றத்தை உண்டாக்க, மரியாதையுடன் அவரைப் பார்த்துச் சிரித்தான்.

"என் பெயர் செல்வச்சந்திரன்... ஜி. எஸ்,... கிராம சேவையாளன்... நானும் யாழ்ப்பாணம் தான்! இங்கு வேலை மாறி வந்து ஒருவரியமாகுது..."

ஒரு கணம் இந்தக் கிராமத்தின் பெரிய விதானையார் சுப்பிரமணியத்தையும், புதிய விதானையார் செல்வச்சந்திரனையும் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது. பழைய கிராமத்தலைமைக்காரன் முறையில் அக்கிராமத்தின் செல்வாக்கும், மதிப்பும், கூறிய வார்த்தையில் நீதிநியாயம் இருக்கும் என்ற நம்பிக்கையும் கிராமத்தின் ஆத்மாவை அறிந்து கொண்ட ஒருவர் இருப்பார். ஆனால் இன்றைய கிராமசேவகர் பதவி மாற்றத்திற்குரிய உத்தியோகமாகிவிட்டது. யாழ்ப்பாணத்தின் எங்கோ ஒரு மூலையில் பிறந்த செல்வச்சந்திரன், தொண்ணூறு மைல்களுக்கு அப்பாலுள்ள அறுகு வெளியின் கிராமத்தலைமை அதிகாரி. முதிரா இளமை கொண்ட இந்த வாலிபன் எவ்வளவு தூரம் அறிவு பூர்வமாகச் சிந்திப்பான்? உணர்ச்சி பூர்வமாகச் சிந்திக்கத்தான் தெரிந்திருக்கும். பெரிய விதானையாரின் ஆளுமையும் அனுபவமும் புதிய விதானையாருக்கு இருப்பதாகப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இரும் தம்பி......'' என்று தலைவாசல் குந்தை கனகவடிவேலர் காட்டினூர். அவன் கைக்குட்டையை எடுத்து குந்தில் விரித்துவிட்டு அதன் மீது இருந்தான்.

''இரண்டு கதிரை வேண்டிப் போடுங்கள்...'' என்முன் அவன். ''நீங்கள் ரிட்டையர்ட் எஞ்சினியராமே? இந்தக் கிராமத்திற்கு ஏன் வந்தீர்கள்? கமம் செய்யவா?''

''கிராமத்துக்கு வருபவர்கள் கமம் செய்யத்தான் வருகிறூர்களா?''

''அப்படியல்ல... நான் ஊருக்குப் போனுல், கமம் செய்யக் காணி எடுத்துத் தாறியா என்று கேட்பார்கள்! வாங்கோ எடுத்துத் தாறன் என்முல், நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கிறூர்கள். பட்டினத்தின் சொகுசு வாழ்வை அவர்களால் இழக்க முடிவதில்லை!... சேர், நீங்களேன் அறுகு வெளிக்கு வந்தீர்கள்?''

அவரைச் சந்திப்பவர்கள் கேட்கும் முதற் கேள்வி இதுவாகத்தான் இருக்கிறது, வழிமாறி வந்த பிரயாணியைப் பார்ப்பது போலப் பாரக்கிறூர்கள். கிராமத்திற்கு வந்ததற்கான தக்க காரணம் ஒன்றைக் கற்பிக்கத்தான் வேண்டுமோ!

'அமைதியையும் மனிதரையும் தேடிவந்தேன்' என்முல் நிச்சயமாக அவரைப் பைத்தியக்காரனுகப் பார்ப்பார்கள், அல்லது துறவியாக்கி விடப்பார்ப்பார்கள்.

''சிறிது காலம் இங்கு இருக்கலாம் என்று வந்தேன்...''

"குடும்பம் யாழ்ப்பாணத்திலா, சேர்?''

இக்கேள்வியை அவர் விரும்பவில்லை என்பது முகபாவத்திலிருந்து தெரிந்தது. ஒருவனின் தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்வதில், இவர்களுக்கேன் இவ்வளவு அக்கறை?

அவர் வெறுமனே சிரித்து வைத்தார்.

''அறுகுவெளியில் பழைமை மாறுது இருக்கிறது. நவீன நாகரீகத்தின் நச்சுக்கரங்கள் இந்தக் கிராமத்தை இன்னும் பற்றவில்லை......'' என்முர் கனகவடிவேலர்.

''இந்தக்கிராமத்தில் என்ன இருக்கிறது. நல்ல வீதி இருக்கிறதா? அவசரத்துக்குப் போய்வரபஸ் இருக்கிறதா? வானெலி' ரிவி......சாய் நல்லதொரு நூல்நிலையம்.... ஒரு சினிமாத்தியேட்டர்...என்னதான் இருக்கிறது......என்று" செல்வச்சந்திரன் அலுத்துக் கொண்டான்.

''அவை எதுவுமில்லாதபடியால்தான் இது கிராமமாக இருக்கிறது. மக்கள் மனிதர்களாக இருக்கின்றூர்கள், தம்பி......''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைக்கு இக்கரை பச்சை ,சேர். இங்கு இருந்து பார்த்தால் கஷ்டம் தெரியும். கல்வியறிவில்லாத பட்டிக்காட்டு ஜனங்கள். மாடுமாதிரி உழைப்பது, குடிப்பது, சண்டை பிடிப்பது... அறுகுவெளியில அறுபது குடும்பங்களுள்ளன! பெரும்பகுதி நிலம் பெரிய கமக்காரருக்கும் பெரிய விதானையாருக்கும் சொந்தமானவை! இருபது இருபத்திரண்டு குடும்பங்களுக்குத்தான் சொந்த நிலம் இருக்கிறது. ஏனையோர் கூலிவேலை செய்தும், புலவுக் காணிகளில் வேலை செய்தும் சீவிக்கின்றனர். பெரிய விதானையாராலும் தங்கள் உழைப்புச் சுரண்டப்படுவதை உணராமல் விடுகின்றார்கள்......''

கனகவடிவேலர் நிமிர்ந்து உட்கார்ந்தார். உழைப்புச் சுரண்டலைப் புரிந்துகொண்டிருக்கும் செல்வச்சந்திரன், நவீன சித்தாந்தத்தின் சமூக தார்ப்பரியத்தைப் புரிந்து கொண்டிருக்கிறன். அவரையும் ஒரு காலத்தில் இச்சித்தாந்தங்கள் கவர்ந்து தான் இருந்தன.

''மூக்குள்ளவரை சளி இருக்கும்...''

''அப்படிச் சொல்ல முடியாது...சமூகம் என்றிருக்கும் வரை பிரச்சினை இருக்குமென்றல், அந்தச் சமூக அமைப்பையே மாற்றியமைக்க வேண்டும். இன்றைய பேப்பர் பார்த்தீர்களா?......''

''நான் பத்திரிகைகள் வாசிப்பதை நிறுத்திவிட்டேன்......'
கனகவடிவேலரை விசித்திரமான பிராணியைப் பார்ப்பவர் போல சந்திரன் பார்த்தான்.

''பேப்பர் வாசிப்பதில்லையா? உலகத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல்......சிறுஏக்கரும் மொசாக்களும் உலகின் அமைதியை எப்படிக் குலைத்திருக்கிருர்கள்? யாழ்ப்பாணத்தில் மீண்டும் கலவரம்..... மன்னர் கொளுத்தப்பட்டிருக்கிறது...இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல்......?

''இவற்றைத் தெரிந்து கொள்வதால் என்ன பயன்? கவலை தான் மிஞ்சும்...மனச்சுமை தான் ஏறும்!. இந்தத் தொடர்பாடல் விதனங்கள் உலகத்தைச் சுருக்கி விட்டன... உலகம் சுருங்கியிருக்கக்கூடாது. முன்பு இருந்த மாதிரி உலக நாடுகளும் சமூகங்களும் பிரிந்து, விலகி, தொடர்பின்றி தனித்தனியே இருந்திருக்க வேண்டும். தன்னிறைவுச் சமூகமாக இருந்திருக்கும்... பிறரை நம்பியிருக்க நேர்கிறது... பொறியியல் வளர்ச்சி சமூகங்களின் இணைப்பாகி சமூகங்களிடையே போராட்டங்கள், பொருமை, கோபங்கள் என்பனவற்றை உருவாக்கிவிட்டன... கடைசியில் இன்று மனிதனைக் கவலை சூழ்ந்து ஆக்கிரமித்திருக்கிறது! பத்திரிகைகள் உலகத்தின் அவலங்களைத்தான் தருகின்றன. உலகே அமைதிக்கு மனித குலத்தின் நிம்மதிக்கு உதவுவதில்லை... அதனுல் பத்திரிகைகளை நான் படிப்பதை நிறுத்தியே விட்டேன்......''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் வாதம் சரியாகப்படவில்லை. நாகரிக வளர்ச்சிப் படியில் மனிதன் முன்னேறுகிறான்..."

கனகவடிவேலர் முகம் மாறியது. செல்வச்சந்திரனை ஆழமாக ஊடுருவிப் பார்த்தார்.

"நாகரீகம்......முன்னேற்றம்? நாகரீக வளர்ச்சி என்பது மனிதனைப் பொறுத்தமட்டில் புறவாழ்வில் தான் இருக்கிறது. ஆடை, அணி, வீடு, போகப் பொருட்களில் தான் மாற்றம்!...மனிதனின் அகவாழ்வில் மாற்றம் நிலைதரவில்லை. அவன் இன்னும் காட்டுமிராண்டியாகத்தான் இருக்கிறான். இனக்கலவரங்கள் ஏன், இந்த நாகரீக உலகில் தோன்றுகிறது. ... ஒரு இன வெறியர்கள்மற்ற இன மக்களைப் படுகொலை செய்து, சொத்துக்களைக் கொளுத்தி... கண் முன்னால் பெண்களைக் கற்பழித்து... இதுவா நாகரீகம்? மனித குலத்தை அழிப்பதற்காக அணுக்குண்டுகளையும் ஏவுகணைகளையும் செய்து குவித்து வைத்திருப்பதா நாகரீகம்... இவைதான் நாகரீகம் என்றால், இந்த அறுகுவெளிக் கிராமம் இன்றிருப்பது போல பாதுகாப்பதுதான் இக்கிராமமக்களுக்கு நாம் செய்யும் உதவியாக இருக்கும்... காட்டில் அலைந்து, நதிக்கரையில் உலாவி, வயல்களில் உழைத்து அவர்கள் எவ்வளவு அமைதியாக, இயற்கையாக வாழ்கிறார்கள்! அத்தகைய ஒரு வாழ்க்கையைத் தேடித்தான் வந்திருக்கிறேன்..."

"நீங்கள் பெரியவர்... உங்களுடன் வாதிட நான் விரும்பவில்லை..." என்றான், செல்வச்சந்திரன்.

"பெரியவர் என்று கூறி அரை வயதிலேயே எம்போன்றோரை மூலையில் தூக்கி சாமியார்களாக இருத்திவிட்டு, நீங்கள் வாழ்க்கையை அனுபவிக்கிறீர்கள்... அது உங்களுக்கு வசதி! 'பெரியவர்' என்ற பெயரைக் காப்பாற்ற நாங்களும் வேசம் போட்டு வாழ்க்கையின் பலசுவையான பகுதிகளை இழந்துவிடுவது வழக்கமாகி விட்டது.... "என்று கனகவடிவேலர் சிரித்தார்.

"நீங்கள் சாமியாரல்ல..."என்று செல்வவச்சந்திரன் சிரித்தபடி எழுந்து விடைபெற்றான்.

அவன் சென்றதன்பின் அமைதி சிறிது குலைந்தது போன்றவரானார். ஆழ்மனதில் அமுங்கிக்கிடந்த வேதனைகள் மெல்ல மேலெழ முயன்றன.

★

காட்டாற்றின் கரைமோரத்தில் வெள்ளத்தால் புரட்டி விடப்பட்ட பெருங்கல் திணிவொன்றில் கனகவடிவேலர் அமர்ந்திருநாசந்த. ஆற்றில் நீர் பொங்கிப்பிரவாகமாகப் பாயவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி மாதக் கடுங்கோடையின் தாக்கம் ஆற்றின் நீர்க்கனவளவில் தெரிந்தது. நடுஆற்றில் முழங்கால் அளவிற்கு நீர் பாயலாம் என அவர் மதிப்பிட்டார். பாறையிலிருந்து தனது பாதங்களை சலசலத்து ஓடும் ஆற்றுநீரில் அலம்பவிட்டவாறு, இனிய மாலையில் அழகில் அவர் லயித்திருந்தார்.

அடர் மரங்களின் ஊடாக வானம் தெரிந்தது. ஆறு கிழக்கு மேற்கான போக்கில் பாய்ந்து கொண்டிருந்ததால் மேற்கு வானின் சாய் கதிர்கள் பட்டும் படாமலும் ஆற்றின் பள்ளத்தாக்கில் ஒளிப்பரவலை நிகழ்த்தின. ஆற்று மீன்கள் சலனமின்றி நீரில் சுழித்தோடுவது தெளிவாகத் தெரிந்தது.

நகரத்தின் பரபரப்பு இங்கில்லை. வாகனங்களின் இரைச்சல் இல்லை. மனிதக் குரல்களின் தாக்கமில்லை. காட்டின் நடுவே ஏகாங்கியாகப் பாயும் நதிக்கரையில் அமர்ந்திருப்பது மனதிற்கு நிம்மதியைத் தந்தது.

காட்டிற்குத் திரும்பும் பறவைகள் சிறகடித்து வானில் தவழும் சப்தம்கூட தெளிவான இசையாகப் பரவியது. வடக்கே மேய்ச்சலிற்குப்போன அறுகுவெளிக்கிராமத்தவர்களின் மாடுகள் சற்றுத்தூரத்தில் ஆற்றில் இறங்கிக் கடந்து இக்கரையில் ஏறின. சில ஆற்றில் நின்றபடி நீரை உறிஞ்சிவிட்டு முன்னே சென்ற மந்தைகளைத் தொடர வேகமாக கரையில் ஏறின.

அவர் அமர்ந்திருந்த பாறைக்குச் சற்றுத்தள்ளி, கரும்பாலைப்புலவில் குடிசைகட்டி இருப்பவர்கள் ஆற்றில் இறங்கிக் குளிக்கும் துறையிருந்தது. ஆற்றில் அவருக்கு வலது பக்கத்தில் நீரில் சலசலம்பு எழுந்ததால் அவர் திரும்பிப்பார்த்தார். ஒரு பெண் குளிப்பதற்காக ஆற்றில் இறங்குவது தெரிந்தது.

அவளை அவருக்குத் தெரியும். கரும்பாலைப்புலவில் குடிசை போட்டு வசிக்கும் சண்முகத்தின் மனைவி செல்லம்மா. இளம் குடும்பம். ஒரு குழந்தை இருக்கிறது.

அவள் அவர் இருந்ததை சட்டை பண்ணமல் உடையை மாற்றி மார்பில் குறுக்குக் கட்டாகச் சேலையை இறுகக் கட்டிக் கொண்டாள். பின்னர் ஆற்றில் இறங்கி தன்னை அமுக்கிக் கொண்டாள். அவிழ்ந்து தொங்கிய கூந்தலும் ஈர உடையும் அந்த மாலைப்பொழுதின் இயற்கை அழகிற்கு மெருகூட்டுவனவாக அவருக்குப்பட்டது.

காட்டின் தேவதையொருத்தி நீரில் எழுந்து நிற்பதுபோல அவருக்குப்பட்டது.

அவளை அக்கோலத்தில் தொடர்ந்து பார்ப்பது பண்பல்ல என்ற எண்ணத்தில் அவர் தன் பார்வையை மறுபக்கத்திற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிக் கொண்டார். வலது பக்கத்தில் அவள் நீராடும் சல சலப்பு எழுந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்தின் பின் அவள் நீரில் நடக்கும் ஒலி. குளித்து முடித்துவிட்டுக் கரை ஏறுகிறாளாக்கும் என அவர் எண்ணிக் கொண்டார். தன்னையறியாமல் அவர் திரும்பிப்பார்த்தபோது அவள் ஆற்றின் எதிர்க்கரையில் ஏறுவது தெரிந்தது. ஈர உடையோடு அவள் ஆற்றின் எதிர்க்கரையில் ஏறுவதைக்கண்ட அவர் முதலில் வியப்படைந்தார். அவர் வியப்பு ஒருகணத்தில் அழிந்தது. அவள் அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு மரங்களுக்கிடையில் மறைந்தாள்.

எங்கோ மறைவிடத்தில் குந்தப் போகிறாளாக்கும் என அவர் எண்ணிக்கொண்டார்.

நினைவுகள் நர்த்தனமிட்டன.

யாழ்ப்பாணத்தின் அவசர வாழ்வின் பரபரப்பு நினைவு வந்தது

வீதிகளின் நிம்மதியையும் அமைதியையும் கிறிக்கலைத்தபடி விரையும் இராணுவ றக்குகளின் அவசரம் மனதில் எழுந்த போது தன்னை அவர் சிலிர்த்துக் கொண்டார் அவருடன் வாழ்ந்து, அந்த வாழ்வின் அர்த்தத்தைப் புரியவைத்த அவர் மனைவி யோகம், நான்கு பிள்ளைகளை அவருடன் விட்டுவிட்டு இறந்து போனாள்.

அவள் இறந்து நான்கு ஆண்டுகள். மூத்த பிள்ளைகள் இருவரும் லண்டனில் இருக்கிறார்கள், தங்கள் விருப்பப்படியே அவர்கள் கலியாணம் செய்து கொண்டார்கள். மூன்றாவது மகள் தன் சொத்தில் பெரும்பகுதியைச் செலவிட்டு அவளை ஒரு டாக்டர் பையனுக்குக் கட்டி வைத்தார். அவன் இந்த நாட்டின் சம்பளம் போதாதென்று கனடாவிற்கு மனைவியுடன் குடியேறிவிட்டான். கடைசிப்பையன் சீராளன் மட்டுந்தான் அவருடன் இருந்தான். அவனுக்காக அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார். அவன் தன்னைப்போல ஒரு இஞ்சினியராக வருவான் என எதிர்பார்த்தார். அவன் ஏ. எல். இல் திறமையாகச் சித்தியடைந்தும், பல்கலைக்கழகத்தரப்படுத்தல் காரணமாக பல்கலைக்கழகம் கிடையாதுபோன நூற்றுக்கணக்கான இளைஞர்களில் ஒருவனாக அவன் மாறிவிட்டான்.

அவனது நம்பிக்கை அழிந்தபோது, அவன் விரக்தி கொண்டவனாகக் காணப்பட்டான். அவன் போக்கில் மாற்றங்கள் தெரிந்தன.

லண்டனிலிருந்து தமையன்மாரும் கனடாவிலிருந்து தமக்கையும் கடிதம் எழுதினார்கள். சீராளனை அங்கு அனுப்பி வைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்படி அவர்கள் பலதடவைகள் எழுதியும் சீராளன் அந்த நாடுகளுக்குச் செல்வ மறுத்துவிட்டான்.

அவருக்கு வியப்பாக இருந்தது.

"நான் அங்கெல்லாம் போகமாட்டன். இங்கதான் இருக்கப் போறன்..." என்று அவன் திடமாகக் கூறியபோது உண்மையில் அவர் மகிழ்ச்சியடைந்தார். தன்னுடன் ஒரு பிள்ளையாவது இருக்கட்டும் என்பதில் திருப்தியே. ஆனால் அவனின் எதிர்காலம்பற்றிய சிந்தனை வந்தபோது மனதில் கவலைகள் அப்பின.

அவன் மீது அளவற்ற பாசத்தை அவர் வைத்திருந்தார். கடைசிப்பிள்ளை. இயல்பாகவே அவனில் அவருக்கும் அவர் மனைவிக்கும் அன்பும் வாத்சல்யமும் அதிகமாகவேயிருந்தது. அவனும் அப்படியே அந்தச் சம்பவம் நிகழும்வரை இருந்தான்.

அந்தச் சம்பவம்...?

கனகவடிவேலர் தன்னை ஒருதடவை சிவிர்த்துக் கொண்டார். அவரின் ஆழ்மனதில் இரணமாக உறைந்திருக்கும் அந்தச் சம்பவத்தை அவர் கிளறிவிட விரும்பவில்லை.

வானத்தில் மெல்ல இருள் கவியத் தொடங்கியது.

ஆற்று நீரின் சலசலப்பு எழுந்தது. அக்கரையிலிருந்து செல்லம்மா திரும்பி வருவது தெரிந்தது. அவள் நடையில் பரபரப்பு தெரிந்தது. அவள் வேகமாக ஆற்றின் நடுவிற்கு வந்து அப்படியே தன்னை ஒருதடவை நீரில் அமுக்கிவிட்டு எழுந்து கரையேறிப் புலவிற்குள் புகுந்தாள்.

இவ்வளவு நேரமும் அவள் அங்கு என்ன செய்தாள்?

அதற்கு விடையாக அவள் சென்ற சற்று நேரத்தின் பின்னர் அக்கரையிலிருந்து ஆற்றைக்கடந்து வந்த செல்வச்சந்திரன் அமர்ந்தான். அறுகுவெளியின் புதிய கிராமசேவையாளனை அவன் அவர் ஆற்றின் கரையில் பாறையில் குந்தியிருப்பதை எதிர்பார்க்கவில்லை.

அவன் முகத்தில் திடீரென வியர்வைத் துளிகள் அரும்பின.

"என்ன சேர், இங்க..." என்று குரலில் பதட்டம் தெரியக் கேட்டான்.

"இந்தக் கேள்வியை நான்தான் உம்மிடம் கேட்க வேண்டும்.." என்று கனகவடிவேலர் சிரித்தார்.

அவன் மிகுந்த சங்கடப்பட்டான்.

"ஆற்றுச்கு அங்கால கசிப்புக் காச்சுவதாகச் செய்தி வந்தது. அதுதான் போய்ப்பார்த்தனான்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தனியாவா தம்பி, போனுய்...?''

''ஏன் போகப்படாதே? எனக்கென்ன பயமே...?''

''அப்படிச் சொல்லவில்லை... இப்படியான வேலைகளுக்குத் துணைக்கு ஆட்களைக் கொண்டு போவது நல்லது தம்பி...''

கனகவடிவேலர் இயல்பாகவே கூறினுர். செல்வச்சந்திரன் அவர் வார்த்தைகளில் விகற்பம் கண்டான். அவர் மனதில் எதையோ பொடிவைத்துப் பேசுவதாக அவன் நினைந்தான்.

''நான் வாறன், சேர்...'' என்றபடி கரையில் ஏறி விரைந்து சென்றுன்.

அவன் சென்றதன் பின்னரும் அவர் அந்தப் பாறையில் நீண்ட நேரம் அமர்ந்திருந்தார். அவருக்கு நடந்தவற்றை நினைக்கச் சிரிப்பா வந்தது.

இதில் தப்பு என்ன இருக்கிறது? உண்பது போல, உறங்குவது போல இதுவும் ஒரு உடலின் தேவை தான். இதில் யார் தான் துறவிகளாக இருந்தார்கள். விசுவாமித்திரர் கூட தேவ கன்னிகையின் காலடியில் தன் தவம், வலிமை யாவற்றையும் போட்டுவிட்டு, தன்னை இழந்து நின்றுரே!

சமூகம் இதற்கு ஒரு முறையை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறது; நியாயத்தைக் கற்பித்து வைத்திருக்கின்றது. பழி, பாவம், கற்பு, ஒழுக்கம் என்று மனிதனின் இயல்பூக்கத்திற்கு தடைவிதித்து வைத்திருக்கின்றது. கீழைத்தேசத்தில் தான் இந்தக்கட்டுப்பாடுகளின் சிறை அதிகம். மேலைத்தேசங்களில் ஒழுக்க வரம்புகளில் உயரணைகள் தகர்த்தெறியப்பட்டு மனிதன் சுதந்திரமான உற ளின் இனிய அனுபவங்களுக்கு விடுவிக்கப்பட்டிருக்கிறுன்.

ஒரு பெண்ணுடன் திருப்திகண்ட ஆணுமில்லை. ஒரு ஆணுடன் திருப்திகண்ட பெண்ணுமில்லை; அப்படியிருக்க வேண்டுமென்ற நியதியுமில்லை என யாரோ ஒரு எழுத்தாளன் எழுதியிருந்ததை அவர் எங்கோ படித்திருக்கிறுர். காண்டேகராகத் தான் இருக்கவேண்டும்.

அவர் கண்களுக்குச் சற்றுமுன் நிகழ்ந்துவிட்ட செயல் பாவச் செயலாகப்படவில்லை.

ஆனுல் அதைப் பெரும் தப்பிதமாக அச்செயலைப் புரிந்தவர்கள் நினைப்பதாக அவருக்குப்பட்டது.

எங்கோ மயில் ஒன்று மாலைப்பொழுதின் கருமைப் பரவலைத் கீறுமாப்போலப் பெரிதாக அகவியது,

அவர் மெதுவாக எழுந்து தன் குடிசையை நோக்கி நடக்கத் தொடங்கினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்காற்று மெதுவாக வீசியது.

அவர் வீட்டின் தலைவாசலில் அரிக்கன் லாந்தரை மயிலம்மை ஏற்றி மாட்டியிருந்தாள். அவரை எதிர்பார்த்து அவள் தலைவாசல் திண்ணையில் அமர்ந்திருந்தாள். அவர் தலைவாசலில் ஏறியதும் அவள் எழுந்து நின்றாள்.

''புட்டு அவித்து வைச்சிருக்கிறன், ஐயா. போயிட்டு வாறன்'' என்று அவள் ஒடுங்கி நின்றாள்.

''மிகுதிச் சாப்பாடு எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு போ, மயிலம்மை. உனக்கும் மனிசனுக்கும் ராவைக்குப் போதும்...''

''எடுத்திட்டன், ஐயா...''

அவர் அறுகுவெளிக்கு வந்து பத்து நாட்கள் ஆகின்றன. மத்தியானமும் இரவும் மயிலம்மைதான் அவருக்குச் சமையல் செய்து கொடுத்து வருகிறாள். காலையில் பத்து மணிபோல் வருவாள். வீட்டில் படுக்கையில் கிடக்கும் கணவனுக்குப் பணிவிடை செய்துவிட்டு வருகிறதுக்கும் இவ்வளவு நேரமாகிறதாக்கும் என அவர் எண்ணிக்கொண்டார்.

முதல்நாள் அவள் அவருக்குப் போதுமான அளவு தான் சமையல் செய்தாள். அவள் வீட்டு நிலவரத்தை முத்தையா மூலம் புரிந்து கொண்ட அவர், அவளுக்கும் சேத்துச் சமையல் செய்யுமாறு பணித்தார்.

அவள் அவரை நன்றியுடன் பார்த்தாள்.

''நீ கூலி வேலைக்குப் போவதில்லையா, மயிலம்மை...'' என்று ஒருநாள் அவர் கேட்டார்.

''போறதுண்டுங்க. வேளாண்மை, அரிவு வெட்டுக்காலத்தில தான் இந்த ஊரில கலி வேலையிருக்கும். இப்ப இல்லைங்க... ஐயா வந்ததால் ஏதோ ஒரு வேளை கஞ்சியாவது கிடைக்குது...''

''உன்ர மனிசன் மாரியப்பன் இப்ப எப்படி...?''

அவள் முகத்தில் கவலைகள் படரும். கண்கள் கலங்கிவிடுமாப்போலத் தவிக்கும்.

''அப்படியே தானுங்க இருக்கார். படுக்கைதான்.''

''வைத்தியம் செய்து பார்த்தியா...?''

''பார்த்தாச்சு. யாழ்ப்பாணத்தில பெரியாஸ்பத்திரியிலகூட ஒருமாதம் வரை வைச்சிருந்தன். சரிவரவில்லை.''

''நீ பர்வம்...''

''நான் பாவமில்லைங்க. அவர் தான் பாவம். என்னைக்கட்டின பலன் அவரை யானை மிதிச்சது. ஏதோ உசிரையாவது விட்டுதே...? எனக்கு நெத்தியிலை பொட்டாவதுமிஞ்சியிருக்குது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியப்பனுல் எவருக்கும் இனிப்பயனில்லை. இப்பிடுற்குக் கீழ் இயக்கமில்லை. ஆனுல் மயிலர்மை அவன் வாழ்ந்தால் தான் தன் குங்குமம் நிலைக்குமென நம்புகிருள்.

மயிலம்மை தன் ஆசாபாசங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு வாழ்கிருள் என்பதை அவர் உணர்ந்திருக்கிருர். சில காலம் கணவனுடன் வாழ்ந்து அந்த வாழ்வின் இனிமை அழிவதற்கு முன்னரேயே இல்லறத்தின் அர்த்தத்தை இழந்துவிட்ட அவள் வாழ்வின் எஞ்சிய பொழுதுகள் பாலை வறட்சி தான். சமூகம் தன்னைச் சுற்றி இட்டுக்கொண்ட கட்டுப்பாட்டு வேலியை அவளால் மீற முடியவில்லை.

கணவனுடன் வாழ்ந்து கொண்டே இன்னெரு ஆடவருடன் தொடர்பு கொள்ளும் செல்லம்மா இருக்கின்ற அதே புலவில் தான் மயிலர்மையும் வாழ்கிருள். இவளால் ஒழுக்க வேலியைத் தாண்ட முடியவில்லை.

மயிலம்மையிடம் கடவுள் நம்பிக்கையும் பாவ புண்ணிய எண்ணங்களும் அழமாக வேரூன்றி இருக்கின்றன. அவளின் நெற்றியில் திருநீறு இல்லாதிருந்ததை அவர் காணவில்லை.

மயிலம்மை சென்றதன் பின்னர் சற்று நேரம்கனகவடிவேலரின் சிந்தனையில் அவள் இடங்கொண்டாள்.

சாப்பிட்டுவிட்டு வந்து வெளித்திண்ணையில் ஓய்வாக அமர்ந்திருந்தபோது கிழக்கு வானில் நிலவின் பிறை வடிவம் தெரிந்தது சிலவண்டுகளின் இரைச்சலும் பக்கில் என்ற சிறிய ஆந்தைகளின் உறுமலும் எழுந்தன.

புலவிற்குள் கர்ட்டுமுயல்கள் இரண்டு தாவி ஓடுவது அழகாகவிருந்தது.

இருள் கவியத்தொடங்கி நிலத்தை மூடிப்படர்ந்தது.

அந்தக் கிராமத்தின் அமைதி அவருக்குப் பிடித்துவிட்டது. கிராமத்து மக்களின் போலித்தனமற்ற பழக்க வழக்கத்தை அவர் விரும்பினர். அவர்களில் சிலர் உழைத்துவிட்டுக் குடித்தார்கள். ஒருவரோடொருவர் சண்டை பிடித்தார்கள். பின்னர் சிநேகிதமாகி ஒன்ருகத் திரிந்தார்கள். அது ஒரு சிறிய உலகம். ஒருவரைப் பற்றி மற்றவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். ஒவ்வொருவரின் சுகதுக்கங்களில் கலந்து பங்குகொண்டார்கள்.

நகரத்தைப்போல தன்வீட்டிற்கு அயலில் யார் இருக்கிருர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ள விரும்பாமல் வாழும் மக்கள் இங்கில்லை.

அவர் படுக்கைக்குப் போக எழுந்தபோது கடப்பைக்கடந்து யாரோ வீட்டைநோக்கி யாரோ வருவது தெரிந்தது. 'டோர்ச்'' லைற் ஒளி முன்னே படர ஒருவர் நடந்து வந்தார்...''ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சினியர் ஐயா, இருக்கிருரோ...? இருக்கிறியள்..." அது நான் சுப்பிரமணியம். உதாலே போறுப்போல உங்களையும் பார்த்திட்டுப் போகலாம் என்று வந்தன்..."

"பெரியவிதானையாரே... வாருங்கோ..." என்று கனகவடி வேலர் வரவேற்ருர். சுப்பிரமணியத்திற்கு அறுபது வயதிருக்கும். அக்கிராமத்தில் கிராமத்தலைவராக விதானையாராக இருந்து இளைப்பாறியவர்;

பெரியவிதானையார் திண்ணையில் அமர்ந்து கொண்டார் கம்பீரமான தோற்றம். பார்த்ததும் மரியாதை கொள்ள வைக்கும் உருவம். அரையில் தூய்மையான வேட்டியும் தோளில் சால்வையும் தரித்திருந்தார்.

"பெரிய மாளிகையில இருந்தனீங்கள். இப்படிக் காட்டுக்கை இருக்கிறியள்..."

பெரியவிதானையாரை கனகவடிவேலர் ஏறிட்டுப் பார்த்தார். அவர் பார்வையில் அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளாத நோக்கு தெரிந்தது.

"இந்தக் கிராமத்தின் அமைதிக்கும் அழகிற்கும் எதுவும் ஈடில்லை விதானையார். இந்தக் கிராமம் எனக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. நகரவாழ்க்கையின் யந்திரவாழ்வு வெறுத்து விட்டது..."

"இந்தக் கிராமம் மிகவும் பின்தங்கிவிட்டது. விவசாயம் செய்வது... சாப்பிடுவது... குடிப்பது... சண்டை பிடிப்பது... படுப்பது என்றுதான் இந்தக் கிராமத்தின் வாழ்க்கையும் யந்திரகதியில் கழிகிறது..."

"அப்படியில்ல... இங்க அந்தச் செயல்கள் இயற்கையோடு இணைந்த செயற்பாடாக இருக்கின்றது. காடு, கழனி, ஆறு குளம், விலங்குகள், பறவைகள், மக்கள், என்பன இயற்கையின் அம்சங்கள்! நகரத்தில் மக்கள் மட்டுமே உள்ளனர், விதானையார்! மரங்களில்லை... கல்கட்டிடங்களுள்ளன! வயல்களில்லை— கொங்கிறீற் பிளாற்றுகளுள்ளன! ஆறு குளமில்லை - பைப்களில் தண்ணீர் வருகிறது! இந்தக் கிராமத்தில் எத்தனை வர்ணப் பறவைகள்! மனிதர்களைப்போல நகரங்களில் காகங்கள் மட்டுந் தான் உள்ளன. காகங்களுக்கும் தங்குவதற்கு நகரங்களில் போதிய மரங்கள் இன்மையால் இருக்கின்ற ஒருசில மரங்களில் குவிந்து கிடக்கின்றன. அவற்றின் எச்சங்கள் தார் வீதிகள் பால்வீதிகளாகி விட்டன. அந்த மரங்களைக் கடப்பதற்குத் துணிச்சல் தேவை! ஒரே நாற்றம்... மக்களுக்கும் வீடுகளில்லை. சிறிய வீடுகளில் கும்பலாகக் கிடக்கிருர்கள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுடன் வாதாட முடியாது, சேர்...''

''அப்படியில்லை... இங்குதான் நான் அமைதியான காற்றைச் சுவாசிக்கின்றேன்! மனதில் நிறைவும் நிம்மதியுமிருக்கின்றது...''

பெரியவிதானையார். கனகவடிவேலரைப் ஏறிட்டுப் பார்த்து விட்டுப் புன்னகைத்தார். பின்னர் கூறினர்.

''எனக்கு அவை இங்கு கிடைக்கவில்லை சேர்...''

''ஏன்...?''

''எனக்கு ஏழு பிள்ளைகள்... நான்கு ஆண்கள் மூன்று பெண்கள்... இளைய பெண் லக்சுமியைத் தவிர அறுவருக்கும் கல்யாணமாகிவிட்டது. அவர்கள் இங்குதான் வேளாண்மையோடு சீவிக்கின்றுர்கள்- பரம்பரை பரம்பரையாக நாங்கள் இந்தக் காட்டுக் கிராமத்தில் காட்டான்களாக வாழ்கின்றோம். கல்வி, உத்தியோகம். நகரவாழ்வு என்பன எமக்குக் கிடைக்கவில்லை... பட்டினத்திற்கு அடிக்கடி சென்றிருக்கிறேன். அங்கு என் பையன்களை ஒத்தவர்கள் இருக்கின்ற நிலையையும்... அவர்களின் ஆடையணிகள், ஸ்ரைல், உத்தியோகம்... ஒப்பிடும் போது மனது சங்கடப்படுகின்றது. எமது பிள்ளைகளுக்கு அவை கிட்டக் கூடாதா? கிராமத்தவர்கள் என்ன சபிக்கப்பட்ட ஜன்மங்களா...?'' பெரியவிதானையாரின் ஆழ்மனத்திலிருந்து வார்த்தைகள் ஆவேசமாகப் பிறந்தன. கனகவடிவேலர் வியப்புடன் அவரைப் பார்த்தார்.

புதியதொரு அனுபவம். அக்கரைக்கு இக்கரை பச்சை என்பது இதுதானே!

அமைதியும் நிம்மதியும் சூழலில்லை, மனதில்தான் இருக்கின்றனவே?

''என்ன பேசாமலிருக்கிறீர்கள், சேர்? என்று பெரிய விதானையார் கேட்டார்.

''இதற்கு என்ன சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் நினைப்பதுபோல பட்டின வாழ்க்கை இல்லை, விதானையார்! உங்களுடைய கிராம வாழ்க்கையின் இனிமையைப் பார்த்து நான் பொறுமைப்படுகின்றேன்...''

''நீங்கள் என்னதான் சொன்னலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். எனது கடைசி மகளுக்கு இந்தக்கிராமத்தில் கலியாணம் செய்து கொடுக்கமாட்டேன். பட்டினத்தைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தனுக்குத்தான் லக்சுமியைக் கட்டிக் கொடுக்கவிருக்கின்றேன்...''

''அதில் ஒரு தவறுமில்லை, விதானையார்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்சுமியைக் கனகவடிவேலர் கண்டிருக்கிருர். காட்டுப் புஷ்பம் மாதிரி எப்போதும் மலர்ச்சியுடன் காணப்படுவாள்; கவர்ச்சியும் குறும்புத் தனமும் நிறைந்த பெண். அந்தக் கிராமத்தின் இளவரசி அவள் தான்.

''உங்கள் பிள்ளைகள் எப்படி; சேர்?...''

''மூத்த பையன்கள் இருவரும் குடும்பமாக லண்டனில்...... மூத்தமகள் புருஷனுடன் கனடாவில். கடைசிமகன் சீராளன்...?' கனகவடிவேலரால் தொடர்ந்து பேசமுடியவில்லை; தொண்டைக்குள் ஏதோ திரளாக அடைப்பது போன்ற உணர்வு. முகம் மாறி, அவஸ்தையின் கோடுகள் படிந்தன. பேச்சை நிறுத்தி விட்டு, வெளியே இருசா ஊடுருவிப் பார்த்தார். அவரது சங்கது டத்தைப் பெரிய விதானையார் புரிந்து கொண்டார்.

''கேட்கக்கூடாததைக் கேட்டுவிட்டேன் போலிருக்கிறது...ல்

''இல்லையில்லை... சொல்லுறேன்...''

அவர் மீண்டும் இருளை ஊடுருவிப் பார்த்தார். காதுகளிலொரு குரல் முழுவேகத்துடன் இதயத்தை அப்படியே உறைய வைக்குமாப்போல ஒலித்தது.

''டடி... என்னைக் காப்பாற்றுங்க... எனக்கு ஒன்டும் தெரியாது... இவர்கள் பிடிச்சுக் கொண்டு போருங்களே...? டடி...... காப்பாத்துங்க, டடி... டடி...'' அந்தப் பயங்கரமான இரவு? சீராளன் பெருங்குரலில் அலறினன். பதினெட்டு வயது, முதிரா இளைஞன். அவர் செய்வது அறியாது மரமாக நின்றிருந்தார்

அன்று இரவு,

திடீரென அவர் வீட்டை இராணுவத்தினர் சோதனையிட்டனர். கணத்து சப்பாத்துகள் நிலத்தில் உராய்ந்து ஒலியெழுப்ப கரங்களில் மெசின் கண்களுடன் இராணுவத்தினர் வீட்டிற்குள் நுழைந்தனர், வீடு முற்ருகச் சோதனையிடப்பட்டது. சீராளனின் பாடநூல் ஒன்றினுள் இருந்து தடை செய்யப்பட்ட இயக்கமொன்றின் 'நோட்டீஸ்' அவர்களின் கரங்களில் கிட்டியதும், இதற்காகத்தான் வந்தவர்கள் போல ஆரவாரித்தார்க.

பருந்து தாழ்ந்து கோழிக் குஞ்சொன்றை கௌவுவதுபோல சீராளனை அவர்கள் பற்றினர். அவர் கண்முன்னலேயே.........

அவன் அலறித்துடித்தான்.

''டடி... என்னைக் காப்பாத்துங்க. எனக்கு ஒன்டும் தெரியாது ரேட்டில தந்த நோட்டீஸ்... டடி... டடி... காப்பாத்துங்க...''

பதினைந்து நாட்களின் பின்பே அவனை அவரால் இராணுவ முகாமிலிருந்து வெளியில் கொண்டுவர முடிந்தது. அவன் உருக்குலைந்து காணப்பட்டான். முகத்தில் கவலையும் வன்மமும் குடியேறியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி சிந்தனை வயப்பட்டு அமர்ந்திருந்தான்; அவனை லண்டனுக்கு அல்லது கனடாவிற்கு அனுப்புவதற்கு ஆயத்தங்களை அவர் செய்துகொண்டிருந்தபோது ஒரு நாள் அவன் காணுமல் போனுன்

பெரிய விதானையார், கனகவடிவேலரைக் கவலையோடு பார்த்தார்.

"நாட்டு நிலைமை அப்படித்தான் இருக்கிறது." என்ருர் அதற்காகவா பட்டினத்தைவிட்டு இங்கு வந்தீர்கள்?"

பெரிய விதானையாரை, கனவடிவேலர் ஆழமாக ஏறிட்டு நோக்கினுர்; 'இல்லை' என்பது போலத் தலையசைந்தது.

"துயரைக் கண்டு ஓடுபவன் நானல்ல. இயற்கையின் நியதி என்றுதான் நான் எதனையும் எடுத்துக் கொள்கின்றேன். மகிழ்ச்சியையும் துயரத்தையும் ஒன்ருகக் கருதும் மனப்பக்குவம் எனக்கில்லை. என்ருலும், துயரத்தைச்கண்டு துவண்டுவிழ நான் தயாராகவில்லை! நான் இங்கு வந்தது அத் துயரத்தை மறக்கவல்ல. அத்துயரத்தை இயற்கையோடு கலந்து கொள்ள...

கனகவடிவேலரின் வார்த்தைகள் புரிவதுபோலவும் புரியாதது போலவும் பெரிய விதானையாருக்குப்பட்டது. வியப்போடு கனகவடிவேலர் விழிக்க, சிரித்தார்.

"அதை விடுங்கள்... பெரிய விதானையார் மகளுக்குப் பட்டினத்தில் யாரையாவது பார்த்து வைத்திருக்கிறீர்களா?"

"லக்சுமிக்கா?..."

"வேறு ஆருக்கு?..."

"நான் ஒருவனைப் பார்த்து வைத்திருக்கிறேன். அவன் பட்டினத்து வாசிதான். ஆனல், இங்குதான் இருக்கிருன். என் வீட்டிற்கும் அடிக்கடி வருவான்... லக்சுமியில் அவனுக்குச் சிறிது விருபம் இருப்பது போலப்படுகிறது..."

"யார் என்று இனி நீங்கள் கூறத் தேவையில்லை...எனக்குப் புரிகிறது? புது விதானையார் செல்வச்சந்திரன் தானே?"

பெரிய விதானையார் பெருமையுடன் கனகவடிவேலரைப் பார்த்தார்.

"சரியாகக் கண்டு பிடித்துவிட்டீர்கள், சேர்..."

"அவன் போக்கு ஒத்துவருமோ? இந்தக் கிராமத்தைச் சுரண்டுபவர்கள் நீங்களும் பெரிய கமக்காரரும் தான் என்று அன்று வாதிட்டான்"

பெரிய விதானையார் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னப்பொடியன் தாடே ? அந்த வயது அப்படித்தான் பேசச் சொல்லும். கலியாணம் செய்தால் எல்லாம் சரியாகிவிடும். இப்ப அவர் ஒரு மோட்டார் சயிக்கில் வாங்கப் போமுராம் கொஞ்சக்காசு கடன் கேட்டிருக்கிமுர் கொடுக்கப் போறன்...",

"அப்ப எல்லாம் முடிவான விசயம் போல..."

"அப்படிச் சொல்லேலாது. இனித்தான் கதைக்க இருக்கிறன்..."

பெரிய விதானையார் சிறிது நேரம் இருந்து பேசிவிட்டுச் சென்முர். அவர் விடைபெற்றுச் சென்றதன் பின்னர், லக்சுமிக்கு செல்வச்சந்திரன் பொருத்தமானவனு என மனம் எண்ணமிட்டது.

கன்னி கழியாத அழகுமலர், அவள். பெண்மையின் சகல அம்சங்களையும் அனுபவித்துணர்ந்தவன் செல்வச்சந்திரன்!

அவரின் மனம் சங்கடப்பட்டது.

அதிகாலையின் இனிய மலர்ச்சியில் ஆற்றில் இறங்கிக் குளித்துவிட்டு, கரையேறியபோது தூரத்தில் ஒருவன் நடந்து வருவது தெரிந்தது. அருகில் வந்தபோது கனகவடிவேலர் அவனை அடையாளம் கண்டுகொண்டார்,

தோளில் ஒரு சோடரியும் வலக்கரத்தில் ஒரு கூரைக்குடுவையும் அரையில் அதேமண் சாயமேறிய வேட்டித்துண்டுமாக முத்தையா நின்றிருந்தான். அவரைக்கண்டதும் அவன், "எங்கே போறியள் என்றுபட்டுப கேளாதையுங்கோ, இஞ்சினியர் ஐயா நானே சொல்லி விடுகிறேன்..." என்முன்.

சகுனத்தில் அவனுக்கு அதிக நம்பிக்கை இருந்தது போலும்" கனகவடிவேலர் சிரித்தார்.

"நீ புறப்பட்டிருக்கும் கோலத்தைப் பார்த்தால், தேனெடுக்கப் புறப்பட்டிருக்கிமுய் போலத் தெரியுது... அப்படியென்ருல் என்னை மட்டும் கூட வரவேண்டாம் என்று சொல்லிவிடாதை. நானும் உன்னுடன் வரப்போறன்..."

முத்தையா அவரை வியப்புடன் பார்த்தான். அவன் பார்வையில் அவநம்பிக்கை தெரிந்தது.

"நீங்களோ...?"

"ஏன்...? வரப்படாதே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் காடெல்லாம் அலைய உங்களால் முடியாது... சிலவேளை மதியமும் கழிஞ்சும் மாலையுமாகலாம்... பசி, பட்டினி களைப்பு இல்லாமல் உங்களால் வரமுடியாது, ஐயா, நீங்கள் இருங்கோ... தேன் நான் கொண்டு வந்து தாறன்..."

"தேன் எனக்குத் தேவையில்லை. நீ தேன் எப்படி எடுக்கப் போகிருய் என்று பார்க்கவாறன், முத்தையா..."

கனகவடிவேலர் குழந்தைமாதிரிக் கெஞ்சுவதாகப்பட்டது.

"சரி ஐயா... இரண்டு பேரும் சாப்பிட்டு விட்டு, ஒரு பார்சலையும் கட்டிக்கொண்டு... கையில் ஏதாவது ஒரு கத்தியை கோடலியை எடுத்துக்கொண்டு சுறுக்கா வாருங்கோ. இண்டைக்கு உங்கட அதிர்ஷ்டத்தை பார்ப்பம்..."

"நீயும் வா, முத்தையா... இரண்டுபேரும் சாப்பிட்டுவிட்டு போவம்..."

முத்தையா அவ்விடத்தில் கோடாரியையும், சுரைக்குடுவையையும் வைத்துவிட்டு அமர்ந்து விட்டான்.

"திரும்பிப் போகக் கூடாது, இஞ்சினியர் ஐயா... நீங்க போய்விட்டுக் கெதியாக வாருங்கோ, நான் இங்கைஇருக்கிறன்..."

அந்தக் காட்டுமனிதனின் சமூக நம்பிக்கைகளை அவர் புரிந்துகொண்டார். பரம்பரையாக சமூகம் சில நம்பிக்கைகளையும் அவநம்பிக்கைகளையும் உருவாக்கி விட்டிருக்கிறது.

அவர்கள் இருவரும் சலம்பை ஆற்றைக் கடந்து, அக்கரைக் காட்டினுள் புகுந்தார்கள். அவர்கள் காட்டிற்குள் புகுந்த முதற் செய்தியை, ஆற்றுமந்தியொன்று உறுமி காட்டிற்குத் தெரிவித்தது. கிளைதாவிய மந்திகள் சலசலப்பெழுப்பாமல் கிளைகளிடையே தம்மை மறைத்து கொண்டன.

காட்டு மரங்களிடையே வளைந்தும் நெளிந்தும் ஒடுங்கிய ஒருபாதை சென்றது. மனிதர்களின் காலடிகள் அப்பாதையில் அடிக்கடி பதிந்திருக்க வேண்டும்.

"இப்படியே போனல் கரடிவிழுந்தமடு வரும், ஐயா. முன்பு அது சரியான காடு. இப்ப ஆக்கள் வெட்டிக் குடியிருக்கினம் 1977 கலவரத்தில தெற்கேயிருந்து வந்தவர்கள் இந்தப்பகுதியில காடு வெட்டிக் குடியேறியிருக்கினம்... நானூறு குடும்பம் வரை இருக்குது... சுத்தவரக்காடு. நடுவிலே இருக்கினம். பொறுத்த யானைக்காடு... எப்படித்தான் இருக்குதுகளோ ?"

அவர்கள் காட்டினூடே நடந்து சென்ருர்கள். செடிகளையும் கொடிகளையும் விலத்தியபடி நடந்து செல்வது மனதுக்கு இதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது, ஏதாவது மிருகங்கள் கண்ணில் தென்படலாம் என அவர் ஆவலோடு அங்குமிங்கும் பார்த்தார். எதுவுமே காணப் படவில்லை.

அவர்கள் வந்த பாதையின் முடிவில் வெட்டைவெளி யொன்று விரிந்து கிடந்தது. மழைகாலத்தில் இந்த வெட்டை யில் நீர் தேங்கி நிற்குமென்பது, வெட்டையின் நடுவில் சிறிய குண்டாக நீர் கலங்கி இருப்பதிலிருந்து தெரிந்தது. பலவிதமான மிருகங்களின் காலடிகள் அந்த நீர்நிலையைச் சுற்றித் தெரிந்தன

வெட்டையை கடந்து ஏறியபோது, குடிசைகள் தெரிந்தன மூத்தையா கூறிய காடுவிழுந்தமடு குடியேற்றம் இதுதான் என் பதைக் கனகவடிவேலர் புரிந்து கொண்டார்.

காடு அழிச்சப்பட்டு மக்கள் குடியேறியிருந்தார்கள். ஒப்பர வாகக் காடு அழிக்கப்பட்டில்லை, குடிசைகளைச் சுற்றி மந்துக் காடுகள் வளர்ந்திருந்தன, பெரிய மரங்களின் அடிக்கட்டைகள் நிலத்தில் நீக்கப்படாது, குத்திட்டு நின்றன,

பாதையில் யானைகளின் லத்திக்கும்பங்கள் காணப்பட்டன மூத்தையா, லத்திக்கும்பம் ஒன்றின் மீது கால்வைத்து, சூட்டை அவதானித்தான்.

"ராத்திரி யானையள் இங்கு நின்றிருக்கினம்..."

மூத்தையாவின் கணிப்பு பொய்க்கவில்லை. அவர்கள் சிறிது தூரம், நடந்து சென்றபோது ஒர்பலாக்கப்பலர் கூடிக்கவலையுடன் நிற்பது தெரிந்தது. அவர்களின் குடிசைகளில் 'பின்னந்து' வரை யில், யானைகளால் இழுந்து எறியப்பட்டுக் கிடந்தன. குடிசைக ளுள் கிடந்த அரிசி, நெல், உப்பு எதையும் மிச்சம் விடாது யானைகள் தின்றுவிட்டு, சட்டிபானைகளையும் உடைத்து விட்டுச் சென்றிருந்தன. தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் எதுவும் நிகழ்ந் திருக்கவில்லை.

கனகவடிவேலர் நடந்தவற்றை அக்கறையுடனும் கவலையு டனும் விசாரித்தார்.

"யானைகளை இப்பகுதியிலிருந்து அகற்ற வழியில்லையா...?" என்று ஒருவனைக் கேட்டார்.

"இந்தப்பகுதியில மூன்றுநாலு துவக்குகள் முன்பிருந்தன அவற்றை ஒருநாள் பொலீசார் வந்து எடுத்துச் சென்றுவிட்டார் கள். திருப்பித் தரவில்லை நாங்கள் இருக்கும் காணிகளுக்குப் பேமிற் இல்லையாம். அத்துமீறி அடாத்தாகக் குடியேறியிருக்கி றமாம். அதனால் எங்களுக்காக அதிகாரிகள் எதுவும் செய்யமாட் டார்களாம். யானைகளால் வீடுகள் அழிந்தன. இருபது பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை செத்திருக்கிறுர்கள், ஐயா! எதுக்கும் நட்டஈடு இல்லே... காரணம், காணிக்குப் பேமிற் இல்லேயாம்..."

"பேமிற் ஏன் எடுக்கவில்லே...?"

"நாங்க நாடற்றவர்களாம். பிரசாரவுரிமைகள் உள்ளவங்கள் இங்க இருக்கிறுங்கள். ஆனல், கலவரத்தில அந்தப் பத்திரங்க ளேயெல்லாம் தொலேத்திட்டாங்கள். உயிரைக்காப்பாற்ற ஓடும் போது, பத்திரங்களேயும் எடுத்துக்கொண்டா ஓடமுடியும்? அது மாத்திரமல்ல, நாங்க குடியேறியிருக்கிறவிடம் றிசேவேசன் காடாம்..."

அவர்களின் அவல வ வை கனகவடிவேலர் இரக்கத்துடன் பார்த்தார்.

"பதினெழு குடும்பங்கள் இன்றைக்கு நடுத்தெருவில. ஐயா... அன்றுடம் உழைத்துச் சாப்பிடுபவர்கள்! பதினேழு குடிசைகளே யும் அவர்களால் இனிக்கட்ட முடியுமா? குடிசையைக் கட்ட ஓலே...? நூறு ஓலே நூறு ரூபாய்... எங்கை போவார்கள்..."

"இவ்வளவு குடிசைகளேயும் திருப்பிக்கட்ட எத்தனே கிடுகு கள் வேணும்...? என்று கனகவடிவேலர் கேட்டார்.

"ஆயிரத்திஎழுநூறு வேணும் சேர்..."

"சரி... நீங்க நாளேக்கு அறுகுவெளிக்கு வாங்க. நான் கிடுகு வாங்கித் தருகிறேன்." என்ற கனகவடிவேலரை, அவர்கள் வியப்புடன் பார்த்தனர். முத்தையா அவரை அதிசயப்பிராணி யைப் பார்க்குமாப்போலப் பாாத்தான்.

அவர்கள் தொடர்ந்து நடந்து, மீண்டும் காட்டிற்குள் புகுந்தார்கள்.

"இஞ்சினியர் ஐயா... நீங்கள் இப்படிச் செய்திருக்கக் கூடாது..." என்றுன் முத்தையா.

"ஏன்...? ஏழைகள்... பாவங்கள்..."

"ஆனேக்காட்டுக்கை குடியிருப்பை ஏற்படுத்திப்போட்டு, யானே அழிக்குதென்றுல், யார் குற்றம்...?"

"சரி பிழை பார்க்கிறவேளே இதுவல்ல, முத்தையா... அலே லப்பட்டு வந்து இருக்கக்கூட இடமில்லாமல் குடியேறி இருக்கு துகள். ஆபத்துக்கு உதவாவிட்டால் என்ன மனிதன்...?"

"என்ரை வீடும் ஒழுகுது ஐயா..."

கனகவடிவேலர் சிரித்தார்.

"உனக்கும் வேணுமென்றுல் நூறு கிடுகு வாங்கித்தாறன்..."

"நீங்கள் கெதியில் இந்த ஊரைப் பழுதாக்கிவிடப் போகி றீர்கள், ஐயா!" என்றுன் முத்தையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையா அவருடன் பேசிக்கொண்டு நடந்தபோதிலும், கண்கள் தீர்க்கமாக சூழலை அவதானித்தவாறு வந்தன. நண் பகல் நெருங்கிக் கொண்டிருந்தது.

"என்ன முத்தையா, இது தேன் எடுக்கிற காலந்தானே?..."

கனகவடிவேலரை முத்தையா ஏறிட்டுப் பார்த்தான். அவன் விழிகளில் சற்று சினத்தின் ரேகைகள் தெரிந்தன.

"பாலைமரங்களில் பூக்கள் பஞ்சுபிடிக்கத் தொடங்கியிருக்குது; அப்ப இதுதான் தேன் எடுக்கிற காலம், ஐயா! உங்களுக்குக் களைப்பு வந்திட்டிது போல... பொறுங்கோ... இடத்துக்கு வந்திட்டம்...!"

"இஞ்சைபார், முத்தையா... இந்த மரத்தில பெரிய பொந்து இருக்குது. தேன் கூடு அதுக்குள் இருக்கும்... கையை விட்டுப் பாரன்..."

கனகவடிவேலர் சுட்டிக் காட்டிய மரப்பொந்தை பார்த்து விட்டு முத்தையா, பெரிதாகச் சிரித்தான்.

"இதற்குள் கைவிட்டால், தேனீ கொட்டாது... பாம்புதான் கொத்தும்... அந்தப் பொந்துக்குக் கிட்டப் போய்ப்பாருங்கோ... நாகத்தின்ரை மணம் வீசுதெல்லே... ஒரு அவிச்சல் மணம்..."

கனகவடிவேலர் தூரவிலகிக் கொண்டார். இனி வாயைத் திறப்பதில்லை என்ற முடிவையும் எடுத்துக் கொண்டார். அவர் கள் சிறிது நேரம் நடந்து, பலவகைச் செடிகளும் கொடிகளும் பலவர்ணப் பூக்களுடன் மலர்ந்து கிடக்கும் ஓரிடத்தை அடைந் தார்கள். ஒரு சிற்றாற்றின் கரையில், இயற்கையின் பூந்தோட்டம் போல, காட்டுப் பூக்கள் மலர்ந்து சிரித்தன. இவ்வளவு பலவர் ணப் பூக்களை அவர் எங்கும் கண்டவரல்லர்.

சிற்றாற்றின் நீரையள்ளிப்பருகிவிட்டு ஆற்றங்கரையில் காலாற அமர்ந்து கொண்டார்கள். கனகவடிவேலர், துண்டை மணலில் விரித்துவிட்டு, வானத்தைப்பார்த்தபடி தலைக்குக் கீழ் கரங்களை வைத்தபடி படுத்தார்.

மனிதக்குரல்கள் எழாத ஒரு கானகத்தின் நடுவில், சிற்றாற் றின் கரையில் படுத்திருப்பது எவ்வளவு இனிமையான அனுப வம்?

முத்தையா அவரைத்தட்டி எழுப்பினான். அவன் விழிகளில் தேனீ ஒன்று தென்பட்டது. மெதுவாக எழுந்தான். அவன் அத் தேனீயை வெகு அவதானமாகத் தொடர்ந்து சென்றான். கனக வடிவேலர் அவனைத் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீ, அவர்களை வெகுதூரம் அலைகழிக்கவில்லை. சற்றுத் தூரத்தில் காணப்பட்ட ஒரு பருத்த பாக்மரத்தின், கட்புலனுகாத துவாரம் ஒன்றினுள் புகுந்து மறைந்தது.

முத்தையா, தேனீ நுழைந்த விடத்தை கோடரியால் தட்டிப்பார்த்தான். எழும்பிய சத்தத்திலிருந்து, அம்மரத்தின் கோறை இருப்பது புலனாகியது. அவன் முகம்மலர கனகவடிவேலரைப் பார்த்தான்.

கனகவடிவேலர் அவன் தேனெடுக்கும் அழகை வியப்போடு பார்த்தார்.

தேனீ நுழைந்த துவாரம் காணப்பட்ட இடத்தில், கோடரியால் மெதுவாகக் கொத்தி ஆறங்குலச் சதுரத்துவாரம் ஒன்றினை முதலில் அமைத்துக் கொண்டான். பின்னர், வலது கரத்தை நுழைத்து உள்ளே தடவிப்பார்த்தான்.

''புகைபோடவில்லையா, முத்தையா?'' எனக் கனகவடிவேலர் கேட்டார். அவன் அவரைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தபடி, மரத்தின் உச்சியைக் காட்டினான். மரத்தின் உச்சியில் காணப்பட்ட துவாரம் ஒன்றினூடாகத் தேனீக்கள் வரிசையாக வெளியேறுவது தெரிந்தது.

முத்தையா வெகு பக்குவமாகத் தேன் கூட்டிலிருந்து. தேன் வதைகளைப் பறித்து எடுத்துக் குடுவையில் திணித்துக் கொண்டான். விரல்களையும் நக்கிக் கொண்டான். ஒரு வதையின் ஒரு சிறு பகுதியைக் கனகவடிவேலருக்கும் கொடுத்தான்.

அவர் அதனைப் பிய்த்து ஒரு துண்டை வாயிலிட்டுக் கொண்டார்.

''எப்படி ஐயா, இருக்கிறது?''

''தேன்போல இனிக்கிறது...'' என்று கூறிவிட்டு கனகவடிவேலர் சிரித்தார்.

''நான்கு போத்தல் தேறும்...'' என்றான் முத்தையா திருப்தியாக.

''பாவங்கள், எவ்வளவு கஷ்டப்பட்டுச் சேர்த்திருக்குங்கள்...''

''நாங்கள் எடுக்காவிட்டால், கரடி கட்டாயமாக எடுத்திருக்கும். கையால் அறைந்து பட்டையைத் தகர்த்துவிட்டு தேன் வதை, புழுவதை எல்லாவற்றையும் சாப்பிட்டிருக்கும்'' என்றான் முத்தையா.

''பந்திக்கு முந்திவிட்டம்...''

அவர்கள் சிற்றாற்றின் கரையோரமாக நடந்தார்கள். சிற்றாற்றின் நீர் அதிகம் பாயவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேறு பாதையில போகிறமா, முத்தையா?"

"ஓம் ஐயா...இப்படியே போனால் மணல் ஆறு வரும். அங்கிருந்து தெற்கே போனால், சலம்பை ஆறு... அதைக் கடந்தால் அளிகுவெறு"

மதியம் கடந்து, சூரியன் நடுவானிலிருந்து மேற்கே சரியத் தொடங்கினன். இருவரும் ஆற்றங்கரையிலிருந்து, தாம் கொண்டு வந்த உணவைச் சாப்பிட்டனர். சாப்பிடும்போது, கனகவடி. வேலர் கேட்டார்.

"காட்டில ஒரு மிருகத்தையும் காணவில்லை...நீ பயமில்லாமல் கோடாலி ஒன்றுடன் காட்டுக்கு வந்திருக்கிறாய்?..."

முத்தையா அவரைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"மனிதரைக் கண்டால் மிருகங்கள் தூர விலகிவிடும், ஐயா! இந்தக் காட்டில யானை, கரடி இரண்டுந்தான் பயத்துக்குரியவை யானையால தாக்கப்பட்டவரும் கரடியால விருண்டப்பட்டவர்களும் பலரை எனக்குத் தெரியும்... யானையும் கரடியும் மனிதரைக் கண்டால் விலகிவிடும். ஆனால் திடீரென அவற்றின் முன் மனிதர் தோன்றினல் அவை திடுக்காடுபட்டு, தாக்கிவிடுகின்றன..."

அவர்கள் மேலும் ஒரு மணி நேரம் காட்டினூடே நடந்தனர் சீரான பாதையொன்று குறுக்கிட்டது. வண்டில்கள் சென்ற அடையாளம் தெரிந்தது.

அருகில் பறவைகள் பலவற்றின் சத்தமிடும் ஒலியும், சிறகுகளைப் படபடவென அடிக்கும் ஒலியும் எழுந்தன. வானத்தில் நீர்க்காக்கைகளும், கருழுசாக்களும் சஞ்சரித்தன. அவற்றிடையே பழுப்புநிறக் கூழைக் கடாக்கள் இரண்டு பறப்பதைக் கனகவடி வேலர் கண்டார்.

"கூழைக் கடாக்கள், முத்தையா..."

"இந்தக் குளத்தில நிறைய இருக்குதுகள்..."

"அப்ப ஒருக்காப் பார்ப்பம்..."

முத்தையா அவரை ஏறிட்டுப் பார்த்தான். பின்னர் சொன்னான்.

"இந்தப்பாதையில் என் தம்பி முறையான ஒருவன் புலி... வெட்டி இருக்கிறான். நான் அவனை ஒருக்காப் பார்க்க வேணும் ஐயா உங்களுக்குக் குளக்கட்டைக் காட்டுறன். நீங்கள் அதால நடந்து அப்படியே வாருங்கோ. குளக்கட்டு முடியிற இடத்தில இந்தப் பாதையும் வந்து சேருது. அதில நான் உங்களைச் சந்திக்கிறன்..."

கனகவடிவேலர் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். வானில் பறக்கும் பறவைகளைக் குழந்தையின் ஆர்வத்துடன் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கட்டில் அவரை விடும்போது முத்தையா சொன்னான் ''குளக்கட்டை விட்டு வேறு பாதையில இறங்கி விடாதேங்கோ, ஐயா... பிறகு வழி மாறிவிடும்... வழி தெரியாவிடில் அப்படியே அந்த இடத்திலே இருந்திடுங்கோ... காட்டுக்க அலையக்கூடாது...''

''நான் குளக்கட்டாலேயே வாறன்...''

முத்தையா, கீழிறங்கி அணைக்கட்டின் அடிவாரத்தில் சென்ற காட்டுப்பாதையில் நடக்க, கனகவடிவலர் குளக்கட்டில் நடக்கத் தொடங்கினார்.

குளத்தில் ஆயிரக்கணக்கான நீர்ப்பறவைகள் குவிந்து கிடப்பது போலப்பட்டது. அவரைக்கண்டதும், பறவைகள் 'படபட' வென இறகுகளை விரித்துப் பறந்து நடுக்குளத்தில் இறங்கி நீந்தின. ஏராளமான கூழைக்கடாக்கள் நீந்துவதும், தலையை நீரினுள் அமிழ்த்தி மீன்களைப் பிடிப்பதுமாக இருந்தன. குளக்கரையில் வளர்ந்திருந்த மரங்களின் கிளைகளிலும் ஏராளமான பறவைகள் காணப்பட்டன

அவர் அவற்றை இரசித்தபடி மெதுவாக நடக்கத் தொடங்கினார் அகன்று காணப்பட்ட குளக்கட்டு படிப்படியாக ஒடுங்கத் தொடங்கியது. மருதமரங்கள் குளக்கட்டில் ஏராளமாக வளர்ந்திருந்தன.

குளத்தினைப் பார்த்தபடி நடந்துவந்த அவரின் பாதங்களில் ஏதோ தட்டுப்பட்டது குனிந்து பார்த்தார். யானைகளின் லத்திக்கும்பம் என்று மனம் ஒருகணம் திடுக்கிட்டது,

தனிமை உணர்வு. அவரைத் தவிர வேறு எதுவும் குளக்கட்டில் இல்லை.

யானைகள் வழியில் நிற்குமோ? திடீரென எதிர்ப்பட்டால் அவை" திடுச்காட்டத்தில்......''

நினைவு பயத்தைத் தந்தது. கனகவடிவேலர் வேகமாக நடக்கத் தொடங்கினார். குளக்கட்டில் பாம்புப் புற்றுகளும் காணப்பட்டன.

குளக்கட்டு முடிவு பெறுவதாக இல்லை. இரண்டு மைல்கள் வரையில் அவர் நடந்திருப்பார். பயம் மனதில் விசுவரூபமாகச் சூழ்ந்தது. தன்னை யறியாமல் ஓடத்தொடங்கினார். நெற்றியில் வியர்வை துளிர்க்க நெஞ்சு படபடக்க அவர் ஓடினார்.

அவர் முன்னால் இரு உருவங்கள் திடீரென மரம் ஒன்றின் பின் மறைவதை அவர் கண்டார். அப்படியே நின்றுவிட்டார். 'சரா சுளோ...?'

'திரும்பிப் போவோமோ' என்ற எண்ணம் எழுந்தபோது, மரத்தின மறைவிலிருந்து இரு இளைஞர்கள் வெளியில் வந்தார் கள். அ...ர்...ன் ...ங்களில் துப்பாக்கிகள் ...ருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் நீங்கள்? என் இதாலை வைவாறியள்?"

அவர் குளக்கட்டில் ஓடிவர நேர்ந்த சம்பவத்தைச் சொன்ஞர். இளைஞர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்

"பட்டினத்தில் எங்கை இருக்கிறியள்?"

அவர் வீதியின் பெயரைச் சொன்ஞர்.

"வீட்டு நம்பரைச் சொல்லுங்கோ" என்று ஒரு இளைஞன் கேட்டான்

அவர் வீட்டு இலக்கத்தைச் சொன்ஞர்.

"அது உங்க வீடில்லை... அது சீராளன் வீடு..."

"நான் சீராளனின் அப்பா..." என்ருர் வியப்புடன் கனகவடிவேலர். அவர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "தம்பி சீராளன் எப்படி?"

"சுகமாக இருக்கிறன்... நீங்க இப்படியே போங்கோ... பாதைவரும்! எங்களை இங்க கண்டதை மறந்து விடுங்கோ...சேர்"

அவர்கள் இருவரும் அவ்விடத்தில் நிற்காது விரைந்து மறைந்தார்கள். கனகவடிவேலர் சிலகணங்கள் சிலையாக நின்றிருந்தார். இதயத்தின் அமைதி குலைந்தது போல இருந்தது.

காட்டுப்பாதையில் முத்தையா காத்திருந்தான்.

"நான் பயந்து போனேன்... ஐயா! கனநேரமாக உங்களைக் காணவில்லை..."

"இரண்டு விசித்திரமான பறவைகளைப் பார்த்தேன்..." என்ருர் கனகவடிவேலர்.

அறுகுவெளிக் கிராமத்திலிருந்து, மேற்குப் பக்கமாக மூன்று மைல்கள் தூரம் சென்ருல், ஓடக்கரை என்ற மீனவக் குடியேற்றம் ஒன்றினை அடையலாம். இக்குடியிருப்புக்கு அருகில்தான் சலம்பை ஆறு, இரு கிளைகளாகப் பிரிந்து மணல்ஆறு என்றும் உவர்ஆறு என்றும் பெயர் பெற்றுக் கடலை அடைகின்றது. பதினைந்து மீனவக் குடும்பங்கள் இக்குடியிருப்பில், கரையோர மீன்பிடியை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

மாலைவேளையில் கனகவடிவேலர் ஓடக்கரையை நோக்கி சரியுங் கதிர்களின் பொன்னிறம் வானில் பாவுவதைப் பார்த்தபடி, மணல் ஆற்றுவரை நடப்பார். ஆனல். இன்னமும் ஒருதடவையாவது அவர் ஓடக்கரைக்குச் சென்றது கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் ஓடக்கரையிலிருந்து மூன்று பெண்கள் கடகங்களில் மீன்களைத் தலையில் சுமந்துகொண்டு. அவற்றை விற்பதற்காக அறுகுவெளிக்கு வருவார்கள். அவர்களில் ஒருத்தி, பெயர் பாக்கியம். அவர் வீட்டின் முன் சற்று நேரம் தரித்து நின்று. 'ஐயா " என்று குரால் தருவாள்.

கனகவடிவேலர் அவளின் வாடிக்கையாளராக மாறிவிட்டார். மூன்று மைல்கள் தலைச்சுமையுடன் அவள் நடந்து வருவதைக்காண அவருக்குப் பரிதாபமாகவிருக்கும். சிலவேளைகளில் மயிலம்மையைக் கொண்டு அவளுக்குத் தேநீர் தரச் சொல்வார்

கணவன் இரவில் பிடித்து வரும் மீனை, பகலில் எடுத்துச் சென்று விற்றுவருவது மனைவியின் கடமையாக அமைந்தது. ஓடக்கரை மீனவருக்குத் தக்க வருவாய் கிடைப்பதில்லையென்றும் பிடிக்கின்ற புழு மீன்களையும் உடன் நல்ல விலைக்கு விற்கமுடியவில்லையென்றும் பாக்கியம் அடிக்கடி குறைபட்டுக் கொள்வாள் பெரும்பகுதி மீனைக் கருவாடாக்கி, சிப்பமாகக் கட்டி, பட்டினத்திலிருந்து வரும் வியாபாரிகளுக்கு அவர்கள் மதிக்கும் அநியாய விலையில் விற்க நேரிடுவதாகக் கூறுவாள்.

''ஏன் அப்படி விற்கிறியள்?"

"விற்காமல் என்ன செய்வது! வேறுயாருக்கு விற்பது?''

"நீங்களே பட்டினத்திற்கு எடுத்துச் சென்று விற்கிறது தானே...?"

"எங்களிடம் ஒரு எஞ்சின் போட்டும் இல்லை. கட்டுமரத்தில் அவ்வளவு தூரம் கருவாட்டுச் சிப்பங்களைக் கொண்டு போக முடியாது... அங்கிருந்து வருகிற வியாபாரிகளுக்கே விற்கிறோம்... வேறுவழியில்லை..." என்பாள் பாக்கியம்.

அறுகுவெளியில் எப்படி மீன் வியாபாரம்?"

"பட்டின விலைக்கு இங்கு விற்கமுடியுமா? ஏதோ சுமாரா போகுது...''

அவள் தான் ஒருநாள் கதையோடு கதையாக புதியதொரு சங்கதியையும் கூறினாள்.

''நேற்று ராத்திரி பெரியதொரு இஞ்சின் வள்ளம் ஏடக்கரைக்கு வந்தது... அதிலிருந்து பலர் மூடைகளுடன் இறங்கி மணலாற்றுப் பக்கமாகப் போனார்கள்... அந்த வள்ளம் உடனே திரும்பிப் போய்விட்டது. பிறகு, பெரியதொரு கப்பல் கடலில் இருந்து கொண்டு கரையெல்லாம் 'லையிற்' அடித்துப் பார்த்தது... என்னெண்டு ஒன்றும் புரியவில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகவடிவேலர் சிந்தனையில் ஆழ்ந்தார். இந்தக் கிராமத்திலும் தான் எதிர்பார்க்கும் அமைதியும் நிம்மதியும் கிடைக்காது போய்விடுமோ என்ற எண்ணம் எழுந்தது. கிராமத்தில் அமைதி அழிவதற்கான அறிகுறிகள் உருவாகும் நிகழ்வுகள் தோன்றுவதாகப்பட்டது.

மாலை வேளையில் ஓடக்கரை நோக்கிச் செல்லும் மணல் பாதையில் நடக்கும்போது, மனதில் பல்வேறு சிந்தனைகள் எழுந்தன. யாவற்றையும் மீறி. சீராளனின் நினைவு அடிவயிற்றைப் பிசைந்து, நெஞ்சில் அடித்தது.

மணலாற்றின் அந்த மணல் பாதை அடைந்து கடந்து சென்றது தொடர்ந்து நடக்காது, மணலாற்றின் கரையில் அமர்ந்து கொண்டார்.

மேற்கு வானில் மேகத்திரள்கள் நெருப்பாக எரிந்தன.

காட்டுப்பக்கமிருந்து. தோளில் மடித்துக் கட்டிய பிரம்புத் தடிகளைச் சுமந்தபடி ஒரு மனிதன் காட்டில் நடந்து வந்தான். அவனை அவர் அறிவார். காட்டில் பிரம்பு வெட்டிப் பிழைக்கும் கிராமத்து மகன். அடிக்கடி மாலைவேளைகளில் அவனை அவர் சந்தித்திருக்கிறார்.

அவரைக் கண்டதும் அவன் தோளில் சுமந்திருந்த பிரம்புத் தடிகளைக் கீழே போட்டுவிட்டு, அவர் முன் சற்று விலகி அமர்ந்தான்.

"என்ன ஐயா, இங்கை இருக்கிறியள்?" என்று பேச்சை போட்டான். அவன் பெயர் வெள்ளைத்தான். எப்படி அப்பெயர் அவனுக்கு நிலைத்தது என்பது அவனுக்குத் தெரியாது, அறுகு வெளியில் பிரம்பு வெட்டுகின்ற தொழிலை அவன் ஒருவன் மட்டுமே செய்து வருகின்றான். ஆற்றங் கரையோரங்களில் வளர்ந்து பரந்து கிடக்கும் பிரம்புகளை அடிநறுக்கி, உருவி எடுப்பதற்குத் தனித்திறமை வேண்டும்.

மாத்தறையிலிருந்து ஆறுவருடங்களுக்கு முன் சிங்களபாஸ் ஒருவர் இந்தக் கிராமத்திற்கு அடிக்கடி வருவார். அவரோடு சேர்ந்து வெத்திலையும் பிரம்பு வெட்டக் காட்டிற்குப் போய் வந்தான். அவரிடமிருந்து கற்றுக்கொண்ட தொழில் தான் இது இப்போது பாஸ் இங்கு வருவதில்லை. வெத்திலையால் அத்தொழிலை விடமுடியவில்லை.

காரணம், அவனுக்கு வேறு தொழில் தெரியவில்லை. சேகரித்த பிரம்புகளைப் பட்டனத்திலிருந்து வந்து ஒருவன் வாங்கிச் செல்வான். அவன் கொடுக்கும் விலை பிரமாதமாக இல்லாவிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அவன் கொடுக்கும் பணத்தில்தான் வெத்திலையின் குடும்பம் ஓடியது.

"என்ன யோசனையாக இருக்கிறியள்?" என்று வெத்திலை மீண்டும் கேட்டான்.

"ஒன்றுமில்லை... அதுசரி வெத்திலை, எப்பவும் இப்படியே பிரம்பு வெட்டப் போறியே? இப்ப ஆர் பிரம்பிலே கதிரை பின்னுகினம். பிளாஸ்ரிக் வயர்களாலேயெல்லோ பின்னுகினம்..."

"எதிலை பின்னினாலும் ஐயா, நீங்கள் இருந்து பாருங்கோ மீண்டும் பிரம்புக்கு வருவினம்..."

தூரத்தில் மணல்வீதியில் புழுதி கிளம்பியது. மோட்டார் சயிக்கில் ஒன்று அந்தக் கிராமத்தின் வீதியில் முதன் முறையாக விரைந்து வந்தது. அமைதியின் ஆத்மாவைச் சிதைத்துச்சீரழித்த படி, புகையைக் கக்கிச் சூழலை மாசுறு வைத்தவாறு விரைந்து வரும் அந்த மோட்டார்சயிக்கில் கிராமத்தின் புதியதொரு பிறப்பின் ஆரம்பத்திற்கு வித்திடுவதாக அவர் உணர்ந்தார்.

பாதையில் நின்றிருந்த மாடுகளும், ஆடுகளும் மோட்டார் சயிக்கிளின் ஒலிகேட்டு விரைந்து நெறிகெட்டு ஓடின. கிராமத்தவர்கள் பலர் கூடி வேடிக்கை பார்த்திருப்பரர்கள்.

கனகவடிவேலரின் மனதில் சுருக்கென்று ஏதோ தைத்தது. இனந்தெரியாத வேதனை ஆழ்மனதில் விரிந்தது.

செல்வச்சந்திரன் அவர் அருகில் வேகமாக வந்து, மோட்டார் சயிக்கிலை நிற்பாட்டினான். மோட்டார் சயிக்கிளில் இருந்தவாறே அவரைப் பெருமிதமாகப் பார்த்தான்.

"இங்கை ஒரு வாகனமில்லாமல் எதுவும் செய்யமுடியாது. சேர். அதுதான் வாங்கினனான்... பட்டினத்திலேயிருந்து இரண்டு மணி நேரத்திலை இங்க வந்திட்டேன். எவ்வளவு நேரமிச்சம்?'

"என்னவிலை விதானையார்?" என்று வெத்திலை கேட்டான்

"இருபத்திரண்டாயிரம்ரூபா..."

"ஆ... இருபத்திரண்டாயிரமோ...?" என்று வியப்பின் எல்லையில் வெத்திலை வாயைப் பிளந்து நின்றான். இருபத்திரண்டு ரூபாய்களைக் கூட ஒருநாளைக்கு முழுமையாகக் காணாத இந்த மனிதனின், மனதில் ஆசையை இந்த யந்திரம் படரவிட்டுள்ளது

கிராமத்தவரின் தேவைகள் கூடப்போகின்றன. அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பில்லாமல், துயரத்தில் ஆழப்போகிறார்கள்.

"வாற கிழமையிலிருந்து அறுகுவெளிக்கு பஸ் ஓடப்போகுது சேர்! ஒருவிதமாக ஏ. ஜி. ஓ. வைக் கொண்டு, கூட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில சொல்லுவிச்சு ஓத்துக் கொண்டிட்டினம். இனி இந்தக் கிராமத்துக்கு விடிவுதான்...''

பஸ் ஓடுவதால் ஒரு கிராமத்துக்கு விடிவு வந்து விடுமெனச் செல்வச்சந்திரன் நம்புகிறுன். பழமை மாருத இந்தக் கிராமத்தின் நிம்மதியைக் குலைத்துவிடும் நவீனத்துவத்தின் வருகைகள் என அவர் எண்ணமிட்டார். நவீனத்துவத்தின் வருகையைத் தடைப்படுத்த முடியாது தான்.

இனி அடிக்கடி இக்கிராமமக்கள் பஸ்சில் பட்டினம் போவார்கள்... புதிய தேவைகளைப் பழகிக் கொள்ளுவார்கள். தேவைகள் கூடக் கூடப் பணமும் தேவைப்படும். பற்ருக்குறையினுல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவியலாத ஆற்ருமையினுல், குடும்பங்களின் பிரச்சினைகள் தலைதூக்கும்.

தனிமனித நிம்மதி குலையை, கிராமத்தின் அமைதியும் அழியும்.

''பஸ் முதன்முதல் இந்தக்கிராமத்துக்கு வருகிற நாளைப் பெரிய விழாவாகக் கொண்டாடப்போகிறேம். ஜீ ஏ. வாருர் — அன்றைக்கே இந்தக் கிராமத்தில் ஒரு வாசிகசாலையையும் தொடங்கப் போறம். நீங்களும் பங்குபற்றவேண்டும், சேர்...'' என்று கூறியவாறு அவன் மோட்டார் சயிக்கிலை 'ஸ்ராட்' பண்ணி, ஓடக்கரை நோக்கி வேகமாகச் சென்ருன்.

''எங்கட கிராமத்துக்கு எல்லாம் வரப்போகுது...'' என்றபடி வெத்திலை, பிரம்புக்கட்டை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு நடந்தான். கனகவடிவேலர் அவனைத் தொடர்ந்தார்

செல்வச்சந்திரனின் மோட்டார் சயிக்கில் கிளப்பிவிட்ட புழுதி இன்னமும் பாதையில் அடங்கிவிடவில்லை.

இருள் கவிந்தது. மண்ணை மூடியவேளையில் அவர் வீட்டிற்கு வந்தார். தலைவாசலில் அரிக்கன் லாம்பைக் கொழுத்தி மாட்டி விட்டிருப்பாள், மயிலம்மை.

அவளைக் காணேம். வீடு இருளுள் அமிழ்ந்து கிடந்தது. நெருப்புப் பெட்டியை எடுத்து, விளக்கை ஏற்றி மாட்டியபோது மயிலம்மையின் வீரிட்ட அழுகுரல் எழுந்தது. அவள் தன் குடிசையிலிருந்து பெருங்குரலில், ''என்ரை ராசாவே'' என்று அலறினுள்.

கனகவடிவேலர் விரைந்து, மயிலம்மையின் குடிசையை நோக்கி ஓடிச்சென்ருர். அவள் குடிசைக்குள்ளும் வெளியிலும் பலர் குழுமி நின்ருர்கள். உள்ளே பெண்கள் கட்டியணைத்து அழும் குரல் கேட்டது.

''மாரியப்பன் செத்துப் போனுன், ஐயா...'' என்ருன் கந்தசாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தமட்டிலாவது போனுனே...?'' என்முன். இன்னெருவன் ''நல்லாக்கிடந்து அழுந்திவிட்டான்! இனிதான் மயிலம்மமைக்கு நிம்மதி...''

கனகவடிவேலரின் செவிப்பறைகளில் பலரின் வார்த்தைகளும் விழுந்து ஒலித்தன. மயிலம்மை விதவையாகிவிட்டாள். எந்த நெற்றித்திலகத்தைத் பாதுகாக்க அவள், கஷ்டப்பட்டாளோ அது அழிந்துவிட்டது.

அவர் பிரேதத்தைத் தரிசிப்பதற்காகக் குடிசைக்குள் நுழைந்தார். அவரைக்கண்ட மயிலம்மை துயரத்தை அடக்க முடியாதவளாக ஓடிவந்து அவர் கால்களைக் கட்டிக்கொண்டு பெருங்குரலில் அழுதாள்.

''ஐயா... என்ரை ராசா போயிட்டார்...''

அவர் உள்ளம் நெகிழ்ந்தது. விழிகளில் நீர் பனித்தது. வெளியில் வந்தார்.

செய்தியைக் கேள்விப்பட்டு முத்தையா ஓடிவந்தான்.

''மயிலம்மையின்ரை இறுதிச்சடங்கை வடிவாகச் செய்துவிடு முத்தையா நான் செலவு செய்கிறேன்...'' என்முர் கனகவடிவேலர்.

கரும்பாலைப்புலவில் அன்றிரவு சோகம் குடிகொண்டிருந்தது. இடையிடையே சோகம் தாளாமல் மயிலம்மை வீரிட்டுக்கத்துவது இரவின் நிசப்தத்தைக் குலைத்தது.

கனகவடிவேலர் தனது வீட்டின் திண்ணையில் சாய்ந்து படுத்திருந்தவாறு வானத்தைப் பார்த்தார். நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டி சிரித்தன.

'யோகம்...'

இதயத்தின் கதவங்களைத் தட்டியவாறு ஒரு குரல் ஒலித்தது. அவரோடு வாழ்ந்த அவள்; மனைவி, நான்கு ஆண்டுகளுக்குமுன் ஓரிரவு இப்படித்தான் அவர் முற்றத்தில் அமர்ந்திருந்தார். உள்ஹோலில் அவள் மரணப்படுக்கையில் கிடந்தாள் சுற்றிவரப் பிள்ளைகளும் உறவினர்களும் நின்றிருந்தனர்.

பிள்ளைகள் விம்மினுர்கள்.

அந்தக் கோலத்தில் அவளைக் காணும் தைரியம் அவருக்கு இருக்கவில்லை.

எவ்வளவு இனிய நாட்கள்?

அவளோடு வாழ்ந்த நாட்களின் இனிய நினைவுகளை அவர் இரை மீட்டுப் பார்த்தார். புதுமணப்பெண்ணுக அவள் தன்னருகில் அமர்ந்திருந்ததிலிருந்து, இன்று அரைவயதில் மரணப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கையில் கிடப்பதுவரையில் வாழ்வின் இனிய பக்கங்கள் புரட்டப்பட்டுள்ளன.

'யோகம்... உன்னை இழந்து வாடுகிறேன்?'

இருந்தாற்போல ஹோலில் வீரிட்டழுகுரல் ஒலித்தது. அவர் புரிந்து கொண்டார். இதயம் ஒருகணம் நின்று, துடித்தது.

''டடி...'' என்றபடி சீராளன் வெளியில் ஓடிவந்தான். அவனுக்கு அப்போது பதின்மூன்றுவயது. தாயின் அரவணைப்பில் வாழ்ந்தவன். யோகத்தின் செல்லப் பையன்,

''டடி... மம்மி போயிட்டா... மம்மி எங்களை விட்டுப் போயிட்டா... மம்மி... ஐயோ... மம்மி...'' என்று அவன் பெருங்குரலில் அலறியவாறு ஓடிவந்தான். அவர் அவனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

''டடி... இனி மம்மி வரமாட்டாவா...? வரமாட்டாவா டடி...?''

அவர் அப்படியே கண்களை மூடிக்கொண்டார். மோட்டார் சயிக்கில் ஒன்று வாசலில் வந்து நிற்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். தான் இருப்பது அறுகுவெளி என்பது ஒருகணம் மறந்துபோக, பட்டின வீட்டில் இருப்பதாக எண்ணிக்கொண்டவர், மயிலம்மை அழும்குரல் கேட்டதும் சுய நினைவுக்கு வந்தார்.

கிராமத்தின் குரல்கள், யந்திரத்தின் குரலுள் அடங்கிவிடப் போகின்றனவோ?

செல்வச்சந்திரன், மயிலம்மையின் குடிசைக்குச் சென்று மாரியப்பனின் சடலத்தைப் பார்த்துவிட்டு, அவர் வீட்டுக்கு வந்தான். திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

''மயிலம்மைக்கு ஒரு சனிவிட்டுது... எத்தனை வருசமாச் சாகாமல் கிடந்திருக்கிறுன்...'' என்றுன், செல்வச்சந்திரன். அவன் வார்த்தைகள் கனகவடிவேலரின் உள்ளத்தில் வேகமாகவும் கொடூரமாகவும் தாக்கின.

''அப்படிச் சொல்லக்கூடாது... அவளுக்கென்று இருந்த ஒரு துணை போயிட்டுது...''

''என்ன துணை, சேர்? அவளுக்கு அவன் இருந்தும் இல்லாதது போலத்தான். அவளுக்கு அவனுல் என்ன குடும்பசுகம்?..' என்று சிரித்தான், அவன்

''குடும்பசுகமும் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம்தான்! ஆனுல், அதுதான் வாழ்வாகாது. பாரம்பரியக் கட்டுப்பாடுகளுடன் தம்மைச் சிறைப்படுத்தியிருக்கும் நம்நாட்டுப் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வாழ்க்கையிலும் பார்க்க உளவாழ்க்கையில் திருப்தி காண்கின்றார்கள். நீர் சொல்வது போல குடும்பசுகம் மட்டுந்தான் வாழ்க்கை என்றால், நிச்சயமாக நான் சொல்வேன் நமது சமூகத்தில் நாற்பதுசத விதமான பெண்கள் தங்கள் கணவர்மாரை விலத்தி... டிவேர்ஸ்... பண்ணியிருப்பார்கள்...''

செல்வச்சந்திரன் வியப்புடன் அவரைப் பார்த்தான். அவர் தொடர்ந்தார்.

''அப்படி நடக்காததற்குக் காரணம்... எங்கள் பெண்களின் பெருமை. கிடைத்ததோடு திருப்திகாணும் பண்பு... இவ்வளவு தான் என்று எண்ணும் நிலைமை.. நம்நாட்டுப் பெண்களுக்கு முதலனுபவம் கடைசி அனுபவமும் கணவனால்தான் கிடைக்கிறது. மேலத்தேயப் பெண்களைப்போல, பலபண்டங்களின் சுவைகளை அறிந்தபின், ஒருபண்டத்தை தெரிவு செய்யும் அனுபவம்...''

''இது சரியா?...''

''நல்ல கேள்விதான். ஆனால், நமது சமூகத்தில் ஆழமா வேரூன்றிப்போன...''

அவன் வேகமாகக் குறுக்கிட்டான்:

''இது சமூகச்சிறை, சேர்! வாழ்வை ஒவ்வொரு கணத்திலும் அனுபவிக்க வேண்டும். அதற்குத் தடைகள் இருக்கக் கூடாது...''

அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், பிறருக்கு இடைஞ்சல் கொடுப்பதாக இருக்கக் கூடாது...''

''என்றாலும், மயிலம்மைக்குச் சரியான தலைக்கெறுக்கு கொஞ்சம் அழகாக இருக்கிறாள் என்பதனால் வந்த கெறுக்கு...'

கனகவடிவேலர், அவனை ஆழமாக அளவிடுமாப்போலப் பார்த்தார். அவன் மனதின் உட்கிடக்கையை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

மயிலம்மை, செல்லம்மா மாதிரி இல்லை

''கணவனை இழந்து பரதவிக்கும் ஒரு பெண்ணைப்பற்றி இப்படிப் பேசக்கூடாது, தம்பி"

செல்வச்சந்திரன், தன் தவறைப் புரிந்து கொண்டு, மௌனமாக இருந்தான்.

மயிலம்மையின் அழுகை அந்தக் கரும்ப லைப்புலவின் இருளைக் கீறிக்கொண்டு, இடையிடையே எழுந்தது. மாரியப்பன் உண்மையில் கொடுத்து வைத்தவன் தான். உள்ளமுருகி கண்ணீர் விடும் அன்பான மனைவியை அவன் அடைந்திருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்திரன் விடைபெற்றுச் சென்றதன் பின்னர். கனகவடிவேலரால் உறங்க முடியவில்லை. திண்ணையில் உட்கார்ந்தவாறு வானத்தில் எதையோ அர்த்தமின்றிப் பார்த்தார். நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன.

மனிதர்களின் இரவு நடவடிக்கைகளை வானத்திலிருந்து ஆயிரம் கண்கள் அவதானிப்பதாகவே அவருக்குப்பட்டது.

கை நிறைய முதலிப்பழங்களை அள்ளி, அவரிடம் மயிலம்மை நீட்டினுள். உருண்டையான கபிலநிறப் பழங்களைக் கனகவடிவேலர் ஒருகணம் உற்றுப்பார்த்துவிட்டு, அவளை ஏறிட்டுப்பார்த்தார். அவர் பார்வையில் தெரிந்த அர்த்தத்தை அவள் புரிந்து கொண்டாள்.

''முதலிப்பழம்; ஐயா... சாப்பிட்டுப்பாருங்கள்...''

அவர் அவற்றை வாங்கிக் கொண்டார். புளியம்பழ ஓடு மாதிரி, உள்ளிருந்த வெண்பழுப்புப் பழத்தை கோது மூடியிருந்தது. கோதை உடைத்துவிட்டு, பழத்தை வாயிலிட்டுக் கொண்டார். விதையைச் சுற்றியிருந்த பழச்சதை, வெகு இலகுவாக விதையை விட்டு விலகி, வாயில் இனிப்பாகக் கரைந்தது. அதன் சுவை அவருக்குப் பிடித்துக் கொண்டது. வாயிலிருந்த விதையைத் துப்பி விட்டு, இன்னெரு பழத்தைச் சுவைக்கத் தொடங்கினுர்.

''நல்லா இருக்கிறது, மயிலம்மை! முன்னர் ஒருபோதும் இப்பழத்தை நான் சாப்பிடவில்லை .. நம்புட்டான் மாதிரி இருக்குது என்ன பெயர் சொன்னுய்?''

''முதலிப்பழம் ஐயா .. மூன்ருண்டுகளுக்கு ஒருமுறைதான் இந்தப்பழம் காய்க்கும் .. இந்தவரியம் கனக்கக் காய்த்திருக்கிறது இனிக்கொஞ்ச நாளைக்குக் கிராமம் முழுவதும் முதலிப் பழமாகத்தான் இருக்கும்...'' என்று மயிலம்மை புன்னகைத்தாள்.

கணவன் இறந்து நான்குமாதங்களாகின்றன. இழப்பின் கவலையைஅவள் படிப்படியாக மறந்து வருவதாகப்பட்டது. எனினும் அவள் நெற்றியின் வெறுமை அவள் இழப்பின் நட்டத்தைப் பறைசாற்றுவதாகத் தெரிந்தது.

மனச்சுமையை மாற்றும் மருந்து காலம்தான். அவள் பகல் வேளையில் பெரும்பொழுதை அவர் வீட்டில் கழித்தாள். முன்னர்போல அடிக்கடி தன் குடிசைக்கு ஓடிச்செல்லவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர் கொடுத்த சம்பளத்தில், புதிதாகச் சேலை ஒன்றும் வாங்கிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் கொஞ்சம் பழம் தரவா?"

"வேண்டாம்... போதும்! அதுசரி மயிலம்மை, நேற்று உன்னைப் பெரிய கமக்காரர் கூப்பிட்டனுப்பினரே...?"

அவள் சிலகணங்கள் எதுவும் பேசாமல், எங்கோ வெறித்துப் பார்த்தாள். அவள் விழிகளில் துயரத்தின் சுவடுகள் குடி கொண்டன.

"அவர் அங்கு வந்து இருக்கட்டாம்."

"போகப் போகிருயா..."

"இல்லை... எனக்கு அங்குபோய் அவர் வீட்டில் இருக்க விருப்பமில்லை. அவருடன் ஒரேயிடத்தில் நிம்மதியாக இருக்க அவர் சரியில்லை..." என்று கூறிவிட்டு, அவள் தரித்து நிற்காது, அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

கனகவடிவேலர் ஒருதடவை தன்னைச் சிலிர்த்துக் கொண்டார்; உதடுகளில் புன்முறுவல் படர்ந்தது. பெரிய கமக்காரரிடமும், மயிலம்மைக்குக் கசப்பான ஒரு அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

பெரிய கமக்காரருக்கு அறுபதுவயது இருக்குமோ?

வயதுக்கும் விருப்புக்கும் சம்பந்தம் கிடையாது. பெண் இருக்கும்வரை ஆண்களின் ஆசையும் குறையப்போவதில்லை.

மத்தியானம் சாப்பிடும்போது அவள் தானகவே சொன்னாள்.

"உங்களிடம் வேலைக்கு இருக்கிறன் என்று பெரியகமக்காரருக்குச் சொன்னேன். 'சரி சரி! அவர் போனதும், இங்கை வேலைக்கு வந்துவிடு— என்றார்..."

கனகவடிவேலர் அவள் கூறியவற்றை மனதில் வாங்கிக் கொண்டு, தலையைக் குனிந்தவாறு சாப்பிட்டார். அவள் சற்று நேர மௌனக்கழிவில் மீண்டும் மெதுவாகச் சொன்னாள்; "குடிசையில் ராவில தனியாவா இருக்கிருய் என்று கேட்டார்."

கனகவடிவேலர், நிமிர்ந்து அவளைப் பார்த்தார். அவள் அவர் கண்களைச் சந்திக்க முடியாதவளாக, முகத்தை எங்கோ பார்ப்பது போலத் திருப்பிக் கொண்டாள். விழிகள் நீரைச் சுமந்தன.

"சிலவேளைகளில் பெரியகமக்காரர், செல்லம்மாவின் குடிசைக்கு அவள் புரியன் இல்லாத வேளைகளில் வந்து போறவர். எனக்கு பயமாக இருக்கிறது, ஐயா! இந்த உலகத்தில் பயங்கரமான பிராணிகள் இந்த ஆண்கள்தான்! ஆற்றிற்கு குளிக்கச் செல்ல முடியவில்லை... புதியவிதானையார் வம்புக்கு அழைக்கிறார். தன் மனைவியையே மேயவிட்டுவிட்டு, கந்தசாமி என்னைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறன்! பெரியகமக்காரர் தனியவா இருக்கிருய் என்று கேட்கிறார்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகவடிவேலருக்கு இவற்றைக் கேட்க ஒருபுறத்தில் சிரிப்பும் மறுபுறத்தில் வேதனையும் வந்தன.

"என்ன செய்யப் போகிறாய், மயிலம்மை?"

"அதுதான் எனக்குத் தெரியவில்லை, ஐயா...! இந்த உலகத்தில் ஒருபெண் தனியாக வாழவே முடியாதா...''

அவளின் வார்த்தைகள், அடிமனதிலிருந்து ஜனித்த சத்திய வார்த்தைகளாக அவருக்குப்பட்டன. அவளை அவர் சரிவரக் கணித்திருப்பதாகவே நினைத்தார். அவருடன் அவள் பழக நேர்ந்து, ஏழுமாதங்களாகின்றன.

அவளின் செயல்களில், பேச்சில் எதுவிதமான தப்பெண்ணமும் ஏற்படக்கூடிய நிலையை அவர் உணரவில்லை. தனும் பாதகுடம் என அவர் எண்ணிக்கொண்டார்.

அவள் கேள்விக்கு அவரிடம் விடையிருக்கவில்லை. சாப்பிட்டு விட்டு எழும்போது அவர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

"உன் குடிசையில் இருக்க உனக்குப் பயம் என்றால், நீ இங்கேயே இருக்கலாம்"

அவள்முகத்தில் ஏற்பட்ட உணர்வுகளின் மாற்றங்களை அவர் அவதானிக்க விழையவில்லை. கையைக்கழுவி விட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டார். அவள் சாப்பிட்டுவிட்டுத் தன் குடிசையை நோக்கிப் புறப்பட்டாள்.

"என்னால் உங்களுக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது, ஐயா..'

அவர் வேறெதுவும் பேசவில்லை. திண்ணையில் ஒய்வாகச் சாய்ந்து கொண்டார். அப்படியே அமர்ந்து தூங்கிவிட்டார்.

அவர் கண்களை விழித்தபோது, அவர் முன் முத்தையா நின்றிருந்தான்.

"முத்தையா, நீ எப்போது வந்தாய்?"

"இப்பத்தான்... நான் வந்ததும் நீங்கள் முழித்திட்டியள்...''

அவர் எழுந்து திண்ணையில் அமர்ந்து கொண்டார்.

"நீ புறப்பட்டிருப்பதைப் பார்த்தால், முதலிப்பழம் பறிக்கப் புறப்பட்டது போல இருக்கிறது...?"

முத்தையா வியப்புடன் அவரைப் பார்த்தான்." எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

"எப்படியோ...?"

"நீங்களும் வாறியளா? உங்களுக்குத்தான் காட்டுக்கை திரியிறதென்றால் விருப்பமாச்சுதே ..?"

"இரு வாறன்... முத்தையா...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர், சிலநிமிடக்கழிவில் அவனுடன் புறப்பட்டார். அவர் கள் சலம்பை ஆற்றைக் கடந்து, கானகத்துள் புகுந்தார்கள்.

பிற்பகல் 3 மணி இருக்கும்.

காட்டில் வெகுதூரம் அவர்கள் நடக்கவில்லை; ஆற்றின் கரை யோரமாகச் சிறிதுதூரம் நடந்து வடக்கே திரும்பியதும் காணப் பட்ட வெட்டையின் முடிவில் முதலிமரங்கள் பழங்களுடன் சிலிர்த்துப்போய் நின்றன. மரங்களில் பறித்தும், நிலத்தில் பொறுக்கியும் முதலிப்பழங்களைச் சுவைத்துக் கொண்டிருந்த குரங் குகள் அவர்களைக்கண்டதும், கிளைதாவி காட்டினுள் புகுந்து மறைந்தன.

முத்தையா, மரமொன்றில் ஏறிச்சில கிளைகளை ஒடித்துத் கீழே போட்டான். கனகவடிவேலர், கிளைகளை எடுத்துப் பழங் களைப் பறித்து முத்தையா கொண்டுவந்திருந்த கடகத்திலிட் டார். சிலபழங்களை உடைத்து வாயிலிட்டுக் கொண்டார்.

"ஒரு விசயம் தெரியுமே, ஐயா...?"

மரத்திலிருந்த முத்தையாவை அவர் அண்ணுந்து பார்த்தார் என்ன?"

"பழையவிதானையாரின் மோளுக்குக் கலியாணம் நிச்சயமாக விட்டது..."

"செல்வச்சந்திரனு மாப்பிள்ளை?"

முத்தையா, மரத்தைவிட்டு வேகமாக இறங்கிக் கீழே வந் தான். அவன் முகத்தில் வியப்பு.

"உங்களுக்கு எப்படித்தெரியும்?..."

"எப்படியோ?..." என்று அவர் சிரித்தார்.

"பாவம், லக்சுமி......" என்று அங்கலாய்த்தான் முத்தையா, பெரியவிதானையார் தீரவிசாரியாமல் காலை விடுகிருர்..."

"என்ன விசாரிக்க இருக்கிறது! செல்வச்சந்திரனுக்கு என்ன குறை?..."

"என்ன குறையோ?—"

"பெண்கள் விசயத்தில் கொஞ்சம் சபலம் கூட.. அவ்வ ளவுதான்!"

"உங்களுக்கு என்ன தெரியும், அவனைப்பற்றி அவன் இந்தக் கிராமத்தில் ஒன்று ரெண்டோடயோ தொடுப்பு? லக்சுமிப் பெண்ணைதானும் தூக்கி வளர்த்தனுன். உண்மையைச் சொல்லி, விடப் போகிறேன்... ஐயா..."

"அப்ப கலியாணம் நடந்தது போலத்தான். எந்தப் பெண் ணும் தனக்குக் கணவனாக வருபவன், ஒரு இடத்தில் மட்டும் அனுபவமுள்ளவனாக இருப்பதை விரும்பமாட்டாள்; இந்தக் கம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணத்தை நீ தடுத்து நிறுத்தி விடமுடியாது! பெரிய விதானே யாருக்குச் செல்வச்சந்திரனின் நடத்தை தெரியாமலா இருக்கும்...? தெரியாமலா, அவனுக்கு மோட்டார் சயிக்கில் வாங்கப்பணம் கடனுகக் கொடுத்திருப்பார்?..."

"ஐயாவுக்கு இந்த ஊரில நடக்கிறது எல்லாம் தெரிந்திருக்கிறது..."

அவர்கள் திரும்பி வரும்போது முத்தையா புதியதொரு சங்கதியை மெதுவாகக் கூறினன்:

லக்சுமிப் பெண்ணின் மனசுதான் எனக்குப் புரியவில்லை...,

கனகவடிவேலர், முத்தையாவைத் திரும்பிப் பார்த்தார். வானத்தில் பறவையொன்றின் சிறகடிப்போசை எழுந்தது வானத்தைப் பார்த்தார். பெயர் தெரியாத பறவையொன்று தென் திசைப் பக்கமாக மெதுவாகப் பறந்து சென்றது.

"இந்தப் பக்கத்துக்குப் புதியபறவை..."
என்முன், முத்தையா.

"நீ ஏதோ சொன்னுயே?..."

"ஓமோம்... லக்சுமியைப் பற்றித்தான். அந்தப் பொடிச்சியின்ர மனசுதான் எனக்குப் புரியவில்லை... ஒரு பெண்ணின் மனசில் எத்தனை பேருக்கு இடமிருக்கும் ஐயா?"

அவன், அவரை வினவோடு பார்த்தான்.

"எனக்குத் தெரியாது..."

"ஒரு விடயம் சொல்லுறன்... ஒருவருக்கும் கூறக் கூடாது' ஐயா... பெரியவிடத்து விடயம்...லக்சுமி,இன்னெரு இளைஞனேடு நெருக்கமாகப் பேசிக்கொண்டிருந்ததை நான் இரண்டு மூன்று தடவை கண்டிருக்கிறேன். ஒரு நாள் அதிகாலை... நிலம் தெரியாத இருளில் லக்சுமியும் அவனும் நின்றிருந்தார்கள்... அவள் விம்மி விம்மி அழுததைக் கேட்டேன்! என்னை அவர்கள் காணவில்லை... இன்னெரு நாள், பிள்ளையார் கோவில் வீதியில் அந்த இளைஞனேடு அவள் பேசியதைக் கண்டன்... போனகிழமை சலம்பை ஆற்றங்கரையில் அவர்கள் ஒருவர் கரத்தை ஒருவர் பற்றியபடி நிற்கும்போது கண்டன். ஒரு வருடத்திற்கு மேலாக அவர்களுக்குள் தொடர்பு இருப்பதாக எனக்குப்படுகிறது. ஐயா... அப்படியிருக்க செல்வச்சந்திரனைக் கட்ட எப்படி சம்மதிக்கிறதோ?..."

கனகவடிவேலர் எதுமே பேசவில்லை. அவர் மனதில், லக்சுமிக்காக இரக்கம் தோன்றியது.

"பெரிய விதானையார் கட்டாயப்படுத்தியிருப்பார்..."

"அப்படித்தான் இருக்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்சுமியிடம் புதிய விதானையாரைப் பற்றிச் சொல்லவா போகிறாய், முத்தையா?...''

"சொல்லத்தான் போறன்...?''

அவர் எதுவுமே பேசவில்லை. மாலை கவிந்து கொண்டிருந்தது. பறவைகள் இரவுக்கான உறைவிடங்களை நாடி திரள்திரளாக வானத்தில் விரைந்து கொண்டிருந்தன.

சலம்பை ஆற்றைக்கடந்து அவர்கள் கரும்பாலைப்புலவிற்குள் வந்தபோது, செல்வச்சந்திரனின் மோட்டார் சயிக்கில் இரைந்த படி செல்வது கேட்டது.

''ஐயா, ராவைக்கு மரைவத்தல் கொண்டு வந்து தாறன்... சமைக்கிறதுக்கு! வீட்டில கிடக்குது... மயிலம்மைக்குச் சொல்லுங்கோ...'' என்று கூறிவிட்டு முத்தையா, விடைபெற்றான்.

கனகவடிவேலர் வீட்டிற்கு வந்தபோது மயிலம்மை திண்ணையில் திக்பிரமை பிடித்தவள் போல அமர்ந்திருந்தாள். அரிக்கன் லாந்தரை ஏற்றி, இறப்பில் கொழுவி விட மறந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

அவர் தலைவாசலில் ஏறியபோது தான் அவளுக்குச் சுய நினைவு வந்ததுபோலப்பட்டது. திடுக்கிட்டு எழுந்து நின்றாள்; அவள் அழுதிருப்பது தெரிந்தது.

''என்ன மயிலம்மை...?''

அவரைக் கண்டதும் அவள் விக்கி விக்கி அழுதாள்.

''புதிய விதானையார் இங்கு வந்தாரா?''

அவள் 'ஆமெனத்' தலையை அசைத்தாள்.

''தவறாக நடந்து கொண்டானா?''

''நீங்கள் எங்கை என்று கேட்டான். முத்தையாவுடன் போனதாகச் சொன்னேன்! ஏதோவெல்லாம் பிதற்றினான்... என் கரத்தைப் பற்றிய போது, ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்து விட்டேன்...''

அவர் எதுவும் பேசவில்லை. மயிலம்மையை ஏறிட்டுப் பார்த்தார். அவள் ஒரு காட்டுப் புஷ்பம் தான்.

''பயப்படாதை' மயிலம்மை!... அவனோடு நான் கதைச்சு உன் வழிக்கு வராமல் பார்த்து விடுகிறேன்...''

''நான் இங்கேயே இருந்துவிடுகிறேன், ஐயா...''

''உனக்கு அது பாதுகாப்பென நீ நினைத்தால் இங்கேயே இருக்கலாம்...',

அவள் அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைச் சுற்றியே பிரச்சினைகள் உருவாகுவதாக அவர் எண்ணிக் கொண்டார். எந்தப் பிரச்சினையை எடுத்தாலும், அதன் பின்னால் ஒரு பெண் இருப்பாளோ?

முத்தையா மரைவத்தல் கொண்டுவந்தபோது, அவனுடன் பெரிய கமக்காரரும் கூடவே வந்தார். அந்த நேரத்தில் பெரிய கமக்காரர் மயில்வாகனத்தைக் கனகவடிவேலர் எதிர்பார்க்கவில்லை. பொதுவாக வில்வண்டியில் வருபவர், கால் நடையாக வந்திருக்கிறார். வழக்கமாகக் காணப்படும் தோற்றத்திலும் பார்க்க சற்று அலங்காரமான தோற்றப் பொலிவோடு அவர் காணப்பட்டார்.

கனகவடிவேலர், அவரை வரவேற்றுத் திண்ணையில் இருக்கச் செய்தார். அவர் கண்கள் யாரையோ ஆவலோடு தேடின.

''மயிலம்மை, நீ இங்கேயா இருக்கிறாய்?''

அடுக்களைக்குள் இருந்த மயிலம்மையிடம் பெரிய கமக்காரர் பேசினார்.

அதிகாலையின் இனிய மலர்ச்சியைக் குலைப்பதுபோல் சலம்பை ஆற்றின் பக்கமிருந்து யானை ஒன்றின் பிளிறல் ஒலி எழுந்தது. வாங்கு ஒன்றில் விரித்திருந்த புற்பாயில், அமைதியாகப் படுத்திருந்த கனகவடிவேலரின் அதிகாலை உறக்கத்தை பிளிறல் ஒலி கலைத்தது. அவர் கண்களைத் திறந்தபோது, கால் மாட்டில் ஓர் உருவம் அமர்ந்திருப்பது தெரிந்தது.

ஒரு கணம் இதயத்தில் பயத்துடன் கூடிய திடுக்காட்டம் பரவியது. தலைவாசலில் மெல்லிய இருள் நிறைந்திருந்ததால், அந்த உருவத்தை அவரால் சட்டென அடையாளம் காணமுயலவில்லை.

''யாரது......'' என்று சற்றுப்பலமாகவே கேட்டார்.

''டடி......அது நான்...''

உடல் முழுவதும் அந்த வார்த்தைகளின் வாத்சல்யம் குளிர்ச்சியாகப் பரவியது. அவர் விருட்டென்று எழுந்து, அப்படியே சீராளனை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

''சீராளா... மை,சன்......''

அவர் அணைப்பில் அவன் கட்டுண்டு இருந்தான். தந்தையின் பாச அணைப்பின் தீயில் அவன் தன்னை புடமாக்குவதாக உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டடி...''

அவன் புறங்கையில், சூடாக நீர்துளிகள் இரண்டு விழுந்து, தெறித்தன.

''டடி...? என்ன இது? நீங்கள் அழலாமா?...'' அவன் குரல் தளுதளுத்தது. அவனுல் எதுவுமே பேசமுடியவில்லே: ''டடி...' என்று விம்மியவாறு அவர் மடியில் தன்னேப் புதைத்துக் கொண்டு, அழத் தொடங்கினுன். இருபத்தி மூன்று வயது இளேஞன், சிறு குழந்தையாகத் தந்தையின் மடியில் முகம் புதைத்து அழுதான். ஒருபுறம் வன்மமும், மறுபுறம் பாசப்பிணேப்பும் அவனே அழ வைத்தன. கனகவடிவேலர், மகனின் தலேயையும் முதுகையும் அன்போடு தடவிவிட்டார். வார்த்தைகளால் அவனே ஆறுதல் அடைய வைக்க அவர் விரும்பவில்லே.

அவனேப் போன்ற இளேஞர்களால், பாசத்திற்காக இன்று அழத்தான் முடியும்.

இரண்டு நீண்ட ஆண்டுகளுக்குப்பிறகு அவனே அவர் காண்கிருர். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு காணுமல் போன, அவனே இன்றுதான் இந்தக் காட்டுக் கிராமத்தில் காண்கிருர்.

கிழக்கு வெளுக்கத் தலேவாசலில் ஒளி பரவத் தொடங்கியது. சீரளன், கண்களேத் துடைத்தபடி எழுந்து, தந்தையைப் பார்த்துக் கவலேயோடு சிரித்தான்.

''எப்படி இருக்கிருய், சீராளா?''

''எப்படியோ இருக்கிறேம், டடி! அவற்றை விடுங்கள்...... இதென்ன கோலம்? பரதேசிபோல...? வீடு, வாசல், எல்லாவற்றையும் துறந்து இந்தக் காட்டுக்கை ஏன் வந்தியள்? நீங்கள் இங்கு இருப்பதாக தோழர்கள் கூறியபோது, என்னுல் நம்ப முடியவில்லே, டடி? ஏன் இங்கை வந்தியள்...?''

அவர், மகனே ஆழமாக விட்டுப் பாாத்தார்.

''அமைதியைத் தேடி வந்தன், சீராளா! எனக்கு நகரத்தின் யந்திரமயமான அவல வாழ்வும் இரைச்சலும் பிடிக்கவில்லே கிராமப்புறங்களிலாவது பழைய வாழ்க்கையின் இனிய அமைதி கிடைக்குமா என்று வந்தன்...''

''பொய், டடி. யாரை இதை நம்பச் சொல்லுறியள்? என் பிரிவை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லே. எனக்குத் தெரியும். மம்மி இறந்தபோது கூட நீங்கள் அவ்வளவு கலங்கவில்லே... நாங்கள் உங்க கூடவிருந்தோம்! அக்கா கலியாணமாகிக் கனடாவிற்கும், அண்ணே கலியாணமாகி லண்டனுக்குப் போனதும், நானும் நீங்களும் இருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களின் தனிமையை, பிள்ளைகளின் பிரிவை, மம்மியின் இறப்பை - உங்களுடன் கூடவே நானிருந்ததால் மறந்திருந்தீர்கள் டடி... உங்கள் டயறிகளை நான் படித்திருக்கிறேன். நீங்கள் எங்கள் மீது எவ்வளவு பாசத்தை வைத்திருக்கிறியள் என்பதை உணர்ந்திருக்கிறேன்... 'யோகம், நீ இறந்து விட்டதை நான் நம்பமாட்டேன். எம் குழந்தைகள் என்னுடன் இருக்கும் வரை நீ என்னுடன் தான் இருப்பாய் என்று ஒருபக்கத்தில் எழுதியிருந்தீர்கள்! என்னை லண்டனுக்கோ, கனடாவிற்கோ அனுப்ப எவ்வளவு முயன்றீர்கள். நான் ஏன் மறுத்தேன்? உங்களை இங்கு தனிய விட்டுவிட்டு, அனுவை போல விட்டுவிட்டுப் போகவிரும்பாமல் தான், டடி. ஆனு, ஆனு...... இப்ப உங்களை இந்தக்கோலத்தில் ..... " அவன் மீண்டும் கலங்கத் தொடங்கினுன்.

கனகவடிவேலர் எதுவும் பேசவில்லை, சீராளனின் தோளில் அன்புடன் கரம்பதித்தார்.

"நான் சந்தோசமாகவே இருக்கிறேன். இந்தக் கிராமத்தின் சூழல் எனக்கு நிம்மதியைத் தருகிறது. காடும், நதியும், பறவைகளும் மிருகங்களும் கிராம மனிதரும் எனக்கு நிம்மதியைத் தருகின்றனர்...''

வெளியே ஒளி பரவியது. அவன், வெளியே பார்வையைப் படரவிட்டான்.

"நீ எப்ப வந்தாய், சீராளா?...''

''நீங்கள் விழிப்பதற்குச் சற்று முன்னர் தான்..."

' இங்கல்ல...இந்தக் கிராமத்திற்கு ''

அவன் மௌனமாக இருந்தான். பறவைகளின் ஆரவார ஒலி பகலின் கடமைகளை நினைவூட்டியது.

''டடி... ஒன்று சொல்கிறேன்... செய்வீர்களா...?''

அவர் சரியெனத்தலையை அசைத்தார்.

நீங்கள் அண்ணரிடம் லண்டனுக்கோ, அக்காவிடம் கனடாவிற்கோ சென்றுவிடுங்கள்...''

அவர் சிலகணங்கள் பேசாதிருந்தார்.

''யாழ்ப்பாணத்தின் நவீனவாழ்வை வெறுத்து கிராமத்திற்கு வந்திருக்கிறேன். என்னைப்போய் லண்டனுக்குப் போகச் சொல்கிருய்? அங்கு போனுல் எனக்குத் தலை வெடித்துவிடும்..."

''சும்மா... காரணம் சொல்லாதீங்கள், டடி' எனக்காகவாவது லண்டனுக்குப் போங்கள்...''

கனகவடிவேலர் அவனைத் தீர்க்கமாகப்பார்த்தார். பின் "அப்படியென்ருல், நீயும் கூடவருகிருயா சீராளா...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விருட்டென வாங்கைவிட்டு, எழுந்து நின்ருன்.

"அது முடியாது... அப்படி ஓட முடியாது, டடி."

அடுக்களையைத் திறந்துகொண்டு, அப்போதுதான் மயிலம்மை வெளியில் வந்தாள். தலைவாசலில் கனகவடிவேலரும் இன்னெருவரும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவள் வியப்படையவில்லை. எதுவும் பேசாமல் வெளியே நடந்தாள்.

சீராளன், மயிலம்மையை ஒருகணம் ஏறிட்டுப் பார்த்தான். பின்னர் தந்தையைப் பார்த்தான். அவன் பார்வையில் ஒரு மாறுதல் தென்படுவதாக அவர் உணர்ந்தார்.

"அது மயிலம்மை... சமையல்காரி"

"டடி என்னை மறந்திடுங்க... நீங்க அண்ணரிடம் போயிடுங்க..."

அவர் விரக்தியாகச் சிரித்தார்.

சலம்பைஆற்றின் பக்கமிருந்து, ஒரு விசித்திரமான பறவையின் குரல் ஒலித்தது. அக்குரலை சீராளன், செவிமடுத்துக் கேட்டான்.

"நான் வாறன், டடி..."

"ஒருநாளாவது என்னுடன் இருந்துவிட்டுப் போவன் சீராளா...?"

அவன் தயங்கி நின்று, அனபோடு தகப்பனைப் பார்த்தான்.

"வாறன், டடி..." வாசலைநோக்கிச் சென்றவன். தயங்கி நின்று அவரைப்பார்த்தான் "டடி... மம்மியின் இடத்தை எவருக்கும் விடாதீர்கள். அதை என்னால் தாங்கமுடியாது..."

அவர் வேகமாக வாங்கைவிட்டு எழுந்து திகைப்புடன் நின்ருர். சிலநிமிடக்கழிவில் அவர் உதடுகளில் துயரத்தின் கீறல்களாக முறுவல் படர்ந்தது. மீண்டும் வாங்கில் அமராது, திண்ணையில் இருக்க நாடியபோது, முத்தையா பரபரப்புடன் வேகமாக வந்தான்.

"ஐயா, இப்ப இங்க வந்திட்டுப்போறது யார்...?" வந்ததும் வராததுமாக முத்தையா கேட்டான். அவர் ஏதோ நினைவில், அவன் யாரெனக்கூற எண்ணியவர், உதடுகளைக் கடித்துக் கொண்டார்.

"ஏன், முத்தையா...?"

"இந்தப் பொடியன்தான் நான் சொன்ன பொடிய...?

"எனக்கு விளங்கவில்லை, எந்தப் பொடியன்?"

"பெரிய விதானையாரின் மகள் லக்சுமியுடன் பேசிற பொடி! அந்தப்பொடிய ஏன் இங்கை வந்தவன்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகவடிவேலர் வியப்புடன் அவனைப் பார்த்தார். இதயம் 'கடவுளே' என ஏங்கியது.

''நீ சொல்வது மெய்தானா, முத்தையா?''

''சிவசத்தியமாக இந்தப் பொடியன்தான்...''

அவர் இதயம் ஒருகணம் வேகமாகத் துடித்தது. இதற்கு விளக்கம் எப்படிக்கூறுவது? விதி என்பது இதைத்தானோ? நியதி என்பது இதைத்தானோ? எங்கோ பிறந்து வளர்ந்த சீராளனை இங்கே கொண்டுவந்து, அதுவும் அவர் கண்முன், முன்பின் தெரியாத ஒரு கிராமத்துப் பெண்ணுடன் இணைத்து நிறுத்தியிருக்கிறதே?

இருவருக்காகவும் அவர் இதயம் கலங்கி அழுதது. பாவம். அந்தப்பெண். சீராளன் யார் என்பதைப் புரிந்துதான், காதலிக்கிறாளா? சீராளா, நீ விரும்பிய பெண்ணை உனக்குக் கட்டி வைத்து நீ மகிழ்ச்சியாக வாழ்வதைக்காண நான் கொடுத்து வைக்கவில்லை?

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. வாய்மூடி மௌனியாகி அப்படியே திண்ணையில் அமர்ந்து விட்டார்.

''அந்தப் பொடியனை உங்களுக்குத் தெரியுமா, ஐயா?'' என்று முத்தையா கேட்டான்.''

இதற்கு என்ன பதிலை அவர் கூறமுடியும்!

''தெரியாது...'' என்றார், இதயம் பெருங்குரலில் அழ, அவர் வாய் மனதறிந்து பொய்யுரைத்தது.

'ஏன் பொய்கூறவேண்டும்?' மனச்சாட்சி அவரை ஓங்கி அறைந்தது.

''புதிய விதானையாருக்கும் லக்சுமிக்கும் பேசிய சம்பந்தம் குழம்பிவிட்டது, ஐயா. பெரியவிதானையாருக்குச் செல்வச்சந்திரனைப்பற்றிய விஸயங்கள் எல்லாம் தெரிஞ்சு போச்சுது! பொடிச்சியும் தீர்மானமாக மறுத்துவிட்டுது என்று கேள்வி... புதுவிதானைக்கு உங்களில் சரியான கோபம்...''

அவர் முத்தையாவைத் தலைநிமிர்த்திப் பார்த்தார். அவன் தொடர்ந்தான். ''நீங்கள்தான், பெரியவிதானையாருக்கு ஏதோ சொல்லியிருக்க வேணுமாம்! இங்க பெரியவிதானையார் வந்திட் போன பிறகுதானும், கலியாணத்தைக் குழப்பியவராம்... என்று ஏசினான்...''

அவர் எதுவும் பேசவிரும்பவில்லை; அவரைப் பொறுத்தவரையில், கிராமத்தின் ஆத்மா அழியத் தொடங்குவதாகப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குச் சாட்சியமாக, இருந்தாற்போல, பிள்ளையார் கோவில் பக்கமிருந்து 'லவுட்ஸ்பீக்கர்' ஒன்று முதலாகப் பெருங்குரலில் பாடத்தொடங்கியது. முதற்பாடலே, 'ராத்திரிநேரம்... அம் மம்மா... அம்மம்மா...' என்று அமைந்தது. அவர் செவிகளில் இயற்கையின் குரல்கள் அதிந்து போக, சூழலை மாசுபடவைக் கும் குரல்கள் நாராசமாக இறங்கின.

''எங்கட கிராமத்துக்கு இன்றைக்கு ஒருவிதமாக விடிவு வந் திருக்கிறது, ஐயா...'' என்றான் முத்தையா! ''முதன் முதலாக எங்கட கிராமத்துக்கு பஸ் வரப்போகுது. ஆரம்பித்து வைக்க பெரியாக்கள் எல்லாம் வருகினம். அதோடு, வாசிகசாலையும் ஒன்று திறக்கினம்.''

கனகவடிவேலர், முத்தையாவை இரக்கத்தோடு பார்த்தார்.

''எங்கட கிராமம் இனி முன்னேறிவிடும். பெரிய கமக்கார ரின்ர மூத்தமகன் ஒருவான் ஒன்றும் வாங்கியிருக்கிறாராம்! இன் னொரு புதினம், சினிமாப்படம் காட்டுற பெட்டியொன்றும் வாங் கியிருக்கிறாராம்... இனி ஒவ்வொருநாளும் படம் பார்க்கலாம்.''. முத்தையாவின் வார்த்தைகளில் புதிய மாறுதல்களை வரவேற்கும் ஆர்வ மகிழ்வு நிறைந்திருப்பதை இவர் அவதானித்தார். ஒரு குழந்தையின் குதூகலம் அவனில் தெரிந்தது.

அறுகுவெளிக்கிராமத்தின் ஆத்மா நவீனத்துவத்தின் வரு கையால் சீரழியத்தொடங்கிவிட்ட செய்தியை அவன் புரிந்து கொள்ளமாட்டான். மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைதாம்.

இவ்வளவு விரைவாக இந்தக்கிராமத்தை நவீனத்துவம் ஆக் கிரமிக்குமென அவர் எதிர்பார்க்கவில்லை. வயலும் காடும் நதியும் வேலையும் தந்த அமைதியையும், இயற்கை அழகையும் நவீனத் துவத்தின் புகைகக்கும் வாகனங்களும் சப்தமெழுப்பும் சாதனங் களும் தரப்போவதில்லை.

இயற்கையின் எழிலும், இயற்கையின் குழந்தைகளும் இந் தக் கிராமத்திலிருந்து படிப்படியாக வெளியேறப்போகின்றன. அதிகாலையிலிருந்து, குரல் எழுப்பும் ஒலிபெருக்கியின் அவலஒலி கரும்பாலைப்புலவில் அதிகாலையில் கூடும் பறவைகளைப் பதற வைத்துள்ளது.

அதிகாலையில், உயர்ந்த பாலைமரக்கொப்பரில் வந்து அமர்ந்து புலவிற்குள் ஊரும் உயிர்உணவுகளை அவதானித்து கௌளி வானில் எழும் மயில்கள். இன்று மரக்கிளையில் அமர்ந்த கையோடு ஒலிபெருக்கியின் சப்தத்தால் அமைதியிழந்து வடபுற ஏக்கத்தோடு பறந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகவடிவேலர் ஆற்றை நோக்கி நடக்கத் தொடங்கினுர். சலம்பை ஆற்றின் கரையில் சற்று நேரம் தரித்து நின்றுர். ஆற்றில் மயிலம்மை குளித்துக் கொண்டிருந்தாள். அவிழ்ந்தது தொங்கிய கூந்தல், இடைக்குக் கீழ் தாழ்ந்து கிடந்தது. குறுக்குக்கட்டுடன் அவள் நின்றிருந்த கோலம், இயற்கையின் அழகிற்குத் திரையிட்ட மாதிரி இருந்தது.

''மயிலம்மை... ''என்று மெதுவாக அழைத்தார். அவள் திரும்பி அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஐயா...''

''நான் இந்த ஊரைவிட்டுப் போகப் போகிறேன்...'' அவள் துடித்துப் போய் அவரைப் பார்த்தாள். அழுது விடுவாள் போல விழிகள் கலங்கின.

''நானும் உங்களுடன் வருகிறேன், ஐயா... எனக்கு இங்கு யாருமில்லை...''

அவர் ஒரு கணம் சில்லிட்டு நின்றுர்.

ஒரு கணந்தான்.

''அது சாத்தியமில்லை, மயிலம்மை. நேற்று நீ கேட்டிருந்தால் ஒப்புக் கொண்டிருப்பேனே தெரியாது...''

அவள் ஆற்றின் நடுவில் அப்படியே நிலைகுத்திப் போய் நின்றிருந்தாள். அவள் முகம் வாடிச் சோர்ந்தது. எதுவும் பேசமுடியவில்லை. விழிகள் நீரைச் சொரிந்தன.

அவளைப் பார்க்கும் துணிச்சல் அவருக்கு இல்லை. பாவம் பரிதாபத்துக்குரிய பெண்.

அனுதை.

அவளுக்காக அவர் இதயம் கலங்கியது. 'பணத்தால் கஷ்டமின்றி வாழ்வதற்கு அவளுக்கு ஏதாவது உதவி செய்யவே வேண்டும்' என எண்ணிக் கொண்டார்.

அவர் ஆற்றில் இறங்கி, முகம் கழுவிக்கொண்டார். பின்னர் வீதியிலேறி ஒடக்கரை நோக்கி நடக்கத்தொடங்கினுர். கிழக்கில் சூரியன் எழுந்து கொண்டிருந்தான். மணலாற்றை நெருங்கிய போது, மோட்டார் சயிக்கிலில் செல்வச்சந்திரன் வேகமாக வருவது தெரிந்தது. அவன் அவர் அருகில் மோட்டார் சயிக்கிலை நிற்பாட்டினுன்.

''சேர்... நீங்கள் இப்படி அள்ளிவைத்திருக்கக்கூடாது...''

அவர், அவனை ஆழமாக ஏறிட்டுப்பார்த்தார்.

''நீர் என்ன கதைக்கிறீர்...?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியவிதானேயாரிடம் என்னைப்பற்றிக் கூறி, கலியாணத்தை நிற்பாட்டி விட்டியள்... நான் செல்லம்மாவை வைத்திருந்தால் என்ன, சேர்? நீங்கள் இந்த வயதிலை மயிலம்மையை வைத்திருக்கவில்லையா? நாங்க கேக்கிறேமா...?"

அவர் இதயத்தின் ஒரு மூலையை அவன் வார்த்தைகள் தாக்கின. சீராளன் வெகுபண்பாகக் கேட்டதையும் அன்பாக எச்சரித்ததையும், செல்வச்சந்திரன் வெளிப்படையாக அநாகரிகமாகக் கேட்கிறான்.

"நான் உன் கலியாணம்பற்றி எவருடனும் பேசவில்லை என்று நான் சொன்னாலும் நீ நம்பப்போவதில்லை... என்னைப்பற்றி நீ கூறுவது பொய் என்றாலும் நீ ஏற்கப்போவதில்லை. அதனால் உன்னோடு கதைக்க நான் தயாராகவில்லை..."

அவர் அவ்விடத்தை விட்டு நடக்கத் தொடங்கினார். செல்வச்சந்திரன் அடங்கா ஆத்திரத்துடன், மோட்டார் சயிக்கிலைச் செலுத்திக் கொண்டு சென்றான்.

அவர் சற்று நேரம் மணலாற்றில் நின்றிருந்தார். மயிலம்மையின் பரிதாபக்கோலம் மனக்கண்களில் எழுந்தது.

"என்னையும் உங்களுடன் கூட்டிக்கொண்டு போங்கள் ஐயா..." என்று அவள் அவரிடம் யோசித்தாள். அவள் நின்ற கோலம்...கலங்கிய விழிகள்... உலகம் என்ன சொல்லும்?

சமூகம் எதைத்தான் சொல்லாது.

மனதில் பச்சாதாபமும் அதைமீறி சிறியதொரு சலனமும் எழுந்தது.

கரும்பாலைப்புலவை நோக்கி நடக்கத் தொடங்கினார். தூரத்தில் வரும்போதே, கரும்பாலைப் புலவின் மூலையில், செல்வச்சந்திரனின் மோட்டார் சயிக்கில் நிற்பது தெரிந்தது.

மனதில் இனந்தெரியாத கலக்கம்.

ஆற்றில் மயிலம்மை குளித்துக் கொண்டிருந்தாள். செல்வச்சந்திரன் எதற்குந் துணிந்தவன். வேகமாக நடந்து வந்தார். சலம்பை ஆற்றின் கரையோரமாகக் குளிக்குமிடத்திற்கு விரைந்து வந்தார்.

எவரையும் காணோம்

அவலக்குரல் ஏதாவது கேட்கிறதா என்றும் அவதானித்தார்; எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரக்கழிவில், ஆற்றின் எதிர்க்கரையில் செல்வச்சந்திரன் தெரிந்தான். அவன் ஆற்றில் இறங்கி இக்கரைச்கு வ... தான்.

அவரைக் கண்டதும் திடுக்கிட்டு நி ன்றவன், மறுகணம் ஏளனச் சிரிப்புடன் விரைந்து சென்ருன்.

அவர் செய்வதறியாது நின்றிருந்தார்

எதிர்க்கரையில், மயிலம்மை ஆற்றில் இறங்கி வருவது தெரிந்தது. அவள் ஆற்றில் முழுகி, உடலிலிருந்த மண்ணைக் கழுவிக் காண்டாள். கரையேறியபோது, எதிரில் கனகவடிவேலர் நிற்பதைக் கண்டதும், அவள் விழிகள் அவரை ஏறிட்டுப் பார்க்கத் துணிச்சலின்றி சோர்ந்தன.

"எனக்கு வேறு வழி தெரியவில்லை, ஐயா"

"மயிலம்மை?..."

"என்னைக் கூட்டிச் செல்ல உங்களுக்குத் துணிச்சலில்லை.. ... இந்த உலகத்தை விட்டுப்போக எனக்கும் துணிச்சலில்லை......

அவள் வேகமாகக் கரையேறி, கரும்பாலைப் புலவிற்குள் புகுந்து கொண்டாள். அவர் அப்படியே ஆற்றங்கரைப் பாறையில் அமர்ந்துகொண்டு சலசலத்தோடும் ஆற்றுநீரை வெறித்தள் பார்த்தார். நடந்து முடிந்தவற்றை ஜீரணிப்பது சிரமமாகவிருப்பது.

இந்த உலகத்தின் புறத்தோற்றத்தில் மாறுதல்கள் விரைவாக ஏற்படுகின்றன; ஆனால், ஒரு விடயத்தில் மட்டும் உலகம் பழைய உலகமாகத்தான் இருக்கிறது

ஏமாற்றம் மனதில் பரவுவதுபோல ஒரு உணர்வு.

அந்த உணர்வு வெகுநேரம் நீடித்தது.

அறுகுவெளிக்கிராமத்தின் வயல்வெளியைக் கடந்து, காட்டுப் பாதையில் ஏறியபோதும் அந்த உணர்வு இருந்தது. வயல்வெளியில் நடந்தபோது, எதிரில் முத்தையா ஓடிவந்தான்.

"ஐயா... போறியளா...?"

"ஓம்... முத்தையா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கை...?"

''அமைதியையும் மனிதரையும் தேடி...''

அவரை அவன் வியப்புடன் பார்த்தான். ஆறுமாதங்களுக்கு முன் அவரை அவன் சந்தித்தபோது, இருந்த அதே கோலம் அவரை அவனால் தடுக்கமுடியவில்லை. அவர் வழங்கிய பணத்தை நன்றியுடன் பெற்றுக்கொண்டான்

அவர் வந்தபோது மேடும் பள்ளமுமாகக் கிடந்த வீதி, இற வில் போடப்பட்டுச் சீராகத் தெரிந்தது. அவர் அந்த வீதியில் நடந்துகொண்டே, இருபக்கமும் அடர்ந்து கிடக்கும் காட்டுமரங் களைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

இவை இன்னமும் எவ்வளவு காலத்திற்கு மனிதனின் கை படாமல் இருக்கப்போகின்றன?

தூரத்தில் பஸ்ஒன்றின் இயந்திர இரைச்சல் கேட்டது. புழு தியைக் கிளப்பியபடி பஸ், அறுகுவெளிக்கிராமத்திற்குள் பிரவே சிக்க அட்டகாசமாக வந்துகொண்டிருந்தது.

அவா ஒதுங்கி வழிவிட்டார்,

பஸ் கண்ணிலிருந்து மறையும்வரை ஏனோ, அதனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

மீண்டும் பாதையில் நடந்த, ஒரு திருப்பத்தில் திரும்பிய போது. எதிரில்——

கவசவாகனம் ஒன்றும் அதனைத்தொடர்ந்து ஏழு எட்டு டிறக்குகளும் விரைந்து வருவது தெரிந்தது. அவர் பாதையை விட்டுக் கீழே இறங்கி நிற்க, அவை அறுகுவெளிக்கிராமத்தை நோக்கி விரைந்து சென்றன. மனம் கனத்தது.

அவற்றின் இரைச்சலால், காட்டுமரங்களில் இருந்த பறவை கள் வானத்தில் சிறகடித்தபடி எழுந்தன.

அவை பறப்பது அவலட்சணமாக அவருக்குத் தெரிந்தது. கால்கள் நடக்கத்தொடங்கின.

## முடிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்
நம்பி நாடுங்கள்.

# ஐடியல் ஏஜென்சி

* இல்லத்தரசிகளே
* மனையியல் கற்கும் மாணவிகளே
* பேக்கரி உரிமையாளர்களே
* கிறீம் கவுஸ் உரிமையாளர்களே
* பழரச தயாரிப்பாளர்களே

உங்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# IDEAL AGENCY

**ESSENCE CANAL**

267 B Poir House Road. Jaffna
T' Phone: 23648

# HONDA

## புது மொடல்கள்

**C- 70 - 15,500/-**
**C- 90 - 16,500/-**
லக்கேஜ் கரியர் - 900/-

# கன்ராபியா லிமிட்

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
போன்: 24201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படைப்பாற்றலுள்ள அரசாங்க நிர்வாகிகள் இலங்கையில் பொது மக்கள் பற்றிய மறக்க முடியாத இலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளனர். லியனுட்வூல்ஃப் முதல் லீல் குணசேகர வரை இதனைக்காணலாம். தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தளவில் செங்கை ஆழியான், யோகநாதன், கதிர்காமநர்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் தான் கடமையாற்றிய பகுதியின் சமூக உறவுகளையே தனது படைப்பிலக்கியங்களின் பிரதான குவி மையமாகக் கொண்டு காட்டுவதில் செங்கை ஆழியான் முன்னுக்கு நிற்கின்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி - 'இந்த நாடு உருப்படாது' நாவல் முன்னுரையில்.

ரஜனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org